உ

கடவுள் துணை.

# அகஸ்தியமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியரத்தினச்சுருக்கம்-ஙசூய

இஃது

தொண்டமண்டலம்-வல்லக்காளத்திநகர்

வீ - அயோத்திதாசகவிராஜ

பண்டிதரவர்களால்-பரிசோதித்து

## அ-வீராசாமிநாயகர்

அவர்களால்

புங்கத்தூர்

## ம - சபாபதிமுதலியார்

அவர்களது

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஹு-பங்குனிமீ.

T004545
Sarasvati Mahal Library. Thanjavur

உ

சிவமயம்

# அகஸ்தியமுனிவரருளிய

## வயித்தியரத்தினச்சுருக்கத்து

## மருந்தின் தலைப்புகளின்

## அகராதி.


| பக்கம். | பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|
| ௧ | நாடிநிதானம் | ௰௨ |
| ௩ | நாடிபார்க்குங்காலம் | ௧ |
| ,, | நாடிஇலக்கணம் | ௰௬ |
| ௬ | ஸ்ரீபுருஷர்களுக்கு நாடிபார்க்கும்வகை | ௮ |
| ,, | நாடிபார்க்குமாதவகை | ௨ |
| ,, | சித்தானந்தவயிரவம் | ௨ |
| ௭ | இரசானந்தவயிரவம் | ௧ |
| ,, | வாதராட்சதன் | ௩ |
| ௮ | சுயமக்கினி | ௨ |
| ௯ | இதுவுமொருவகை | ௨ |
| ,, | கபாடமாத்திரை | ௩ |
| ௰ | பூபதிகுளிகை | ௪ |
| ௰௧ | ரசசிந்தாமணி | ௫ |
| ௰௩ | கோரோசனைகுளிகை | ௩ |
| ௰௪ | பூமணிகுளிகை | ௨ |
| ,, | அர்த்தநாரீஸ்வரம் | ௪ |
| ௰௫ | சிலோதாரிமணி | ௨ |
| ௰௬ | கரிசாலைலேகியம் | ௭ |
| ௰௮ | கண்டாத்திரிலேகியம் | ௪ |
| ௰௯ | பஞ்சதீபாக்கினி லேகியம் | ௩ |
| ௨௰ | கண்டங்கத்திரிலேகிய | ௩ |
| ௨௧ | சிந்தாதிலேகியம் | ௫ |
| ௨௨ | மகாவில்வாதிலேகிய | ௬ |
| ௨௪ | கூழ்பாண்டலேகியம் | ௩ |
| ௨௫ | சரபங்கவில்வாதிலேகி | ௬ |
| ௨௬ | கண்டங்கத்திரிலேகிய | ௫ |
| ௨௮ | கபாடலேகியம் | ௪ |
| ௨௯ | திப்பிலிரசாயனம் | ௨ |
| ,, | மஸ்தமிரசாயனம் | ௫ |
| [illegible] | சவுபாக்கியசுண்டி | ௬ |
| ௩௩ | அக்கினிசூரணம் | ௧ |
| ,, | திரிராட்சதசூரணம் | ௩ |
| ௩[illegible] | அசுவகெந்திசூரணம் | ௨ |
| ,, | கண்டாத்திரிசூரணம் | ௩ |
| ௩[illegible] | நாளிசபத்திரிசூரணம் | ௩ |
| ௩[illegible] | பஞ்சதீபாக்கினிசூர | ௨ |
| ,, | நிலவாகைச்சூரணம் | ௩ |
| ௩[illegible] | வல்லாரைச்சூரணம் | ௩ |
| ௩[illegible] | சஞ்சீவிசூரணம் | ௪ |
| ௩௯ | ஏலாதிசூரணம் | ௨ |
| ,, | அசுவகெந்திபலராட்சததயிலம் | ௬ |
|  | வில்வாதித் தயிலம் | ௪ |
| ௪௨ | குமரித்தயிலம் | ௪ |
| ௪௩ | [illegible]ரம்பராக்குத்தயிலம் | ௪ |
| ௪௪ | பிரு[illegible]ரமலகத்தயிலம் | ௪ |
| ௪௫ | சந்தனாதித்தயிலம் | ௰ |
| ௪௭ | பொன்னாங்காணிதயில | ௨ |

| பக்கம். | பெயர் | பாடற்றொகை |
|---|---|---|
| ௪௮ | கீழ்காய்நெல்லித்தயி | ௨ |
| ,, | ஆதண்டைத்தயிலம் | ௩ |
| ௪௯ | ௰௩, சன்னிக்குழ்தயில | ௬ |
| ௫௰ | நிலப்பனைக்கிருதம் | ௫ |
| ௫௨ | பொன்னாங்காணிக்கிருதம் | ௬ |
| ,, | புளியாரைக்கிருதம் | ௩ |
| ௫௩ | வல்லாரைக்கிருதம் | ௪ |
| ௫௪ | கூழ்ப்பாண்டக்கிருதம் | ௪ |
| ௫௫ | தூதுளைக்கிருதம் | ௪ |
| ௫௬ | கண்டங்கத்திரிகிருதம் | ௪ |
| ௫௭ | கணத்தெண்ணெய் | ௪ |
| ௫௮ | கரப்பானெண்ணெய் | ௩ |
| ௫௯ | மாந்தளெண்ணெய் | ௨ |
| ,, | மேகத்தெண்ணெய் | ௪ |
| ௬௰ | விழுதியெண்ணெய் | ௫ |
| ௬௨ | லிங்காதியெண்ணெய் | ௫ |
| ௬௩ | வாதயெண்ணெய் | ௩ |
| ௬௪ | சுகசீதபேதியெண்ணெ | ௩ |
| ,, | எலுமிச்சம்பழத்தெண்ணெய் | ௨ |
| ௬௫ | வீரபத்திரக்கலிக்கம் | ௧ |
| ,, | ஆக்கிராணநசியம் | ௧ |
| ,, | நசியம் | ௧ |
| ௬௬ | கண்டாவிழ்தம் | ௨ |
| ,, | சூரணசுத்தி | ௨ |
| ௬௭ | செந்தூரவைப்புக்குரு | ௧ |
| ,, | லோகசெந்தூரம் | ௪ |
| ௬௮ | அயக்காந்தசெந்தூர | ௫ |
| ௬௯ | திரிலோகசெந்தூரம் | ௪ |
| ௭௰ | பஞ்சலோகசெந்தூர | ௩ |
| ௭௧ | மண்டூரசெந்தூரம் | ௪ |
| ௭௨ | அபிரேகசெந்தூரம் | ௬ |
| ௭௩ | திருசுகுரு | ௧ |
| ௭௪ | ரசபற்பம் | ௩ |
| ,, | தாளகபற்பம் | ௨ |
| ௭௫ | வங்கபற்பம் | ௩ |
| ௭௬ | நாகபற்பம் | ௩ |
| ,, | தாம்பிரபற்பம் | ௨ |
| ௭௭ | வெள்ளிபற்பம் | ௨ |
| ,, | தங்கபற்பம் | ௪ |
| ௭௮ | வெண்காரபற்பம் | ௫ |
| ௮௰ | பவளபற்பம் | ௩ |
| ,, | வாதசுரகியாழம் | ௪ |
| ௮௧ | பித்தசுரகியாழம் | ௪ |
| ௮௨ | சேத்துமசுரகியாழம் | ௩ |
| ௮௩ | சந்நிபதின்மூன்றுக்கும்பெயர் | ௧ |
| ,, | தோஷிமேழுக்கும்பெ | ௨ |
| ௮௪ | கெந்திசெந்தூரம் | ௰ |
| ௮௬ | காளகண்டமேகநாராயணசெந்தூரம் | ௫ |
| ௮௭ | ரசலோகசெந்தூரம் | ௪ |
| ௮௮ | ரசகற்பூரபற்பம் | ௫ |
| ௮௯ | காரீயசெந்தூரம் | ௩ |
| ௯௰ | பூரணச்சந்திரோதயம் | ௯ |


மு[illegible]றிற்று.

உ

சிவமயம்.

# அகஸ்தியமுனிவரருளிச்செய்த

# வயித்தியரத்தினச்சுருக்கம்

## மூந்நூற்றறுபது.

தஞ்சாவூர்.

காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரணமாய்நிறைந்தகுரு பணாதாள்போற்றிப்
புகலுகின்றேன்வயித்தியரத்னச் சுருக்கந்தன்னை
வாரணமாமுகத்தோனைப் பணிந்துவாழ்த்தி
வயித்தியந்தால்மூந்நூற்றே டறுபதுக்குள்
காரணமாஞ்செந்தூரம் பற்பம்லேகியங்
கருவானதயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாக்கிராணமொடு கலிக்கமாத்திரை
சுளுவாகநாடிமுதற் சொன்னோம்பாரே;

நூல்.

நாடிநிதானம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரிமுகனடியைவாழ்த்திக்கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்திற்பிடித்தடிநடுவேதொட்டால்

ஒருவிரலோடில்வாதமுயர் நடுவிரலிற்பித்தந்
திருவிரன்மூன்றிலோடிற்சேத்துமநாடியாமே. (௧)

ஆகியநாடிமூன்றும்படபடவென்றோடிற்சன்னி
வாகினிலன்னங்கோழிமயிலெனநடக்கும்வாதம்
ஏகியவாலையட்டையிவையெனநடக்கும்பித்தம்
போகியதவளைபாம்புபோலவாஞ்சேத்துமந்தானே. (௨)

சேத்துமமெழுந்திருக்கிற்றித்திப்புநாவிலேறும்
எத்தியகசப்புமீறிலெழும்பிடும்பித்தமாகும்
மாத்தியபுளிப்புமீறில்வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தண்ணீர்பித்தந்தீக்காற்றுவாதமாமே. (௩)

வாதத்தில்வாதமாகில்வளர்ந்திடுமன்னம்போல
நீதுற்றவுடலினேர்ந்துநெகிழ்ச்சியாய்ச்சுருங்கும்வாங்கும்
ஆதுத்துப்பதறுமேனியசனமும்மற்பமாகும்
ஏதுற்றதனத்தின்பின்னேயெண்ணியே யறிந்துசொல்லே

வாதத்திற்பித்தமாகில்வாயதுகுழறிப்பேசும்
பேதித்துக்குளிருங்காலில்வீக்கமும்பெருகவுண்டாம்
தாதுற்றபுத்திதானுந்தடைபடுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக்குடறனைப்புரட்டுந்தானே (௫)

வாதத்திற்சேத்துமமாகில்வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலையிடித்துப்பிணக்கியகுணங்கள்வேறாய்
நீதுற்றமெய்வெளுத்துத்தித்திடமுடனசனஞ்செல்லாப்
பேதித்துநாவுபேசும்பெருகவேவீக்கமுண்டாம். (௬)

பித்தத்திற்பித்தமாகிற்பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ்சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலருமேனியாகமும்வேறதாகும்
வத்தியேவெளுத்துக்காயம் வரண்டுபின்வீக்கமுண்டாம்

பித்தத்தில்வாதமாகிற்பிடரியுங்காலுங்கையும்
குத்தல்போலேயாகுங்குறுகிமெய்ப்பதறும்பின்னே

அத்தியாயுலருமேனியாகமுஞ்சுரத்தால்நோவாம்
புத்தியுமடியுமிக்கப்பொறுமைபோய்க்கோபமாமே. (அ)

பித்தத்திற்சேத்துமமாகிற்பிதற்றும்வாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந்தானறியாமலோடும்
சுத்திடும்பேய்கள்போலச்சுழற்றியவயித்திநோவாம்
பித்தமுமெடுத்துக்கொட்டிப்பிடரியில்நோவதாமே. (௯)

வாட்டிடுஞ்சேத்துமத்தில்வந்திடும்வாதமாகில்
நாட்டியகால்கள்போலநரம்பெலாம்வலித்துநிற்கும்
கூட்டிப்பிடரிதானுங்குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமேலாய்நாக்குவாய்குழறுந்தானே. (௰)

சீர்பெறுசேத்மபித்தந்தில்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற்பலவிதம்புளிப்பிணிப்பாம்
சேர்பதுபேசுமாறுந்திடமில்லைக்கோழையாகும்
சார்பதுகண்ணும்பீளைச்சாரும்பின்சத்தம்வேறும் (௰௧)

சேத்துமத்திற்சேத்துமமாகிற் றிமிர்தமாயறியுஞ்சொன்
ஆத்துமநல்லதல்லவழிவதுமெய்கண்டாயே [னேரும்
கூற்றன்வந்திடுவதாகுங்குறுமிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னேரும்யாத்திரைநாடிதானே. (௰௨)

நாடிபார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடிகட்டுச்சிப்பித்தநாடி
மாலையில்வாதநாடிவகைதப்பிப்பதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லாமியம்பிணரிதுதானென்று
நாளுஞ்சின்மரணமென்றுநன்முனியருளிச்செய்தார். (௰௩)

நாடிஇலக்கணம்.

போற்றியநாடிதானும்போத்துபோற்புறந்துடித்தாற்
றோற்றுவின்னுதலேமிக்கக்கிஞ்சுகமானேகேளாய்
காத்திடுத்திங்களொன்றிற்கருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின்மரணமென்றுரைக்கலாமே (௰௪)

குறித்திடுஞ்சேத்துமநாடிகுதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறுத்திடுவிழியாய்நல்லகாரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம்வயதிவைமுடிந்ததென்று
பொருட்பில்லைதிங்களொன்றிற்புகன்றிடுமரணமாமே ()

ஆதித்தன்சந்திரன்போலந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற்பெருக்கவேகையினூடே
சோதித்துக்கண்டுநாடிசுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடைவந்துறநிற்குந்தானே. (௰௬)

கடிந்தமேதார்நாடிதன்னைக்கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடிவிதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடிகட்டுச்சித்துடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடிமாலையில்மரணந்தானே. (௰௭)

சேத்துமநாடிதானுந்தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியவட்டைபோலநடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழுநாளினின்மரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார்நயம்படக்குறித்துப்பாரே

ஏற்றியதீபந்தன்னிலெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந்துயரறநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லைகுறைப்படாமருந்துசெய்யில்
மாற்றியவாணுடானும்வளர்ந்திடுந்திண்ணந்தானே. (௰௯)

கண்ணும்பல்லுந்தால்கறுத்துக்கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணும்வயிற்றிற்சேத்துமமுமோடி மிகவேதானடந்தாற்
பண்ணும்மருந்துபலியாதுபண்பாய்சுவாசமேல்வாங்கு
மண்ணும்விண்ணுந்தானறியமரணமாவார்கண்டோ. (௨௰)

இடைதொடைமார்பின்கீழேயெறிபடப்பதறியோடின்
முடுகிடவீங்குமாகின்மூவரிலொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப்பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டாலறிந்துகொண்மரணமென்றே ()

(இஃதறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

எடுக்கும்படுக்குமெழுந்திருக்குமிளைத்தேழைச்சுதனைவாங்கும்
அடுக்கவெளுத்தவிழியிரண்டுமலரவிழிக்கும்வழிபார்க்குந் [கு
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந்தொண்டைதன்னையடைப்பிக்
மடுத்துவருவதுகண்டா லறிவீர்மரணநிச்சயமே. (௨௨)

(இதுவும்-அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.)

ஊசிபோன்முகமுநீண்டு உடம்பெலாநரம்புதோன்றிப்
பாசிபோற்கண்பஞ்சிட்டுப் பரந்திருண்மூடுமாகில்
பேசுநாவரண்டுபேசிப்பித்ததுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேன் கண்டுகொண்மரணமென்றே (௨௩)

நாடியான்முன்னோர்சொன்ன நற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலு நிஃறநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலமொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. (௨௪)

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கியகுணங்களாய்ந்து
முகங்குறிநாடுமூக்குச் செவிநுதனயனநாடி
அகந்துடியடக்குநாடி யதுதிசைவிடுதிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்மையாய்நடைகள்பாரே. (௨௫)

பார்மனக்கவலையற்றுப் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ் செய்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னி லொளிபலவியாதிசெய்யும்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடானே. (௨௬)

சொல்லியவுந்திதன்னிற் சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்திலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே (௨௭)

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி றயங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்நெய்பா லிறைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேகோழி தின்னவர்நாடிபித்தம்
வானநற்கனிகடன்னை வாங்கினால்வாதமாமே.

வாதத்திலிளைநீர் தன்னை வாங்கினூனாடிவாதம்
போதவேகோபமுள்ளே பொருமினாடிபித்தம்
கோதைசேர்குழலார்தன்னைக் கூடினாடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னார் திறமுடனறிந்துதானே. (உகூ)

ஸ்திரீபுருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை.

தானெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புலன்சொல்லக்கேளு
நானெனும்புருடற்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே (௩0)

நாடிபார்க்கும்-மாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே. (௩க)

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபோரே. (௩உ)

நாடிநிதானம்-முற்றும்.

## சித்தாநந்தவைரவம்.

இஃதெண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாரப்பாபுலத்தியனேசித்தானந்தம்
பரிவானவைரவந்தான்சொல்லக்கேளு
சேரப்பாதிரிகடுகு*சிவப்புநாவி
திறமான*வெரிச்சலொடு*பொரிச்சலேழும்
நிரப்பாகமன்கூட்டிப்பழத்தின்சாற்றால்
நிசமாகநாற்சாமமரைத்துக்கொண்டு
தாரப்பாகுன்றிப்போனிழலுலர்த்தி
தப்பாமற்செப்பில்வைத்துசொல்லக்கேளே (௩௩)

*சிவப்பு-லிங்கம்*எரிச்சல்-பெருங்காயம்
* பொரிச்சல்-வெண்காரம்.

கேளப்பாவிஞ்சிநீருள்ளித்தைலங்
கெடியானமுலைப்பாலிற்கொடுத்தாயானா
னாளப்பாசன்னிவகையெல்லாம்போகு
நலமானதேன்கூட்டிக்கொடுத்தாயானால்
தாளப்பாதோஷமென்றதெல்லாம்போகுந்
தப்பாதுகண்ணிலிடத்தீருந்தீரும்
தேளப்பாரசானந்தவைரவந்தான்
செப்புகிறேன்*சிவப்புநாற்*பொரிதானெட்டே (௫௪)

* சிவப்பு-லிங்கம் * பொரி * வெண்காரம்.

இரசானந்தவைரவம்.

எட்டப்பாநாவிபீசாறுமாகு
மிதமானதிப்பிலியும்பன்னிரண்டு
தட்டப்பாமிஞ்சிரசந்தன்னாலாட்டித்
தளமாகநாற்சாமமரைத்துக்கொண்டு
விட்டப்பாமிளகுபோனிழலுலர்த்தி
விருதானசெப்பில்வைத்துசொல்லக்கேளு
அட்டப்பாவநுபானமறிந்துபோடு
அப்பனேசன்னியென்றமூலம்போமே. (௫௫)

வாதராக்ஷசன்.

போமப்பாவாதராக்ஷசனைக்கேளு
புதுமையாம்*வேந்தனோடு*நாற்றங்காந்தஞ்
சேமப்பாவப்பிரக தாம்பிரபற்பம்
திறமாகவஞ்சுவிதஞ்சமனாய்க்கூட்டிச்
சாமப்பாவெள்ளைச்சாறணையின்சாற்றால்
தளமாகநாற்சாமமரைத்தபின்பு
வேமப்பாசீந்தியிடகியாழந்தன்னால்
வெகுசுருக்காய்நாற்சாமமரைத்திடாயே. (௫௬)

* வேந்தன்-ரசம் * நாற்றம்-கந்தகம்.

அரைத்திடுவாய்கொடிவேலிக்கியாழந்தன்னால்
அருந்துளசிச்சாறு*திரிபலைக்கியாழம்
அரைத்திடுவாய்வெவ்வேறேசாமம்ரண்டு
அழகாகமொத்தையாயுருட்டிக்கொண்டு

* திரிபலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்

அரைத்திடுவாய்சாறணையினிலையரைத்து
அன்பாகமருந்தையுள்ளே வைத்துமூடி
அரைத்திட்டவிலைகருகப்புடத்தைப்போடு
ஆறினபின்னெடுத்தாலரைக்கக்கேளே. (௫௭)

கேளப்பாசித்திரமூலத்தின்கியாழம்
இருபையாய்நாற்சாமமரைத்துக்கொண்டு
நாளப்பாமும்மூன்றுவராகன்விதம்
நலமாகவேயுருட்டிக்கட்டிக்கொண்டு
தாளப்பாநிழலுலர்த்திவைத்துக்கொண்டு
தளமானசன்னிவகைதோஷமெல்லாம்
வேளப்பாவனுபானமறிந்துப்போடு
வெகுசுருக்காய்வாதமெல்லாம்விழலாய்ப்போமே.

சுயமக்கினி.

போமப்பாசுயமக்கினிசொல்லக்கேளு
புகழானரசமூன்று*நாற்றம்ரண்டு
காமப்பாகாந்தசெந்தூரம்நாலு
கலங்காதே*சிலையிரண்டு*சிவப்பிரண்டு
தாமப்பாவெழுகுபொடிபலந்தானென்று
தவறாமல்*குமரிச்சாறரைப்புக்கேளு
ஆமப்பாபட்சமொன்றுவரைத்துருட்டு
அப்பனேயிஞ்சிரசந்திரிகடுகுதாளே. (௫௯)

* நாற்றம் கந்தகம்*சிலை-மனோசிலை*சிவப்பு-லிங்கம்.
குமரி-சோற்றுக்கற்றாழை.

தூளிலேதேன்கூட்டிப்பணவெடைதான்போட்டு
தொடர்ந்துவரைமண்டலந்தான்கொண்டாயானால்
நாளிலேயக்கினியாமந்தந்தீரும்
நாடாதுபீலிகையுங்குன்மவாய்வும்
தேளிலேவாயுவென்றதெல்லாந்தீருந்
திறமானகவுசியொடுபாண்டுதீரும்
ளிலேசுரமெல்லாஞ்சுருக்காய்த்தீருஞ்
சுகமாகும்பத்தியந்தான்புளிக்கசப்புத்தள்ளே (௬௰)

### இதுவுமொருவகை.

தள்ளவேயின்னமொருசெய்திகேளு
தயவானவேந்தனென்றுநாற்றம்ரண்டு
விள்ளவேஅயப்பொடிதானுலுங்கூட்டி
விருதானகுமரிச்சாறதனாலாட்டிப்
பள்ளவேநாற்சாமமரைத்துருட்டிப்
பாங்கானவெருக்கிலையாற்சுற்றிக்கட்டிக்
கள்ளவேபாண்டத்தில்பக்ஷம்வைத்துக்
கலங்காதேபொடிசெய்துதிரிகடுகிற்கொள்ளே (௪௧)

கொள்ளடாதேன்கூட்டிமண்டலந்தான்
கொடிதானகுன்மமெட்டும்பிலிகையுந்தீருந்
தள்ளடாபாண்டுவகையெல்லாந்தீருந்
தளமானவக்கினியாமந்தந்தீரும்
நள்ளடாவிஞ்சிரசந்தேனுங்கூட்டி
நலமானமண்டலந்தான்கொண்டாயானால்
விள்ளடாசுரமென்ற தறுபாநான்கும்
விட்டுவிட்டுக்கடல்புக்கும்விருதுப்போமே (௪௨)

### கபாடமாத்திரை.

போடவேகபாடமாத்திரைதான்கேளு
புகழானசாதிக்காய்ப்பத்திரிக்காயம்
நாடவேசிரகமும்விடையங்கிராம்பு
நலமானவபினி*சடைவன்னிக்கற்பந்
தேடவேவெந்தயமுங்கழற்சிவித்துத்
திறமானகுரோசாணிபதினென்றுந்தான்
ஆடவேசமந்தூக்கிக்கல்வத்திட்டு
அப்பனே*யானந்தமூலிச்சாறே (௪௩)

* சடைவன்னிக்கற்பம்-சடைக்கஞ்சா *ஆனந்தமூலி. கஞ்சா

சாற்றுமேலநாற்சாமமரைத்துக்கொண்டு
சாதகமாயிலந்தைவிரைப்பிரமாணந்தான்
காத்தாலேமேதியென்றதயிர்நாண்மூன்று
கசக்காதே*மதுவிலிடுமூன்றுநாள்தான்

* மது-தேன்.

வாத்தாலேவாழையுடபூவின்சாற்றில்
வகையானதனிச்சாற்றிலிட்டாயானால்
வேத்தாலேயிரத்தமூலஞ்சீழ்க்கிராணி
விதமானசலக்கிராணித்தானுமாமே. (௪௪)

ஆமப்பாசதக்கிராணிவாய்வுக்கிராணி
அப்பனேசூசிகாகிராணித்தீரும்
போமப்பாசோறுசோறாய்க்கழிகிராணி
பொலிவானநீரதாக்கிராணிதீரும்
நாமப்பாவயிற்றிலுள்ளகடுப்புத்தீரும்
நலமானபாண்டுநோய்க்கிராணிதீரும்
தாமப்பாவதிசாரக்கடுப்புத்தீருந்
தப்பாதுபுளிகூட்டிப்பத்தியம்போடே. (௪௫)

பூபதிகுளிகை.

போடப்பாசடலத்துண்ணோய்கள்போகப்
பூபதிதன்மருந்தொன்றுசொல்லக்கேளு
சாடப்பாதங்கமொடுவெள்ளிநாகந்
தளமானலோகமொடுமுத்திரத்தினம்
நாடப்பாசூதமொடுகெந்திலிங்கம்
நலமானசிலையொடுதார்சிங்கிநாவி
ஆடப்பாவிவையெல்லாம்பழச்சாற்றாலே
ஆட்டியேநாற்சாமம்வில்லைசெய்யே (௪௬)

செய்யப்பாரவியுலர்த்தியகலில்வைத்துத்
திறமாகமேன்மூடிச்சீலைசெய்து
வையப்பாமுப்புடத்தில்சிவந்துப்போகும்
வளமாகவெண்டைக்கெண்டைதான்லிங்கங்கூட்டி
மெய்யப்பாமூலைப்பாலினான்கேசாமம்
விடாமலரைவிரலளவுண்டைச்செய்து

கையப்பாநிழலுலர்த்திச்செப்பில்வைத்துக்
கலங்காதேவைரவற்குப்பூசைபண்ணே. (௪௭)

பண்ணியேபூபதியைமுலைப்பாலுக்குப்
பரிவாகவரிசியெடைகொடுத்தாற்கேளு
சண்ணியேசன்னிபதின்மூன்றுந்தீரும்
தப்பாதுதோஷமென்றதேழுந்தீரும்
கண்ணித்திரிதோஷஞ்சிங்கிலிதமெல்லாங்
காணாதுகடல்புக்குங்கருதிப்பாரு
விண்ணியேசிரசினின்றதோடமெல்லாம்
வெகுசுருக்காய்த்திருமடாவினாந்துபாரே (௪௮)

பாரப்பாபூபதியையிஞ்சிச்சாற்றிற்
பரிவானதேன்கூட்டிக்கொடுத்தாற்கேளு
சாரப்பாசவமாகப்போனாலுந்தான்
சாதுரியப்பிராணன்வந்துசற்றேபேசும்
ஆரப்பாபிரமலபியவ்வளவேயாயின்
ஆசித்துப்பேசிவிட்டுமரணமாவான்
தாரப்பாபூபதியைச்சொன்னேன்சொன்னேன்
சாதித்துவைத்தியஞ்செய்தருமமாமே. (௪௯)

## இரசசிந்தாமணி.

ஆமப்பாரசசிந்தாமணியைக்கேளு
அப்பனேசூதமொடுசிவந்தரத்நம்
தாமப்பாதங்கமொடுவெள்ளிமுத்துத்
தயவானபவளமொடுதிட்சணந்தா
னாமப்பாசிலைகெந்தியப்பிரோகம்
நலமாகவகைக்குமிருகழஞ்சுக்கூட்டிக்
* காமப்பால்விட்டரைப்பாய்சாமம்நாலு
கருவானசித்திரமூலக்கியாழந்தானே (௫௰)

* காமப்பால்-முலைப்பால்.

கியாழத்தாலரைத்திடுவாய்சாமம்நாலு
கெடிதானவெருக்கம்பாற்சாமம்ரண்டு

நியாயமாஞ் *சோகிதனிலடைத்துக்கொண்டு
நிலவரமாய்மூலமென்றசாம்பலுக்குள்
வியாழமாயறையறையாய்வைத்துமூடி
விதமாகவெழுசீலைமண்ணுஞ்செய்து
தியாழமாயிரவிதனிலுலரப்போட்டுத்
திறமாகக்கசபுடத்திற்சென்றுவாங்கே (௬௧)

* சோகி-பலகறை.

வாங்கியேயடைக்கெடைதான்சூதங்கூட்டி
மைந்தனேநாபிமுக்காற்கழஞ்சுக்கூட்டி
ஓங்கியேநாற்சாமந்திரிகடுகுகியாழ
முத்தமனேதிரிபலையின்கியாழந்தன்னாற்
றேங்கியேயிருசாமமரைத்தபின்பு
திறமாகவெருக்கினிடபட்டைச்சாற்றில்
தாங்கியேயொருசாமமரைத்துருட்டித்
தப்பாமனிழலிலேயுலர்த்திவையே. (௬௨)

வைத்திதனைவரவற்குப்பூசைபண்ணு
வாகாகக்கணபதியைப்பூசைபண்ணு
தைத்தவொருமாத்திரைக்குச்செபந்தான்பண்ணு
தப்பாமற்றேவியைத்தான்பூசைபண்ணு
சித்திதருமாத்திரையை யனுபானத்தில்
திறமாகக்குன்றியெடைகொடுத்தாற்கேளு
பற்றிநின்றசன்னிமுதற்றோஷமெல்லாம்
பறக்குமேடாசுரமென்றதெல்லாந்தானே. (௬௩)

தானென்றரசசிந்தாமணியின்பேனாச்
சாற்றினால்யமதூதர்நடுங்குவார்பார்
ஏனென்றேயிருந்தாக்கால்வைத்தியோனே
யெய்துமோமாத்திரைதானியட்டக்கேளு
பானென்றமாத்திரைகள்பண்பாய்ச்செய்து
பரிவானவுலகத்தில்வைத்தியஞ்செய்ய

தேனென்றவைத்தியற்குச்சொன்னேனிந்நூல்
திறமானவாத்தியென்றுற்செய்வான்பாரோ (௫௪)

## கோரோசினைக்குளிகை.

பாரப்பாகோரோசினைக்குளிகைகேளும்
பாங்காக்கோரோசினையுங்குங்குமப்பூச்
சாரப்பாகர்ப்பூரம்ரசசெந்தூரஞ்
சார்பானபச்சைக்கர்ப்பூரமேலம்
சேரப்பாவப்பிரகங்கிராம்புக்கோஷ்டம்
திறமானசாதிக்காயக்கிரகாரம்
ஆரப்பாவகையொன்றுகழஞ்சுமூன்று
அப்பனேகலவத்திற்பொடித்துக்கொள்ளே (௫௫)

பொடித்திதனைபரைப்பதற்குக்கியாழங்கேளு
போரானசந்தனத்தூட்கியாழஞ்செய்து
துடித்திதனைச்சாமநாலரைத்துக்கொண்டு
துலங்கவேசண்பகப்பூக்கியாழஞ்செய்து
கடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டு
கருவானகுங்குமப்பூக்கியாழஞ்செய்து
துடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டு
துலங்கவேகுன்றிபோலுண்டைசெய்து (௫௬)

உண்டைசெய்துநிழலுலர்த்திச்செப்பில்வைத்து
உத்தமனேமுலைப்பாலில்கொடுத்தாயானால்
தொண்டையுறசேத்துமங்கடொண்ணூற்றுறும்
துலைந்துவிடுஞ்சன்னியெலாஞ்சொல்லாதோடும்
மண்டைகட்டுச்சூலைமுதனீர்ந்தோஷங்கள்
மயக்கமொடுசேத்துமசுராமாண்டுப்போகும்
சண்டையிட்டுவந்ததொருவலிப்பிசுவுஞ்
சண்ணுண்டுபோகுமேபுடாசொல்லக்கேளே (௫௭)

## பூமணிக்குளிகை.

கேளடாபூமணிதான்சொல்லக்கேளு
இருவையாம்ரோகணியுமிலுப்பைப்பூவும்
நாளடாவாளமதுஒட்டிசேர்த்து
நலமானகுமரிச்சாறதனாலாட்டி
வேளடாநாற்சாமமரைத்துக்கொண்டு
விதமானதூதளங்காய்ப்போலுருட்டித்
தாளடாநிழலுலர்த்திச்செப்பில்வைத்துத்
தளமானவிஞ்சிரசந்தேனுங்கூட்டே (௫௮)

கூட்டியமாத்திரைதா னொன்றுதேய்த்துக்
குழப்பியேகாலமேகொடுத்தாற்கேளு
நாட்டியதோர்சன்னிசுரமெல்லாந்தீரும்
நலமானவிடசுரமும்நாடாதோடும்
தீட்டியதோருள்ளியென்றனதலத்தூட்ட
திறமானதோடமெல்லாந்தீருந்தீரும்
வாட்டியேயெண்ணெயிலேகொடுத்தாயானால்
வாங்கிவிடும்வாயுவெல்லாமாண்டுப்போமே(௫௯

## அர்த்தநாரீஸ்வரம்.

போமப்பாஅர்த்தநாரிசூரணந்தான்கேளு
புகழானசூதமொடுநாவிகெந்தி
நாமப்பாவெங்காரம்சமனாய்த்தூக்கி
நலமானநொச்சியிலைச்சாற்றினாலே
வேமப்பாவிருசாமமரைத்துக்கொண்டு
விதமானகுகையிலிட்டுச்சிலைசெய்து
தாமப்பாமண்செய்துசட்டிக்குள்ளே
தயவாகவுப்பையிட்டுக்குகையைவையே. (௬௰)

வைத்ததிலேமேலுமந்தவுப்பைக்கொட்டி
வாகாகமேற்சட்டிகொண்டுமூடி

தைத்ததிலேசிலைசெய்தடுப்பிலேற்றித்
தப்பாமற்கமலவன்னிநாலுசாமம்
நைத்ததிலேயாறவிட்டெடுத்துக்கொண்டு
நலமானசெங்கழுநீர்ச்சாற்றினாலே
பைத்ததிலேநாற்சாமமாட்டிக்கொண்டு
பருவமுடனெருச்சிரசம்விட்டேயாட்டே (௯௧)

ஆட்டப்பா நாற்சாமம்பாகற்சாற்றால்
அப்பனேநாற்சாமமாட்டிக்கொண்டு
நாட்டப்பாரவிமுகத்திலுலர்ந்தபின்பு
நன்றாகக்குழலடைத்துவைத்துக்கொண்டு
மூட்டப்பாபணவெடைதூள்முன்சாற்றிட்டு
முறையாகக்கொடுத்திடவேசுரங்கடீரும்
காட்டப்பாவிருபுறத்தோர்புறந்தானிற்குங்
கருவானமுன்சாற்றினசியம்பண்ணே. (௯௨)

பண்ணப்பாவொருபுறத்திற்சுரந்தானிற்கும்
பக்குவமாய்மறுபுறத்தினசியம்பண்ண
தண்ணப்பாவிருபுறமுந்தணிந்துபோகுந்
தப்பாதுஆட்டுப்பாற்கஞ்சிக்கொள்ள
நண்ணப்பாபுலத்தியற்காச்சொன்னேன்கேணீ
நாட்டிலுள்ளோரிதையறிந்துயார்தான்செய்வார்
கண்ணப்பாவொளிப்பில்லைச்சொல்லிவிட்டேன்
கருவானவைத்தியர்க்குக்கருவைக்காணே (௯௩)

சிலோதாரிமணி.

காணப்பாசிலோதாரிமணியைக்கேளு
களத்த*பொரிதிரிகடுகுபடியொவ்வொன்று
நாணப்பாகடலுணாயுஞ்சுணாவித்து
நலமாவிந்துப்புக்காயமொன்று
மாணப்பாநேர்வாளமிரண்டுகூட்டி
வகைபத்துமிளநீரிற்சாமமாட்டி
பேணப்பாவிலந்தைவிணாப்பிரமாணந்தான்
பிசகாமனிழலுலர்த்திச்செப்பில்வையே. (௯ [cut]

* பொரி*வெண்காரம்.

வைத்தப்பாவிஞ்சிநீர்தேனுங்கூட்டி
வளமானமாத்திரையைக்கொடுத்தாயானால்
சத்தப்பாவாய்வோடுவாதமெல்லாஞ்
சாந்தமாம்பித்தமெல்லாங்கீழேசாடும்
வைத்தப்பாமதுவிலேயிட்டாயானான்
மாந்தமொடுவுப்பிசமும்வாங்கிப்போகும்
எய்த்தப்பாநீரடைப்புசதையடைப்புத்தீரு
மிதமானசிலோதாரியென்றுகாணே (௬௫)

## கரிசாலைஇலேகியம்.

காணப்பாபாண்டுவகையாவும்போகக்
கரிசாலைலேகியந்தான்சொல்லக்கேளு
நாணப்பாபொற்கையான்சாறுபடியிரண்டு
நல்மானநெருஞ்சிரசம்படியிரண்டு
வாணப்பாசிறுகீரைச்சாறுபடியொன்று
வளமானபொடுதலைநீர்ப்படிதானொன்று
தாணப்பாகீழ்க்காயினெல்லிச்சாறு
தருவானசெருப்படிநீர்ப்படிதானென்றே (௬௬)

ஒன்றப்பாகியாழவகைசொல்லக்கேளு
உரமானநாவல்கருங்காலியத்தி
ஒன்றப்பாதென்னம்பூவகையொன்றுக்கு
ஓர்பலந்தான்மஞ்சணன்றாயிடித்துப்போட்டுக்
கண்டப்பாதுணிநீரொட்டொன்றாக்கிக்
கருவானசாற்றிலுள்ளேகருத்தாய்வைத்துக்
கிண்டப்பாசமமாக்கியிறக்கிக்கொண்டு
கெணிதமுடன்கருவானசாற்றிற்சேரோ. (௬௭)

சேர்க்கவின்னங்கியாழமொன்றுசொல்லக்கேளு
செப்புகிறேன்மிளகொடிமிளகருணைமூல
மார்க்கமாம்அவுரியொடுசிற்றாமுட்டி
வளமானபேராமுட்டிவிலாமிச்சோடு
தீர்க்கமாய்ப்பலமூன்றுநிறுத்துக்கொண்டு
திறமாகவிடித்ததனைத்துணிநீரில்
சர்க்கவேசோடசத்தோடொன்றாய்க்காய்ச்சி
சிதறாதேமுன்கியாழந்தன்னிற்கூட்டே. (௬௮)

கூட்டுவாய்பனைவெல்லம்பலந்தானெட்டுக்
கூரானகன்னல்வெல்லம்பலந்தானெட்டு
மாட்டுவாயாவின்பாற்படிதானாறு
வளமாகக்களாத்துவிட்டுச்சொல்லக்கேளு
காட்டுவாயடுப்பேற்றிப்பாகுசேரிற்
கருவானசிரகமுமேலங்கிராம்பு
நீட்டுவாய்சாதிக்காய்ச்சாதிப்பத்திரி
நினைவாகவோமங்குரோசானியாமே (௬௬)

ஆமப்பாநாகப்பூக்கர்க்கடகச்சிங்கி
அப்பனேகோஷ்டமோடக்கிராகாரம்
தாமப்பாமதுரமொடுதாளிசப்பத்திரி
தப்பாமற்றிரிகடுகுதிரிபலாதி
நாமப்பாவகைபொன் நிற்பலந்தானென்று
நலமாச்சூரணித்துமுன்பாகிற்றூவி
வேமப்பா கிண்டையிலேயாவினெய்தான்
விளாவிலளாப்படிவீதம்விட்டுக்கிண்டே (௬௭)

கிண்டப்பாதேனதிலேபடிதான்விட்டுக்
கிருபையொடுதிரிலோகச்செந்தூரந்தான்
றண்டப்பாபலமொன்றுகூடப்போட்டுத்
தப்பாமல்*மண்டூரம்பலமொன்றப்பா
மண்டப்பாகிண்டியுதைமெழுகாய்வாங்கி
மகத்தானபுன்னைக்காயளவேவீதங்
கொண்டப்பாமண்டலந்தான்சென்றதானாற்
கூறுகெட்டவெண்பாண்டுஞ்சிவக்கலாச்சே (௬௮)

* மண்டூரம்-பழஞ்செங்கற்சிட்டம்.

ஆச்சப்பாபாண்டுவகையாவும்போகு
மப்பனேபித்தவெட்டைக்கைகாலோய்ச்சல்
காச்சப்பாகாந்தலுடனெரிவுபோகுங்
கனமானவாந்தியொடுமயக்கந்தூக்கம்
ஓச்சப்பாவிக்கமொடுநீர்ச்சுரப்பு
முத்தமனேகிராணியெல்லாமொழிந்துப்போகும்

நீச்சப்பாவரோசியங்களெல்லாம்போகு
நிசமான*அசுவகெந்தித்தைலமூழ்கே (எஉ)

* அசுவகெந்தி-அமுக்கரு.

கண்டாத்திரி-இலேகியம்.

மூழ்கவேகண்டாத்திரிலேகியஞ்சொல்வேன்
மூர்க்கமாயிஞ்சிரசம்படிதானொன்று
நீழ்கவேகண்டங்கத்திரியின்சாறு
நினைவாகப்படியொன்றுகூடவிட்டுத்
தாழ்கவேநெருஞ்சிநீர்ப்படிதானொன்று
தப்பாமன்முள்ளங்கிப்படிநீர்விட்டு
வீழ்கவேபழச்சாறுபடிதான்விட்டு
வியனனவாவின்பாற்படியிரண்டே (எஙு)

ரண்டானபனைவெல்லம்பலந்தானெட்டு
நணுகியதைபடுப்பேற்றிப்பாகுசேரிற்
குன்றானதிரிகடுகுசிரகமூமேலங்
குலவும்வாய்விளங்கங்கிராம்புத்தாளீசம்
நன்றாகப்பலமொன்றாகுரணித்து
நலமானபாகினிலேதூவித்தூவிச்
சென்றானபசுநெய்ப்படியனாதான்விட்டுத்
திண்ணமொடுகாற்படிதான்றேனும்வாரே (எச)

வார்த்தப்பாகிண்டியதைமெழுகுப்போல
வளமானலேகியத்தைப்பதனம்பண்ணு
பார்த்தப்பாபாக்களவுவீதமாகப்
பதறாமலிருநேரங்கொள்ளுங்காலங்
காத்தப்பாமண்டலந்தான்கொண்டாயானாற்
கலங்காதேவாதமொடுவாயுவெல்லாம்
போத்துறநற்பித்தமொடுவாந்திகுலைப்
புகாறுடலவலியிசுவும்பலந்துபோமே (எரு)

போமப்பாவரோசிகங்களன்னத்தோஷம்
பொறுக்காதகுன்மமெட்டும்பொருமல்விக்கல்
சாமப்பாபித்தத்தினெரிவிதெல்லாம்
சாடிவிடுங்கடுப்புவலிசாந்தமாகும்
நாமப்பாபித்தத்தின்கபாலக்குத்தல்
நாடாதுமயக்கமெலர்நடுங்கியோடும்
தேமப்பாகுமரியிட தைலமுழுங்கில்
திறமானபித்தநோய்த்தீரும்பாரே. (௭௬)

## பஞ்சதீபாக்கினி-இலேகியம்.

பாரப்பாபஞ்சதீபாக்கினியென்னப்
பகருகின்றலேகியந்தான்சொல்லக்கேளு
ஆரப்பாதிரிகடுகுமேலஞ்சீரம்
அப்பனேவகையொன்றுபலந்தானென்று
பேரப்பாவிளைவறுப்பாய்ச்சூரணித்துப்
பெரிதானவாயின்பாற்படியிரண்டு
சேரப்பாபனைவெல்லம்பலந்தானெட்டுச்
சிறப்பாகக்கரைத்ததிலேபாகுசெய்யே (௭௭)

செய்யப்பாசூரணத்தைத்தூவிக்கிண்டு
திறமானதேனெய்தானுரியுழக்கு
கையப்பாவிட்டதிலேகிண்டிக்கிண்டிக்
கருவாகமெழுகுபதமாகவாங்கி
மையப்பாபாக்களவுமிருநேரந்தான்
மைந்தனேமண்டலந்தான்கொண்டாயானால்
தையப்பாதீருகின்றவியாதிகேளு
தருவானவாய்வோடுவாதமாமே (௭௮)

ஆமப்பாவுஷ்ணங்கள்பித்தவாய்வு
அப்பனேசரீரத்திலுளைவுகுத்து
போமப்பாவலிகடுப்புமெரிச்சல்பேதி
பொருமலுடன்வாயுவென்றகிராணிதீரும்

வேமப்பாவஸ்திசுரமஸ்திவெட்டை
விருதானவாந்தியெல்லாம்விழலாய்ப்போகுஞ்
சாமப்பாவரக்கிரனிடதைலமூழ்கு
சகலசுரம்விட்டோடுஞ்சார்புபாமே (எகூ)

கண்டங்கத்திரி-இலேகியம்.

சார்வானலேகியந்தானென்றுகேளு
சாற்றுகிறேன்கண்டங்கத்திரிதூக்கப்பா
ஆர்வாகவிடித்ததனைத்தூணிநீரில்
அப்பனேயெட்டொன்றாய்க்காய்ச்சிவிட்டுச்
சேர்வாகப்பனைவெல்லம்பலந்தான்பத்து
சேர்த்ததிலேபால்படிதான்பாகுசேரில்
தார்வாகத்திரிகடுகுதிரிபலாதிச்
சருவானவாய்விளங்கமோமமாமே. (அ௰)

ஓமமொடுகோசானிலவங்கப்பட்டை
உத்தமனேசிரகமுநறுக்குமூலம்
நாமமோடத்திதிப்பிலியுங்கோஷ்ட்டம்
நலமானதாளிசமுமக்கிரகாரம்
வாமமொடுவகைகையொன்றுபலந்தானென்று
வளமாகச்சூரணித்துப்பாகிற்றூவி
சேமமோடாவினெய்ப்படிகால்விட்டுத்
திறமானதேனதிலேபடிகால்வாமே (அக)

வார்த்ததிலேகிண்டியதுமெழுகுபோலே
வளமானலேகியம்பாக்களவுவீதம்
பார்த்ததிலேயிருநேரங்கொண்டாயானால்
பறக்குமடாகழல்வாதம்பாரிச்சூலை
தேத்தியேகிருமியொடுபுழுக்களெல்லாந்
தேகத்தைவிட்டோடுங்கர்ப்பவாய்வு
சாற்றதிலேயூஷ்ணநோய்ப்பித்தமெல்லாஞ்
சாராதுசிந்தாதிலேகியங்கேளே. (அஉ)

## சிந்தாதிலேகியம்.

கேளப்பாவாறுதிங்கள்சென்றகாடி
கிருபையாய்ப்படிபத்தும்புளித்தமோரும்
நாளப்பாபடிபத்துகூடவிட்டு
நலமானபுளியிலைதூக்கிடித்துப்போட்டுக்
கோளப்பாதுருபிடித்தவிரும்பெடைதான்போட்டுக்
கொதிக்கவைத்துஎட்டொன்றாயிடித்துக்கொண்டு
வேளப்பாகையானீர்படிதான்ரண்டு
விருதானவிஞ்சிரசம்படிதானென்றே. (அ௫)

ஒன்றானபழச்சாறுபடிதானென்று
உத்தமனேநெருஞ்சிரசம்படிதானென்று
கென்றானசிறுகீரைப்படிதானென்று
செருப்படிதான்படியொன்றுதென்னம்பூநீர்
பண்டானபடியொன்றுகீழாநெல்லி
பதறாமற்படியொன்றுகூடச்சேர்த்து
கண்டானவாவின்பால்படிதானாறு
கருவானபனைவெல்லம்பலந்தான்பத்தே. (அ௬)

பத்தாகக்கரைத்துவிட்டுப்பாகுசேரில்
பக்குவமாங்கடைசரக்குதிரிகடுகுவோமம்
நத்தானதிரிபலைகோஷ்டமாஞ்சில்
நலமானசீரகம்வால்மிளகுஏலம்
கைத்தானகிராய்புதாளீசப்பத்திரி
கருவானலவங்கத்தோலானைத்திப்பிலி
ஒத்தாதபலமொன்றுதூக்கிக்கொண்டு
உருவாகஇளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே. ()

செய்யப்பாமுன்பாகிற்றூவிக்கிண்டிச்
செயமாகவாவினெய்ப்படிதான்வாரு
கொய்யப்பாதேனதிலேபடிதான்வாரு
குழம்பாகலேகியத்தைப்பதனம்பண்ணு
பையப்பாவிருகழஞ்சியிருநேரங்கொள்ளப்
பறக்குமடாபாண்டுவகையெல்லாந்தீரும்
மையப்பாபித்தவெட்டைபித்தவாய்வு
மயக்கமோடக்கினியாமந்தந்தானே. (அ௯)

மந்தமொடுவெளுப்பானதேகமெல்லாம்
வண்டுபோல்கறுக்குமடாமண்டலத்தில்
அந்தமாமகோதரம்பிலிகையாம்வாய்வு
அப்பனேசோகையொடுகிராணிமூலம்
பொந்தமாமுடம்பெரிப்பிளைப்போமீளை
பொருமலுடனுப்பிசங்களிலறச்சல்தீரும்
பந்தமாம்பத்தியங்கள்நன்றாய்க்காத்து
பச்குவமாமண்டலத்தில்சொல்லக்கேளே. (அஎ)

மகாவில்வாதிலேகியம்.

சொல்லக்கேள்புலத்தியனேயின்னமொன்று
சுருக்காகநோய்க்கெல்லாமகாவில்வாதி
வல்லக்கேள்வில்வத்தின்மூலமப்பா
வளமாகப்பலம்நூறுவெட்டிவந்து
நல்லக்கேள்விலாமிச்சைவாகைபாதிரி
நலமாகநன்னாரிபருவிளாவும்
அல்லக்கேள்சித்றமல்லிபேராமல்லி
அழகானசிறுவிளாவேருமாமே. (அஅ)

ஆமப்பாசிறுவாகைமுன்னையோடு
அப்பனேமுசுமுசுக்கைகொடுவேலிதேற்றான்
நாமப்பாவகையொன்றுபலமூன்றாகும்
நலமாகவிடித்தேயிருதூணிநீரில்
வேமப்பாவெட்டொன்றாய்வடித்துக்கொண்டு
வெருளாதேகொம்மட்டிப்பழச்சாறிஞ்சி
காமப்பாசாறுபடியொன்றுவிட்டுக்
கலங்காதேசர்க்கரைச்சேர்நாலுமாமே. (அகூ)

ஆமப்பாவாவின்பால்படிதான்ரண்டு
அப்பனேகரைத்தெல்லாம்பாகுசேரில்
போமப்பாதிரிகடுகுதிரிபலாதி
புகழானலவங்கம்மாடேலங்கோஷ்டம்
நாமப்பாமதுரகெந்தஞ்சீரம்ரண்டு
நலமானவிளங்கமொடுசோஷ்திரபேதி
வாமப்பாதாளிசம்செண்பகப்பூஅக்கிரகாரம்
வளமானமல்லிவிளாவரிசிதேக்கே. (கூ0)

தேக்கானமுத்திரிகைபேரீச்சுவில்வந்
திறமானவாலுளுவைமாஞ்சில்சிறுநாகம்
பார்க்கானநாகணமும்பருத்திவித்தும்
பசருவே*னிம்பவித்திலுப்பைப்பூவு
தாக்கானவகையொன்றுபலமொன்றாகச்
சூரணித்துப்பாகிலேதூவிக்கிண்டி
நீக்கானதேனதிலேபடியளாதான்விட்டு
நினைவாகவாவினெய்ப்படியளாதான்வாரே. (கக)

நிம்பவித்து-வேபங்கொட்டை.

வார்த்தப்பாமெழுகுபோல்கிண்டிக்கிண்டி
வளமானலேகியத்தைப்பதனம்பண்ணு
கோத்தப்பாலேகியத்தைப்புன்னைக்காயளவு
கொண்டுவரவிருநேரந்தீரும்நோய்கள்
சாற்றப்பாசுவாசமுடனரோசியங்கள்
தவறுதேவிக்கமொடுசத்தியெரிப்பாண்டு
காத்தப்பாவிஷபாண்டுவயிற்றெரிச்சல்
கனமானவுப்பிசங்கள்கிராணிபோமே. (கஉ)

போமப்பாகைகாலிலெரிவுகாந்தல்
புகலும்வெள்ளைக்காளமன்னதோஷம்
நாமப்பாகுலையொடுசயந்தானெட்டு
நலமானசுரங்களாறுபத்துநாலுந்
தாமப்பாபித்தமெல்றநாற்பதுந்தான்
தளமானவத்திசுரமருந்திடெல்லாம்
ஆமப்பாவதிசாரமுள்ளில்ரோகம்
அருளானலோகம்வைத்துக்கொள்ளுகொள்ளே.(

கூழ்ம்மாண்டலேகியம்.

கொள்ளவேகூழ்ம்மாண்டலேகியந்தான்
குணமானகூழ்ப்பாண்டச்சாறுபடிநாலு
விள்ளவேதானழையிடவிழுதின்சாறு
விருதானபடியொன்றுதென்னம்பூவொன்று
தள்ளவேபழச்சாறுபடிதானொன்று
தளமானவாவின்பால்படிதான்ரண்டு
பள்ளவேசர்க்கரைதான்பலமோபத்து
பதமுமற்கனாத்ததனைப்பாகுசேரே. (கங)

சேருமேசிரகமுமல்லிகோஷ்டம்
திறமானமிளகுமாசக்காயேலம்
காருமேசாதிக்காய்சாதிபத்திரி
கருவானமதுரமொடுதாளிசந்தான்
வாருமேஒருவகைக்குப்பலமொன்றாக
வகையாகச்சூரணித்துப்பாகிற்றூவி
நேருமேதேனெய்ப்படியளாதான்விட்டு
நினைவாகக்கூழ்போலக்கிண்டிவாங்கே. (கரு)

வாங்கியேபுன்னைக்காயளவுவீதம்
வளமானலேகியத்தைக்கொண்டாயானால்
நீங்குமேகாமாலைசோகையெல்லாம்
நீங்காதவஸ்திசுரமஸ்திவெட்டை
தாங்கியதோர்பிரமியங்கள்வெள்ளைவீழ்தல்
தளமாகும்தேகபுஷ்டிவிந்துவூறும்
பாங்கியேயூஷ்ணநோய்நீர்சுருக்கும்
பறக்கும்புளிபுகையிலைநீதள்ளிக்கொள்ளே. (கசா)

சரபங்கவில்வாதிலேகியம்.

கொள்ளவேயின்னமொன்றுசொல்லக்கேளு
குணமானசரபங்கவில்வாதிலேகியம்
விள்ளவேவில்வவேர்முட்காவேளை
விருதானசங்கவேர்வகைக்குத்தூக்கு
தெள்ளவேசிற்றமல்லிசிற்றுமுட்டி
திறமானபேர்மல்லி*கூந்தல்முள்ளி
நள்ளவேசாரணைவேர்கண்டங்காலி
நவமானவிலாமிச்சைநெந்தில்தானே. (கஎ)

* கூந்தல்-முதியார்கூந்தல்.

தானென்றகொடிவேலிபொன்முசுட்டை
தளமானநல்லரிசிறுதேக்கப்பா
வானென்றமூலிவகைபதின்மூன்றுந்தான்
வளமானபலமஞ்சுஇடித்துநைய
வேனென்றவாற்றுநீர்தூணிவிட்டு
விளங்கவேயெட்டொன்றாய்நிறுத்திக்கொண்டு
கானென்றகன்னல்வெல்லஞ்சேர்தானுவு
கருவானவாவின்பால்படியிரண்டுசேர். (கஅ)

சேர்த்தப்பாகரைத்ததிலேபாகுசெய்து
திறமானதிரிகடுகுதிரிபலாதி
வார்த்ததிலேகிராம்பேலமிருசீரகந்தான்
வளமானகோஷ்டந்தாளீசபத்திரி
தாத்ததிலேயோமரண்டரத்தைரண்டு
தளமானகொத்தமல்லிலவங்கப்பட்டை
ஆத்திலேயக்கிரகாரமத்திதிப்பிலி
அப்பனேவால்மிளகுசாதிக்காயாமே. (௯௯)

ஆமப்பாவகையொன்றுபலமொன்றாக
அப்பனேயிளவறுப்பாய்சூரணித்து
சேமப்பாபாகிலேதூவிக்கொண்டு
திறமானதேன்படிநெய்யரைதான்விட்டு
நாமப்பாகுழம்புபோல்வாங்கிவைத்து
நலமாககழஞ்சிதிரையிருநேரங்கொள்ள
தாமப்பாபித்தவெட்டைபாண்டுஆறுந்
தவறுண்டுபோகுமடாசயமெட்டுந்தானே. (௱)

தானென்றகுன்மமெட்டும்கிராணியாறுந்
தடமானவாய்கசப்புவெள்ளோக்காளந்
தேனென்றவாயூறலக்கினிமந்தந்
திறமானசூலையொடுகைகால்காந்தல்
பானென்றபித்தமதுநாற்பதுந்தான்
பறக்குமடாமண்டலத்தில்பரிந்துகொள்ளு
வேனென்றபத்தியந்தான்புளிகசப்பு
விளங்கியதோர்ப்புகையோடுபெண்ணுந்தள்ளே.

தள்ளப்பாதிரிலோகம்வைத்துக்கொள்ளு
தளமானவாலரசச்செந்தூரந்தான்
கொள்ளப்பாலோகசெந்தூரந்தானுங்
குறையாமற்பணவெடைதான்வைத்துக்கொள்ளு
தள்ளப்பாபித்தமென்றதெல்லாம்போகும்
தருவானசேத்துமங்கள்தொண்ணூற்றாறும்
விள்ளப்பாகடல்புக்குங்கண்டுகொள்ளு
விருதாகவின்னமொருசேதிகேளே. (௱௨)

## கண்டங்கத்திரிலேகியம்.

கேளப்பாமுகாகண்டங்கத்திரியான
 கொடியானலேகியந்தான்சொல்லக்கேளு
நாளப்பாவாற்றுமுள்ளிபலந்தானூறு
 நவமானகரிமுள்ளியதற்குப்பாதி
தாளப்பாசிற்றுமுட்டிபேராமுட்டி
 தளமானமிளகருணைகொடுவேலிகளாவும்
ஆளப்பாவாதண்டைச்சிறுகாஞ்சோரி
 அப்பனேவிலாமிச்சைமுட்காவேளையாமே. (௩௩)

ஆமப்பாகோரையுடனுத்தாமணியும்
 அப்பனேகழற்கொடியுமாவிலிங்கம்
தாமப்பாவகையொன்றுபலமொன்றாகத்
 தவறுமலிடித்தேயிருதூணிநீரில்
வேமப்பாவெட்டொன்றாயிறுத்துவாங்கி
 விருதானகொம்மட்டிப்பழநற்சாறு
தாமப்பாபடியளாயுங்கூடவிட்டு
 தளமானவாவின்பால்படிதானிரண்டே. (௩௪

ரெண்டானசர்க்கரைதான்பலமூவைந்து
 நினைவாகக்கரைத்ததிலேபாகுசேரில்
கண்டானகடைசரக்குசொல்லக்கேளு
 கருவானதிரிகடுகுதிரிபலாதி
நன்றானசிங்கியிருசீரகந்தான்
 நலமானவரத்தையக்கிராலவுங்கப்பட்டைப்
பின்றுதலவுங்கஞ்சாதிக்காய்பத்திரி
 பேராத்தைலவுங்கப்பத்திரியுங்கூட்டே. (௩௫)

கூட்டுவாய்வகையொன்றுபலமொன்றாகக்
 கூசாமலிளவறுப்பாய்ச்சூரணித்து
நாட்டுவாய்பாகிலேதூவிக்கிண்டி
 நலமாகத்தேன்படிநெய்யரைதான்விட்டு
காட்டுவாய்மெழுகுபோல்கிண்டிக்கிண்டி
 கசகாமல்பீங்கானில்வழித்துவைத்து
சேட்டுவாய்லேகியந்தான்புன்னைக்காய்விதம்
 திறமாகமண்டலத்திற்றிருநோய்கள்; (௩௬)

கேளுதான்சயமெட்டும்குன்மமெட்டும்
கெடியானவாதமென்றதெண்பதும்போம்
நாளுதானிளைப்பீளைவிழிநீர்கோவை
நாடாதுஇசிவுமுதல்கழல்வாதங்கள்
தாளுதால்கெற்பவெட்டைகெற்பச்சூலை
தவறுண்டுபோகுமதுபுழுக்களெல்லாம்
ஆளுதான்தாளகமும்லோகங்கூட்டி
அடைவாகக்கொண்டுவரத்திரும்பாரே. (௬௭)

கபாடலேகியம்.

பாருமேகபாடலேகியத்தைச்சொல்வேன்
பண்பானநாவலொடுவரசுவத்தி
சேருமேகருங்காலியொதியப்பட்டை
திறமாகப்பலம்பத்துநிறுத்துக்கொண்டு
சாருமேயிடித்துறையத்தாணிநீரில்
தளமாகவடுப்பேற்றியெட்டொன்றாக்கி
வாருமேபனைவெல்லம்பலந்தான்பத்து
வளமாகக்கரைத்ததனிற்பாகுசெய்யே. (௬௮)

பாகிலேதூவுதற்குமருந்துகேளு
பதறுமல்கஞ்சாவைச்சுத்திசெய்து
பாகிலேபலமொன்றுதூக்கிக்கொண்டு
பாங்கானமிளகுசுக்குசீரகமுங்கூட
பாகிலேயோமமொடுகோசாணியோமம்
பருவமாய்ச்சிங்கிகாட்டாத்திப்பூவும்
பாகிலேவால்மிளகுசிறுநாகப்பூ
பக்குவமாமல்லியோடேலமாகும். (௬௯)

ஆகுமேகிராம்புடனேசாதிபத்தி
அடைவானசாதிக்காய்விடையந்திப்பிலி
நாகுமேவகையொன்றுபலமொன்றாக
நலமாகவிளவறுப்பாய்ச்சூரணித்து
வேகமேபாகிலேதூவியேதான்
வெகுசுருக்காய்த்தேனெய்யும்விட்டுக்கிண்டி
தாகுமேபீங்கானில்பதனம்பண்ணி
தப்பாமல்மண்டலந்தான்பாக்களவுகொள்ளே. (௭௰)

அளவாகக்கொண்டுவரத்தீரும்நோய்கள்
அதிகமுள்ளகுசிகாகிராணிவாய்வு
பளுவானகடுப்புமுதற்பாண்டுகிராணி
பாங்கானபேதியொடுவுஷ்ணவாய்வு
களவாகமூலத்தின்கிராணிவாய்வு
கண்காணுதோடுமதுமற்றவாய்வு
வளமாகக்கிராணியெல்லாந்தீருந்தீரும்
மார்க்கமுடனின்னமொருவரிசைபாரே. (௱௰௧)

திப்பிலிரசாயனம்

பாருமேதிப்பிலிரசாயனஞ்சொல்வேன்
பகருகின்றதிப்பியும்பலந்தான்பத்து
சேருமேமிளகும்சுசுக்குமஞ்சு
திறமானவிருசீரமோமம்ரண்டு
ஆருமேயரத்தைரண்டுதாளிசப்பத்திரி
அடைவானலவுங்கப்பத்திரியும்பட்டைக்
காருமேதிரிபலையலவுங்கமேலங்
கனமானகொடிவேலிபலமொன்றுதூக்கே. (௱௰௨

தூக்கியேயிளவறுப்பாய்சூரணித்துச்
சுகமானசர்க்கரைதான்சமனுக்கூட்டி
தாக்கியேதேன்விட்டுப்பிசைந்துக்கொண்டு
தப்பாமல்வெருகடிதான்கொள்ளும்போது
தேக்கியேயிளைப்போடேயீளைகாசம்
திறமானசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
நீக்கியேயுதரத்தில்வாய்வுவெல்லாம்
நீங்கிவிடுமண்டலத்தில்நினைவாய்ப்பாரே (௱௰௩)

மஸ்துமிரசாயனம்

பார்த்திடுவாய்புலத்தியனேமேகவகைதீரப்
பண்பானமஸ்துமிரசாயனஞ்சொல்வேன்
சேர்த்திடுவாய்சினமுதலமுக்குறுவேர்
திறமானவகையொன்றுபலம்பத்தாகும்
சாற்றிடுவாய்திலப்பனைவேர்பலந்தானைந்து
தளமானதண்ணீர்மிட்டான்பலந்தான்ரண்டு
ஆற்றிடுவாய்நன்னாரிசங்குமூலம்
அன்பானதிரிகடுகுதிரிபலையுமாமே. (௱௰௪)

ஆமப்பாலவுங்கத்தோல்லவுங்கப்பத்திரி
அப்பனேசிறநாகம்வாய்விளங்கம்
போமப்பாமல்லியிருசீரமோமம்
புகழானகுரோசாணிஅரத்தைகெந்தம்
நாமப்பாசிறுதேக்குகண்டங்காலி
நலமானகொடிவேலிவிலாமிச்சைமூலம்
தாமப்பாதக்கோலம்வால்மிளகினோடு
தளமானமுந்திரிகைபேரீச்சுக்கூட்டே. (௱௰௫)

கூட்டப்பாவெட்பாலைதாமரைக்கிழங்கு
குலமானசாதிக்காய்கிராம்புபத்திரி
நாட்டப்பாகருவேம்பினிலைவகைக்கு
நலமாகப்பலமொன்றுநிறுத்துக்கொண்டு
காட்டப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துக்
கருவானகுங்குமப்பூகோரோசினைகர்ப்பூரம்
வாட்டப்பாகழஞ்சுநிறைகூடச்சேர்த்து
வளமானசர்க்கரைசேர்தானுவாங்கே. (௱௰௬)

வாங்கியேயாவின்பால்படிதானுநு
வளமானசர்க்கரையைக்கரைத்துக்கொண்டு
பாங்கியேபாகுபதமாகும்போது
பதருதேசூரணத்தைப்பாய்ச்சிக்கொண்டு
தேங்கியேதேன்படிதானொன்றுவாரு
திறமானவாவினெய்யரைதானப்பா
வாங்கியேமெழுகுபோல்கிண்டிக்கிண்டி
வளமான்பீங்கானில்பதனம்பண்ணே. (௱௰௭)

பண்ணப்பாவிருநேரம்பாக்களவுகொள்ளப்
பரிவுடனேதீருகின்றவியாதிகேளு
புண்ணப்பாகிரந்தியொடுசூலைதீரும்
புதுமையாங்கண்டத்தில்மாலைதீரும்
நண்ணப்பாவாய்வோடுவாதமெல்லாம்
நாடாதுபிரமியங்கள்லிங்கப்புற்று
தண்ணப்பாசேத்துமநோய்தொண்ணூற்றாறுந்
தவறுண்டேபோகுமடாபத்தியங்காரே. (௱௰௮)

## சவுபாக்கியசுண்டி:

காரப்பாவுலகத்தோர்நோய்களெல்லாங்
கலங்குமடாசவுபாக்கியசுண்டியென்றால்

நேரப்பாசுக்குதான்பலந்தானெட்டு
    நினைவாகமேற்றோலைச்சீவிப்போட்டு
சாரப்பாமொச்சைவிளாபிரமாணந்தான்
    தளமாகவேநறுக்கிப்புதுச்சட்டிக்குட்
சேரப்பாசெம்முள்ளிச்செந்திராயும்
    திறமானமுருக்கிலையுங்கரிசாலையாமே. (௱௰கூ)

ஆமப்பாசிறுசெருப்புகாற்றுவாட்டி
    அப்பனேசாறுவகைபடிகால்வீதம்
நாமப்பாபுதுசட்டிச்சுக்கில்விட்டு
    நலமாகவெவ்வேறேரவியுலர்த்தி
தாமப்பாவிடித்துநன்றாய்ச்சூரணித்து
    தளமாகவடிகொண்டேயப்பால்வைத்து
போமப்பாதக்கோலம்வாலுளுவைவித்து
    புகழான்கூகைநீறு*கரியம்போளங்கூட்டே. (௱௨௰

* கரியபோளம்-கறுப்புக்குங்கிலியம்.

கூட்டப்பாவாய்விளங்கந்தான்றிக்காய்நெல்லி
    கூறானதிப்பிலியுந்திப்பிலிமூலம்
நாட்டப்பாவகையொன்றுபலந்தான்வாங்கி
    நலமாகவிளவறுப்பாய்ச்சூரணித்து
கூட்டப்பாவமுக்குறூப்பொன்முசுக்கை
    குருவானகண்டங்கத்திரிநன்னாரி
நீட்டப்பாநிலப்பனையும்வகையொன்றுக்கு
    நினைவாகப்பலமிரண்டுநிறுத்துக்கொள்ளே (௱௨௧

கொள்ளப்பாசுத்திசெய்திடித்துத்தூளாய்க்
    குணமாகவடிகொண்டுவைத்துக்கொண்டு
விள்ளப்பாமூவகைத்தூளொன்றாய்க்கூட்டி
    விளங்கவேசர்க்கரையைச்சமனாய்வாங்கி
நள்ளப்பாவாவின்பால்படியிரண்டில்
    நலமாகச்சர்க்கரையைக்கரைத்துக்கொண்டு
அள்ளப்பாவடுப்பேற்றிப்பாகதானால்
    அப்பனேமூன்றுூளைக்கொட்டிக்கிண்டே. (௱௨௨)

கிண்டப்பாதூளாகநன்றாய்க்கிண்டி
    கிருவைப்பாய்ப்புதுக்கலசந்தனிலடைத்து
நண்டப்பாவெருகடிதானிருநேரங்கொள்ள
    நலமாகத்தீருநோய்நவிலக்கேளு
கண்டப்பாகிராணிவகையெல்லாந்தீருங்
    கருவானபிரமியங்கள்சூசிகவாய்வு

கண்டப்பாவாதமொடுபித்தமெல்லாங்
    கண்காணுதோடமடாகண்டுகொள்ளே. (௱௨௫)

கொள்ளவேயந்திரமாம்வாய்வுதீரும்
    கூறுனமேகவகைவாதைச்சூலை
கொள்ளவேயக்கினியாமந்தந்தீரும்
    கூர்ப்பானவாயூறல்வாய்கசப்பு
கொள்ளவேவயிற்றிலுள்ளவியாதியெல்லாங்
    குடிபோகுஞ்சவுபாக்கியசுண்டிகண்டால்
கொள்ளவேபுளிகசப்புப்பத்தியந்தான்
    கூறுனபுகையோடுபெண்ணுந்தள்ளே. (௱௨௬)

அக்கினிசூரணம்.

தள்ளப்பாவக்கினியாஞ்சூரணத்தைச்சொல்வேன்
    தளமானகொடிவேலிதிரிகடுகுவோமம்
விள்ளப்பாசிறுதேக்குயானைதிப்பிலியுங்கோஷ்டம்
    விளங்கியதோரிரண்டுப்புவகையொன்றுபலந்தான்
நள்ளப்பாகாயங்கால்வசம்புகால்தான்
    நலமானகடுகுபொடியரைப்பலந்தான்கூட்டி
தெள்ளப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துத்
    திறமானசீனிசமன்கூட்டிக்கொள்ளே. (௱௨௭)

திரிராக்ஷதசூரணம்.

கொள்ளவேவெருகடித்தூள்வெந்நீரிற்கொள்ளக்
    கூறுனகிராணிவகையுதிரவாய்வு
பள்ளமேவமுகவாய்வுவாதமெல்லாம்
    பறக்குமதுதிரிராக்ஷதசூரணங்கேள்
தள்ளவேமுந்திரிகைப்பேரீச்சம்பழந்தான்
    தளமானவதிமதுரம்முட்காவேளை
நள்ளவேநெற்பொரியு*முத்தக்காசு
    நலமானவேலமொடுகிராம்புகூட்டே. (௱௨௮)

*-முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

கூட்டுவாய்கொத்தமல்லிமிளகுவேலி
    கூறுனதிப்பிலியுங்கூகைநீறும்
நாட்டுவாய்சாதிக்காய்சாதிபத்திரிகூட
    நலமானவால்மிளகுலவுங்கப்பத்திரி
ஆட்டுவாய்வகையொன்றுபலமொன்றாக
    அப்பனேசூரணித்துசர்க்கரையைக்கூட்டி
வேட்டுவாய்வெருகடிதான்தேனிற்கொள்ள
    வெகுசுருக்காய்ச்சொல்லுகிறேன்விளம்பக்கேளே.

கேளப்பாவந்திரவாய்வுபாண்டுரோகம்
    கெடியானதாபசுரமயக்கம்தூக்கம்
வாளப்பாபித்தவகைநாற்பதுந்தான்
    வளமானவரோசிகங்களன்னதோஷம்
நாளப்பாவுஷ்ணநோய்சேத்துமங்கள்
    நலமானவக்கினியாமந்தவாய்வு
தாளப்பாகையெரிவுகாந்தலெல்லாம்
    தவறுண்டேபோகுமடாநெய்யிற்கொள்ளே. ()

அசுவகெந்திசூரணம்

கொள்ளவேயசுவகெந்திசூரணங்கேள்
    குலமானலவங்கமொன்றுநாகப்பூரண்டு
தள்ளவேயேலம்நால்மிளகோரெட்டு
    தளமானதிப்பிலியீரெட்டுசுக்கு
விள்ளவேமுப்பத்திரண்டுங்கூட்டி
    விசையானவசுவகெந்தியறுபத்துநாலும்
நள்ளவேசுத்திசெய்துலர்த்திக்கொண்டு
    நலமாகவிளவறுப்பாய்சூரணந்தான்செய்யே. ()

செய்யப்பாசமனாய்ச்சர்க்கரையைக்கூட்டி
    திறமானவாவின்பால்நெய்யிற்கொள்ள
கையப்பாவெருகடிதான்கொள்ளும்போது
    கனமானமேகவகையெல்லாந்தீரும்
மெய்யப்பாவஸ்திசுரம்வெட்டைப்போகும்
    மேலானசுவாசமோடிளைபோகும்
தையப்பாமேகத்தின்பாண்டுபோகும்
    தளமானவூறலெல்லாஞ்சாராதன்றே. (௱௩௰)

கண்டாத்திரிசூரணம்.

சாரவேகண்டாத்திரிசூரணஞ்சொல்வேன்
    தருவானவிஞ்சியதுபலந்தான்பத்து
சேரவேமேற்றோலைப்போக்கிப்போட்டு
    சிறுகவேநறுக்கியதைப்பழச்சாறாட்டி
தாரவேநாளொன்றுஊறப்போட்டு
    தவறுமல்மறுநாள்தான்ரவியுலர்த்தி
ஆரவேசீரகமும்பலந்தானொன்று
    அப்பனேமுன்போலேபழச்சாறாட்டே. (௱௩௧)

ஊட்டியேமறுநாள்தான்காயப்போட்டு
    உத்தமனேமிளகொடுதாளீசபத்திரி

நாட்டியேதிப்பிலியில் மூலங்கிராம்பு
நலமானகோஷ்டமொடுவாய்விளங்கம்
வாட்டியேயிளவறுப்பாய்ச்சூரணித்து
வளமானசர்க்கரைதான்சமனாய்க்கூட்டி
நீட்டியேவெருகடிதான்கொண்டாயானால்
நீங்கிவிடும்பித்தமுதல்வாய்வுபோமே. (௱௩௨)

போமப்பாவரோசியங்களன்னதோஷம்
புகழானபித்தவெட்டைபொருமல்விம்மல்
நாமப்பாவாயுவொடுவாதமெல்லாம்
நாடாதுசூலையெல்லாநலிணமாகும்
சேமப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்லாம்
திறமாகத்தீருமடாபத்தியங்கார்
நாமப்பாவுலகோர்க்காயிரங்கிச்சொன்னோம்
நலமானசூரணத்தைநாட்டிப்பாரே. (௱௩௩)

தாளிசப்பத்திரிசூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன்புலத்தியனேயையா
நலமானதாளீசப்பத்திரிசூரணந்தான்
காட்டியேதாளீசப்பத்திரிபலந்தான்பத்து
கருவானதிரிகடுகுதிரிபலாதி
நீட்டியேகோஷ்டமோடக்கிராகாரம்
நினைவாகவத்தித்திப்பிலிசீரகம்
கூட்டியேகொத்தமல்லிவாய்விளங்கங்
கூறானகிராம்பேலஞ்சாதிக்காயே. (௱௩௪)

காயோடுபத்திரியுமாஞ்சில்சோம்பு
கருவானவால்மிளகுலவுங்கப்பட்டை
தாயோடுவிவையெல்லாம்பலமொன்றாக
தவறாமல்சூரணித்துவடிகட்டிக்கொண்டு
சேயோடுசர்க்கரைதான்சமனாய்க்கூட்டித்
திறமாகபிசைந்துகொண்டுவெருகடிதானேரம்
வாயோடுமண்டலந்தான்கொண்டாயானால்
வாங்குமடாக்ஷயகாசபீனிபோமே. (௱௩௫)

போமடாவஸ்திசுரமஸ்திவெட்டை
பொறுக்காதநீர்த்தாரைம்புண்ணுநெஞ்சில்
நாமடாபித்தவெட்டைபித்தப்பாண்டு
நாடாதுகிராணிவகையெல்லாந்தீரும்
தாமடாவரோசிகங்களன்னதோஷம்
தளராதவிப்புமொடுவிக்கல்கக்கல்

சாமடாங்கைகாலிலெரிவுகாந்தல்
சாந்தமாம்புளியேப்புகையுந்தள்ளே. (௱௬௫)

## பஞ்சதீபாக்கினி சூரணம்.

தள்ளவேபஞ்சதீபாக்கினியென்னுந்
தளமானசூரணத்தைச்சொல்லக்கேளு
விள்ளவேதிரிகடுகோட்டஞ்சீரகம்
விதமாகவகையொன்றுபலமொன்றாக
நள்ளவேயிளவறுப்பாய்ச்சூரணித்து
நலமாகவடிகொண்டுசர்க்கரைதான்சேர்த்து
தெள்ளவேதெனெய்யில்வெருகடிதான்கொள்ளத்
திடமாகத்தீருநோய்செப்பக்கேளே. (௱௬௭)

செப்புகிறேனுஷ்ணநோய்சூலைவாய்வு
சேர்ந்தபித்தவாயுவொடுசிலேத்மரோகம்
தப்புகிறேன்பொருமலொடுசெரியாமந்தம்
தளமானமயக்கமொடுகிறுகிறுப்பு
வெப்புகிறேன்ஸ்திசுரமஸ்திவெட்டை
வேறானமூலத்தின்வாய்வுதீரும்
நப்புகிறேன்புளிகசப்புபுகையுந்தள்ளு
நலமானசாந்தம்வைத்துநலமாய்க்கொள்ளே. ()

## நிலவாகைச்சூரணம்.

நலமாகச்சூரணமொன்றுசொல்லக்கேளு
நன்றானநிலவாகைச்சுக்குங்கூட்டி
பிலமாகமிளகுவாய்விளங்குமோமம்
பேராகவகைக்குவொருபலமேதூக்கி
சிலமாகரவிமுகத்திலுலரப்போட்டு
சிதறாமலிடித்துச்சூரணமேசெய்து
நலமாகச்சர்க்கரைதான்சமனாய்க்கூட்டித்
தவறாமலிருநேரங்கொண்டாற்கேளே. (௱௬௯)

கேளப்பாவாயுவென்றவிதமெலாய்போகுங்
கெடியானபித்தமெல்லாந்நீங்கிப்போம்
வாளப்பாஉஷ்ணநோயெல்லாந்தீரும்
வளமானபொருமலொடுவிக்கல்தீரும்
நாளப்பாசேத்துமநோயெல்லாந்தீரும்
நலமானவிக்கலொடுவாந்திதீரும்
தாளப்பாவுடம்பெரிவுசுவாசகாசம்
தவறுண்டுபோகுமடாசாற்றக்கேளே. (௱௭௰)

சாற்றுகிறேனீரருகல்மலபந்தங்கள்
தளராதவயிறுவிம்மலிருமல்தீரும்
தேற்றுகிறேன்குன்மமெட்டுமேகோதரங்கள்
தெளிவானவாயுவெல்லாந்தீருந்தீரும்
ஆற்றுகிறேன்கெற்பவலிகெற்பரோகம்
ஆச்சரியம்புருக்கலெல்லாமகன்றுபோகும்
காற்றுகிறேன்வெந்நீரிற்கொண்டாயானால்
கலங்காதேவயிற்றிலுள்ளவியாதிபோமே. (௱௬௧)

வல்லாரைச்சூரணம்.

போமப்பாசூரணமொன்றுசொல்லக்கேளு
புதுமையாம்வல்லாரைப்பாலிற்போட்டு
நாமப்பாவவித்துலர்த்திக்காயப்போட்டு
நலமாகச்சூரணித்துப்பலம்பத்தானால்
தாமப்பாகிராம்பேலஞ்சாதிக்காயும்
தளமானபத்திரியுமாசக்காயும்
தேமப்பாதாளிசப்பத்திரித்திரிபலாதி
திறமாகவிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே.

செய்யப்பாவகையொன்றுபலந்தானென்று
திறமாகவிரண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
பையப்பாசர்க்கரைதான்சமமாய்க்கூட்டிப்
பதறாமல்வெருகடிதானெய்யிற்கொள்ள
தையப்பாமேகமெல்லாந்தவறுண்டேபோம்
சரீரத்தில்சாந்தியெல்லாஞ்சாந்தமாகும்
கையப்பாபிரமியங்களிரந்தியெல்லாம்
கனமானவுஷ்ணநோய்காணாதன்றே. (௱௬௩)

காணாதநீரருகல்நீரெரிப்பு
கண்ணெரிவுகண்புகைச்சல்காணாதோடும்
தோணாதேயுடம்பெரிவுமலச்சூடும்
சுறுக்கானநீர்ச்சூடுங்குளிர்ந்துபோகும்
நாணாதுமதுமேகந்தந்திமேகம்
நாடாதுக்ஷயரோகநளினமாகும்
கோணாதுதேகமெல்லாங்குளிர்ச்சிகாணும்
கொண்டுவாவப்பிரோகம்தைக்கொள்ளே (௱௬௪

சஞ்சீவிசூரணம்.

கொள்ளவேசஞ்சீவிசூரணத்தைச்சொல்வேன்
குணமானசீந்திலடித்தண்டுவாங்கி

விள்ளவேமேறன்ருலைவாங்கிப்போட்டு
வெருளாதேநறுக்கியதையுலரப்போட்டு
கள்ளவேயிடித்துநன்றாய்ச்சூரணித்துக்
கருவாகவடிகொண்டுபடித்தூள்வாங்கி
நள்ளவேமுந்நூற்றில்சுத்திசெய்து
நலமானபொடிபடிக்குஆவின்பாற்படியே.(௱௪௫

படியாகவரைப்படிதான்சீனிபோட்டு
பாங்காகரவியுலர்த்திக்காய்ந்தபின்பு
அடியாகவுரலிலிட்டிடித்துக்கொண்டு
அப்பனேசாதிக்காய்சாதிப்பத்திரி
கடியாகவால்மிளகுவேலங்கிராம்பு
கசகசாதாளிசமுமாசக்காயும்
வடிவாகவிளவறுப்பாய்ச்சூரணித்து
வளமாகவலகைக்கொருபலந்தான்கூட்டே.(௱௪௬

கூட்டியேயிரண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
குறையாமலாறுபலஞ்சீனிசேர்த்து
நாட்டியேவெருகடிதானெய்யிற்கொள்ள
நலமாகத்திருநோய்நவிலக்கேளு
தாட்டிகமாமேகநீரிருபதும்போம்
தளமானபிரமியங்கள்மேகமெல்லாம்
ாட்டியேவற்றியதோர்தேகமெல்லாம்
ளமாகுமஸ்திசுரம்வெட்டைபோமே. (௱௪௭)

பே ப்பாமூலத்தின்சூடுபோகும்
பெ ல்லாதபித்தவகையெல்லாம்போகும்
நாமப்ப கண்ணெரிவுகைகால்காந்தல்
நாடா தேகமெல்லாங்குளிர்ச்சியாகும்
தாமப்பா லெல்லாந்தவறுண்டேபோம்
தளமானக ாலத்தின்ரணங்கள்தீரும்
வேமப்பாவா ச்செந்தூரந்தான்
வெகுசுருக்க ்பணவெடைப்பிரோகங்கொள்ளே

லாதிசூரணம்.

கொள்ளவேயேலாதி ரணங்கேள்
குணமானலவுங்கபெ ன்றுமிளகிரண்டு
விள்ளவேநாகம்நால்தா சமெட்டு
விதமானகூகைநீறுபதி ருகும்

நள்ளவேசுக்கதுதான்முப்பத்திரண்டு
நலமானவேலமதுவறுபத்துநாலு
கள்ளவேசர்க்கரைதான்சமனாய்க்கூட்டிக்
கலந்துபுதுகலசமதிற்பதனம்பண்ணே. (௱௪௯)

பண்ணவேவெருசடிதுளிருநேரங்கொள்ளப்
பறக்குமடாபித்தமொடுவாதம்வாய்வு
தன்னவேகிரந்திரிணமரிகிரந்தி
தளமானமேலூறல்சொரிசிரங்கு
நண்ணவேசிலவிஷிங்களுடாதோடும்
நலமானகுஷ்டமொடுகுறைநோய்தீரும்
பெண்ணவேபெரும்பாடுவெளும்புருக்கிப்
பின்பாராதோடுயின்னமொன்றுகேளே (௱௫௰)

அசுவகெந்திபலாராக்ஷதைலம்.

ஒன்றானவுலகத்தோர்நோய்கட்கெல்லாம்
உரைக்கிறேன்தைலமொன்றுரிதமாக
நன்றானவசுவகெந்திபலாராக்ஷத
நாமமதுசொல்லுகிறேனவிலக்கேளு
சென்றானவசுவகெந்திப்பலமுமைந்து
சிற்றாமுட்டிப்பதினைந்துவெள்ளெருக்குநாலு
குன்றானநல்லுரிசிந்தில்விலாமிச்சு
கோரையுடனெய்ச்சட்டியவுரியெண்ணே. (௱௫௧)

எண்ணவேநாரத்தைதுளசிவெட்டி
இதமானமூலவகைபலத்தானாலு
நண்ணவேயகில்நாலுதேவதாரநாலு
நலமானகீழ்நாடன்பலந்தானெட்டு
தண்ணவேகொம்பரக்குபலந்தானெட்டு
தள்ளிவிட்டுவகையெல்லாம்பதினைந்தாகும்
ஒண்ணவேயிடித்துநன்றாயிருதூணிநீரில்
ஒருவிறகாய்த்தீயிட்டுசோடசத்தொன்றாக்கே (௱௫௨)

ஆக்குவாயெள்ளெண்ணெய்சேர்தானைந்து
அதின்பாதிதயிர்தண்ணீர்பால்சேரைந்து
தூக்குவாய்கலக்கவகைமருந்துகேளு
துடியானதிரிகடுகுதிரிபலாதி
மாக்குவாய்கஸ்தூரிமதுரங்கோஷ்டம்
மாஞ்சில்முச்சீரகமும்பூஞ்சாந்துகெந்தம்
பாக்குவாய்மஞ்சள்ரோகணிசெவ்வள்ளி
பச்சிலைபூலாமூலங்கிளியூறல்கூட்டே (௱௫௩)

கூட்டுவாய்சதகுப்பிலவுங்கப்பட்டை
கூறேலம்வகைக்கனாப்பலமதாக
ஆட்டுவாயாவின்பால்விட்டுநன்றாய்
அப்பனேகியாழமெண்ணெய்தனிற்கரைத்து
நாட்டுவாயடுப்பேற்றிக்கொதிக்கும்போது
நலமாகமுன்னரக்குக்கியாழம்விட்டு
மூட்டுவாயடுப்பேற்றிமுதிராமற்றான்
முன்னவற்குப்பூசித்துவடித்திடாயே. (௩௰௪)

வடித்திட்டதைலமதுமுழுகும்போது
வாகாகத்திருகிறவியாதிகேளு
பிடித்திட்டமேகத்தின்சூலைபதினெட்டும்
பேரானவாதத்தின்சூலைதானும்
மடித்திட்டவாதசுரம்பித்தசுரவாய்வு
மயக்கமொடுசிலேத்மசுரமாண்டுபோகும்
அடித்திட்டுச்சன்னுமடாபித்தவெட்டையெல்லாம்
அணுகாதேயக்கினியாமந்தந்தானே (௩௰௫)

மந்தமொடுபாண்டுவகையெல்லாம்போகும்
மைந்தனேகண்புகைச்சல்கைகால்காந்தல்
பெந்தமாமுடம்பெரிவுசுவாசகாசம்
பின்பாராதோடுமடாமேகமெல்லாம்
பந்தமாம்பத்தியங்கள்புளிகசப்புப்
பாங்கானபுகையோடுபெண்ணுந்தள்ளு
இந்தவகையென்னைப்போலியாருஞ்சொல்லார்
இகத்திலுள்ளோர்பிழைக்கவென்றிரங்கினேனே.

## வில்வாதிலேகியம்.

இரங்கியேதைலமொன்றுசொல்லக்கேளு
இதமானவில்வாதியென்றநாமம்
பரங்கியேவில்வம்விலாமிச்சைக்கோரை
பாங்கானசஞ்சீவிவகையொன்றுக்கு
தரங்கியேகீழ்நாடன்பலந்தானெட்டு
தானிடித்துகலவெள்ளநீரிற்போட்டு
அரங்கியேசோடசத்தொன்றாகக்காய்ச்சி
அப்பனேகொம்பரக்குசேர்தான்ரண்டே (௩௰௭)

ரண்டான துணிநீரொட்டொன்றாக்கி
நினைவாகஎள்ளெண்ணெய்படிதான்சுத்தி
குன்றனவாவின்பால்படிதானஞ்சு
குலமானகற்கவகைசொல்லக்கேளு

நன்றானதிரிகடுகுதிரிபலாதி
நலமானகஸ்தூரிமதுரங்கோஷ்டம்
கன்றானவிருசீரமாஞ்சில்மஞ்சள்
கருத்துகெந்தங்கிளியூறல்பூஞ்சாந்தென்னே. (௱௫௮)

என்னவேசெவ்வள்ளிலவுங்கப்பட்டை
இதமானபச்சையொடுபூலாவேலம்
பன்னவேவகையொன்றுபலந்தான்வாங்கி
பாங்கானவாவின்பால்விட்டேயாட்டி
முன்னவேகியாழமெண்ணெய்தனிற்கரைத்து
மோகமாயடுப்பேற்றிக்கமலமாக
கன்னவேமுதிராமல்மெழுகுபதமானால்
கணபதியைப்பூசித்துவடித்திடாயே. (௱௫௯)

வடித்திட்டதைலமதுமுழுகும்போது
வாகாகத்தீருகிறவியாதிகேளு
பிடித்திட்டமேகநீரிருபதும்போம்
பேரானபித்தவகைநாற்பதும்போம்
துடித்திட்டகுன்மமெட்டுந்துலைந்துபோகுந்
துலையாதசிரசில்நோய்சொல்லாதோடுங்
கடித்திட்டமேகவகைவரட்சியெல்லாங்
கண்காணாதோடுமடாகருதிப்பாரே. (௱௬௰)

## குமரித்தைலம்.

கருதியேநீகேளுபுலத்தியனேயையா
கருவானகுமரியிடதைலஞ்சொல்வேன்
விருதானகுமரிச்சாற்படியிரண்டு
வெள்ளாவின்பாலதுதான்படியிரண்டு
சருதானஎள்ளெண்ணெய்படியிரண்டு
சாற்றுகிறேன்கற்கவகைதிரிகடுகுகோஷ்டம்
வருவானமாஞ்சிலொடுதிரிபலையுஞ்சீரம்
மதுரமோடுபூஞ்சாந்தோடேலமென்னே (௱௬௧)

என்னவேபச்சையிலைபூலாமூலம்
இதமானலவுங்கப்பத்திரியும்பட்டை
அன்னவேசெவ்வள்ளியக்கிரகாரம்
அருளானகஸ்தூரிலவுங்கங்கெந்தந்
தின்னவேகோகணிசெண்பகப்பூயானை
திப்பிலியுமந்திஷ்டிசோம்புமஞ்சள்
பன்னவேவகையொன்றுபலமாதான்வாங்கி
பரிவானவாவின்பால்விட்டிட்டாட்டே. (௱௬௨

ஆட்டியேகரைத்தெண்ணெய்ச்சாற்றினுள்ளே
அப்பனேயடுப்பேற்றிக்கமலமாக
மூட்டியேமெழுகுபதமாகவாங்கி
முதிராமல்வடித்ததனைச்சீசாவில்விட்டு
நாட்டுவாய்தானியத்தில்வைத்துமூடி
நலமாகமண்டலங்கால்சென்றபின்பு
தாட்டிகமாய்மண்டலந்தான்முழுகும்போது
சாதகமாய்தீருநோய்சாற்றக்கேளே. (௱௯௫)

கேளடாமேகமென்றதெல்லாம்போகும்
கெடியானவஸ்திசுரம்வெட்டைபோகும்
தாளடாபித்தமெல்லாஞ்சாந்தமாகுஞ்
சரீரத்தில்வரட்சிருதுவாரல்போகும்
வேளடாகுன்மமெட்டும்பாண்டுமாறும்
வெளுப்பானதேகமெல்லாம்வண்டுபோலாம்
வாளடாவைத்தியர்க்காய்தைலஞ்சொன்னேன்
வளமானமனமுடையோய்மகிழ்ந்துபாரே (௱௯௬

கொம்பரக்குத்தைலம்.

மகிழவேகொம்பரக்குத்தைலங்கேளு
மகத்தானகொம்பரக்குப்பலந்தானெட்டு
நெகிழவேதுணிநீரொட்டொன்றாக்கி
நிசமானதாளிக்குள்வடித்துவிட்டுத்
தகழவேஎள்ளெண்ணெய்சேர்தானஞ்சு
தயிர்தண்ணீர்சேரிரண்டுபால்சேரஞ்சு
திகழவேகாடியதுசேர்தானிரண்டு
நிசமாகக்கற்கவகைசொல்லக்கேளே: (௱௯௭)

கேளப்பாசதகுப்பைகடுகுரோணி
கிளியூறல்பூஞ்சாந்துபச்சைப்பூலா
நாளப்பாசெவ்வள்ளிலவுங்கப்பத்திரி
நலமானலவுங்கத்தோல்மாஞ்சில்கோஷ்டம்
தாளப்பாகஸ்தூரிமஞ்சாரங்கெந்தந்
தயவாகவிருசீரம்விருகுவேலம்
ஆளப்பாவகையொன்றுகழஞ்சிரண்டு
அப்பனேயாவின்பால்விட்டிட்டாட்டே (௱௯௮)
ஆட்டுவாயெண்ணெய்க்குட்கரைத்துவிட்டு
அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே
நாட்டியேவடித்ததனைமுழுகும்போது
நலமாகத்தீருகிறவியாதிகேளு

தாட்டிகமாம்பித்தவெட்டையஸ்திசுரம்போம்
தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும்
வாட்டியதோர்சீதசுரமாண்டுபோகும்
வற்றியதோர்தேகமெல்லாமூறும்பாரே. (ாசுள)

ஊறுமேகனவெட்டைகணசுரங்கள்
உத்தமனேகனப்பாண்டுவெளுத்ததேகந்
தேறுமேதேகத்தில்வலிகடுப்புத்
திறமானசூலையெல்லாந்தீருந்தீரும்
நாறுமேகற்றாழைபுறங்கைவீசி
நலமானதழுதளையுநாடாதோடும்
சீறுமேகாசமெல்லாந்தீர்ந்துபோகுந்
திறமானவொன்றைவிட்டொருநாளென்னே. ()

மிருகாமலத்தைலம்.

என்னவேபத்தியந்தான்புளிகசப்பு
இதமானபுகையோடுபெண்ணுமாகா
தன்னவேதைலமொன்றுசொல்லக்கேளு
தனமானமிருகாமலத்தைலஞ்சொல்வேன்
நன்னவேமிருகாமலச்சாறுபடிரண்டு
நலமானகாணிச்சாறுபடியிரண்டு
பன்னவேகுமரிச்சாறுபடியிரண்டு
பாங்கானசெவ்விளநீர்படிதானெட்டே. (ாசுகூ)

படியானசிறுகீலாசாறுபடிரண்டு
பழுதில்லாவாவின்பால்படிதான்ரண்டு
செடியானயெள்ளெண்ணெய்படிதான்மூன்று
சேர்க்கவிதிற்கற்கவகைமருந்துகேளும்
கொடியானமதுரமொடுகோஷ்டமேலங்
குரோசானிபச்சையிலைப்பூலாமூலம்
கடியானகஸ்தூரிமாஞ்சில்நீரங்
கருவானபத்திரியுஞ்சாதிக்காய்கூட்டே. (ாஎ0)

கூட்டுவாய்லவுங்கபத்திரியும்பட்டை
கொடிதானதிரிகடுகுதிரிபலாதி
நாட்டுவாய்பூஞ்சாந்துசோய்புவால்மிளகு
நலமானவகையொன்றுகழஞ்சுமூன்று
ஆட்டுவாயாவின்பால்விட்டுநன்றாய்
அப்பனேசாணெண்ணெய்தனிற்கரைத்து
மூட்டுவாயடுப்பேற்றிக்கமலமாக
முதிராமல்கணபதிக்குப்பூசைபண்ணே. (ாஎக)

பண்ணியேமெழுகுபதந்தனில்வடித்து
பாங்காகமுழுகிவரத்தீருநோய்கேள்
கண்ணிலேகாசமோடந்திமாலை
கருவானநேத்திரநோய்தொண்ணூற்று
மண்ணிலேபித்தவெட்டைபித்தவாய்வு
மயக்கமுடனஸ்திவெட்டைமாண்டுபோகும்
தண்ணிலேபுடம்பெரிவுகைகால்காந்தல்
தளமானவுஷ்ணநோய்சாராதென்னே. (ஙஎஉ)

சந்தனாதித்தைலம்.

சாரவேசந்தனாதித்தைலஞ்சொல்வேன்
சார்வானபுலத்தியனேசொல்லக்கேளு
சேரவேமலாக்காவின்சந்தனத்தூள்
செப்புகிறேனெடையொன்றுதூக்கியேதான்
வாரவேவிலாமிச்சைவெட்டிகோரை
வகையுடன்சீந்திலொடுசிற்றாமுட்டி
காரவேபேராமுட்டிபேராமல்லி
கருவானசிற்றாமல்லியசுவமாமே. (ஙஎங)

ஆமப்பாநன்னாரிபற்படகந்தான்
அப்பனேவகையொன்றுபலந்தானாகு
போமப்பாவிருதாணிவெள்ளநீரில்
பொடியாகவிடித்திடித்தடுப்பிலேற்றி
நாமப்பாசோடசத்தொன்றாகக்காய்ச்சி
நலமானபாண்டத்தில்வடித்துக்கொண்டு
தாமப்பாசெவ்விளநீர்படியிரண்டு
தப்பாமல்காணிச்சாறுபடியிரண்டுவாரே. (ஙஎச)

வாரப்பாசிறுகீரைபடிதானொன்று
வாகானபொடுதலைச்சாறுபடியொன்று
சேரப்பாவல்லாரைப்படிதானொன்று
சிறுசின்னிச்சாறுதான்படிதானொன்று
காரப்பாபொற்றலைச்சாறுபடியொன்று
கறுவானநெல்லியின்சாறுபடியொன்று
ஆரப்பாகர்ப்பூரவள்ளிச்சாறு
அழகாகக்கூடவிட்டுப்படிதானொன்றே. (ஙஎரு)

ஒன்றப்பாதாழையுடவிழுதின்சாறு
உத்தமனேயெள்ளெண்ணெய்ப்படிதான்மூன்று
நன்றப்பாநறுநெய்தான்படிதானொன்று
நலமானவாவின்பால்படிதானாகு

குன்றானதயிர்தண்ணீர்ப்படியிரண்டு
　குறையாமல்பாண்டத்திலூற்றிக்கொண்டு
சென்றுநீயடுப்பிலேகொதிக்கவைத்து
　திறமானகடைச்சரக்குசொல்லக்கேளே. (௱௭௬)

கேளப்பாதிரிகடுகுதிரிபலாதி
　கிருபையாங்கஸ்தூரிமதுரமேலம்
தாளப்பாபூஞ்சாந்துகிளியூறற்பட்டை
　தளமானலவுங்கப்பத்திரியும்பட்டை
நாளப்பாகிராம்புசாதிக்காய்பத்திரி
　நலமானபச்சையிலைபூலாமூலம்
ஆளப்பாசெவ்வள்ளிசெண்பகப்பூ
　அப்பனேகெந்தமொடுசிரம்ரண்டே (௱௭௭)

ரெண்டானசெங்கழுநீர்கோஷ்டமக்கிரா
　நிலையானமந்திஷ்டிபலகைமஞ்சள் .
சென்டானசந்தனமுமுத்தக்காசும்
　திருக்கானவலம்புரிக்காயிடம்புரிக்காய்
குன்றுமல்வகையொன்றுபலமதாய்தான்வாங்கி
　குலமானவாவின்பால்விட்டேயாட்டி
வென்றான*மேஷிப்பால்படியிரண்டில்கரைத்து
　விறவேவெண்ணெயிலேவிட்டுக்கேளே- (௱௭௮)

* மேஷிம்-வெள்ளாடு.

கேளப்பாவடிப்பேற்றிக்கமலமாகக்
　கிருபையால்மெழுகுபதந்தனிலேதான்
நாளப்பாகணபதிக்குப்பூசைபண்ணி
　நலமானகம்பிளியால்வடித்துக்கொண்டு
தாளப்பாகுங்குமப்பூகோரோசினையும்
　தளமானபுழுகதிலேகமழ்ஞ்சுவிதம்
கோளப்பாபொடித்திட்டுக்கலசத்துள்ளே
　குணமாகத்தாளியதில்வைத்துமூடே. (௱௭௯)

மூடியேமண்டலங்கால்சென்றபின்பு
　முழுகிவரச்சீயக்காயளைப்பதாரும்
நாடியேதிருகிறவியாதிகேளு
　நாடாதுமேகமென்றதிருபதுந்தான்
சாடியேநீரிழிவுநீரருக்கல்
　சன்னுண்டுபோகுமடாக்ஷயந்தானெட்டும்
காடியேகண்ணெரிவுகண்புகைச்சல்
　கையெரிவுகாலெரிவுமோடுங்காணே. (௱௮௰)

ஓடுமடாபிரமியங்கள்ரிணங்கிரந்தி
    உத்தமனேகற்றாழைநாற்றந்தீரும்
சாடுமடாவஸ்திசுரமத்திவெட்டை
    சரீரத்தில்மயக்கமெல்லாஞ்சாந்தமாகும்
போடுமடாவிந்திரகண்டிபுண்புரைகள்போகும்
    பழுவெட்டுகண்டத்தின்புரைகள்போகும்
தேடுமடாபெண்மேலேமோகமெத்தச்
    சிக்காதேவலையில்ளுள்ளேதெளிந்துநில்லே.

தெளிந்துகொண்டுமாயத்தில்சிக்கவேண்டாம்
    தேகத்திலுள்ளநோய்சிதறிப்போகும்
அளிந்ததொருகுட்டமொடுசொரிசிரங்கும்
    அப்பனேபுள்வெட்டையாறிப்போகும்
நளிந்தித்ததயிலமதுமுழுகும்போது
    நன்றானபுளியோடுபுகைகசப்பு
வளிந்துமிகவாய்வென்றபதார்த்தந்தள்ளு
    வளமாகுஞ்சரீரமெல்லாமருணனுமே. (௱௮௨)

பொன்னுங்காணித்தைலம்.

ஆமப்பாபொன்னுங்காணித்தைலங்கேளு
    அப்பனேகாணிச்சாறுபடியிரண்டு
நாமப்பாகரிசாலைச்சாறுபடியொன்று
    நலமானநெல்லிக்காய்ச்சாறுபடியொன்று
தாமப்பாவெள்ளெண்ணெய்ப்படியிரண்டு
    தப்பாமலாவின்பால்படியிரண்டு
வேமப்பாமதுரமதுபலமிரண்டு
    விருதானமுன்பாலாலரைத்துப்போட்டே. ( )

போட்டப்பாமெழுகுபதத்தனில்வடித்து
    புகழாகமுழுகிவரத்தீருநோய்கேள்
நீட்டப்பாநேத்திரநோய்தொண்ணூற்றாறும்
    நிலைமைகெடக்காசமெல்லாநீங்கப்போகும்
வாட்டப்பாபித்தமெல்லாம்வாங்கிப்போகும்
    வளமாகுநேத்திரங்களொளியேமீறும்
நாட்டப்பாவுஷ்ணநோயெல்லாந்தீரும்
    நலமானகீழ்க்காய்நெல்லித்தைலங்கேளே (௱௮௪)

கீழ்க்காய்நெல்லித்தைலம்.

கேளப்பாகீழ்க்காயிநெல்லித்தானும்
    கிருபையாய்த்தாக்கிடித்துத்தாணிநீரில்
வாளப்பாவெட்டொன்றாய்வடித்துக்கொண்டு
    வளமானவெள்ளெண்ணெய்ப்படியிரண்டு

நாளப்பாவாவின்பால்படியிரண்டு
நலமானசீரகந்தான்பலமிரண்டு
வேளப்பாபாவிலேயரைத்துவிட்டு
விருதாகமெழுகுபதம்வடித்துவாங்கே. (௱௮௫)

வாங்கியேமுழுகிவரப்பித்தவெட்டை
மயக்கமொடுமஞ்சள்காமாலைதீரும்
தாங்கியேவாந்தியெல்லாந்தவறண்டேபோம்
தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும்
தேங்கியேயுட்சுரங்கள்தீர்ந்துபோகும்
தேகத்தில்நடுக்கல்முதல்தீர்ந்துபோகும்
ஏங்கியேதிரியாதேமனஞ்சோம்பாதே
எளிதல்லநோயப்பாவிரங்கிப்பாரே. (௱௮௬)

ஆதண்டைத்தைலம்.

பாரப்பாசிரசிலுள்ளசூலைதீரப்
பக்குவமாய்த்தைலமொன்றுசொல்லக்கேளு
நேரப்பாவாதண்டைநொச்சிசங்கு
நினைவாய்வெருக்கோடுசிற்றுமுட்டி
ஆரப்பாவகையொன்றுபலம்பத்தாகும்
அப்பனேதாணிநீரொட்டொன்றாக்கிக்
காரப்பாவெருக்கினிடபழுப்புச்சாறு
கருவான்படியொன்றுபழச்சாறொன்றே. (௱௮௭)

ஒன்றப்பாஎள்ளெண்ணெய்ப்படிதானொன்று
உத்தமனேவேப்பெண்ணெய்ப்படியரைதான்கூட்டி
நன்றப்பாதிரிகடுகுவோமம்பூண்டு
நலமானவசம்பேலமஞ்சள்கூட்டிக்
கன்றப்பாவரைத்தெண்ணெய்தனிற்கரைத்து
கருவானமெழுகுபதந்தனில்வடித்து
மொன்றப்பாமுழுகிவரத்திருநோய்கள்
முதலானசிரசிலுள்ளசூலைபோமே. (௱௮௮)

சூலைபோம்வாயுவெல்லாஞ்சொல்லாதோடுஞ்
சுருக்கானவாதத்தின்சூலைதீரும்
வாலையாந்திமிர்வாதமிளைப்புதீரும்
வயிற்றிலுள்ளவாயுவெல்லாம்வாங்கிப்போகும்
சோலைபோஞ்சிறுகடுப்புநேத்திரக்குத்தல்
சொறிசிரங்குகரப்பானோரணங்கள்தீரும்
ஆலப்பாபத்தியந்தான்புளிகசப்பு
அப்பனேபுகைவாய்வுபதார்த்தந்தள்ளே. (௱௮௯)

## பதின்மூன்றுசன்னிக்குத்தைலம்.

[illegible]ள்ளவேசன்னியெல்லாங்கடலைபுக்கும்
தயவாகத்தைலமொன்றுசொல்லக்கேளு
தள்ளவேவேப்பெண்ணெய்புங்கனெண்ணெய்
நலமானபுன்னையெண்ணெய்பசுவின்னெய்யும்
கள்ளவேகாட்டாமணக்கினெண்ணெய்
கருவாகச்சமன்கூட்டிச்சட்டியிலேவார்த்து
அள்ளவேமுசுறுமுட்டைகாலதாகும்
அடைவிலேயெண்ணெய்படிகாலதாமே. (௱௯௰)
காலானபடிவீதஞ்சேர்த்துக்கொண்டு
கருவான*குக்குடத்தின்முட்டைபத்து
மாலாகமஞ்சளையுங்கூடவிட்டு
மயங்காதேகடைமருந்துசொல்லக்கேளு
சாலானசாதிலிங்கந்திமுறுகலோடு
சயர்த்தானகெந்திரசம்பாஷாணந்தான்
ஆலானநாமியுடன்மிளகுதிப்பிலியும்
அழகானயானைத்திப்பிலியும்போடே. (௱௯௧)

* குக்குடம்-கோழி.

போடுவாய்லவுங்கமொடுநேர்வாளந்தான்
பகழானகழஞ்சுநிறைசமனாய்க்கூட்டி
நாடுவாய்கொடிவேலிகியாழத்தாலே
நலமாகச்சாமமொன்றரைத்துக்கொண்டு
சாடுவாயெண்ணெயிலேதான்கரைத்து
சதிராகக்கொதிக்கையிலேயெருக்கம்பாலும்
கோடுவாய்கொடிக்கள்ளிசதுரக்கள்ளி
குணமானவிலைக்கள்ளிப்பாலுங்கூட்டே. (௱௯௨)
கூட்டியேதிருகுகள்ளி*நானுங்கள்ளி
கூசாதேபடர்ந்திருந்தமுள்ளிக்கள்ளி
சாட்டியேபால்வகைதானுழக்குமாகும்
சாதகமாயெண்ணெயுடன்கலந்துக்கொண்டு
மூட்டியேகமலமாந்தீயிலன்பாய்
முதிராமற்கொதிக்கையிலேகஸ்தூரிகேளு
நீட்டியேயஞ்சுபணமுலைப்பாலாலே
நீயரைத்துக்கரைத்தெண்ணெயதனில்வாரே (௱௯௩

* நானுங்கள்ளி-இலைக்கள்ளி.

வார்த்திடுவாய்முலைப்பால்தான்படிகால்வீதம்
வளமானதேசிப்பால்படிகாலாமே
சேர்த்திடுவாய்காட்டெருமைப்பால்பலந்தான்
திரியாமலெண்ணெயிலேவிட்டுக்காய்ச்சி

ஆர்த்திடுவாயாற்றலரியிலைநால்போடு
அன்பாகவெள்ளுள்ளியரைத்துப்போடு
மூர்த்திடவேமெழுகுபதமானவாறே
முன்னவனைப்பூசித்துவடித்திட்டாயே. (௱௬௪)

வடித்திட்டதைலமதைப்பானையிலேயூற்றி
வாகுகோரோசினையுங்கழஞ்சிபொடித்திட்டு
பிடித்திட்டசன்னிவகைபதின்மூன்றுக்கும்
பேரானகாண்டிநிரையீந்தாயானால்
துடித்திட்டசன்னியெல்லாந்தொலைந்துபோகும்
துடியானவிசுவுக்குத்துவளைபோட
நடித்திட்டநரம்பெல்லாமிருதுவாகும்
நலமில்லாவிசுவெல்லாநளினமாமே. (௱௬௫)

நிலப்பனைக்கிருதம்.

நள்ளவேகிருதமொன்றுசொல்லக்கேளு
நலமானநிலப்பனையுமொதியம்பட்டை
விள்ளவேகருங்காலிநாகப்பட்டை
விதமான*வேந்தனுடபட்டைதானும்
அள்ளவேவகையொன்றுபலம்பத்தாக
அப்பனேயிடித்துநன்றாயிருதூணிநீரில்
தள்ளவேசோடசத்தொன்றுகக்காய்ச்சித்
தளமானவாவின்பால்படிதான்ரண்டே. (௱௬௬)

* வேந்தன்பட்டை-அரசன்பட்டை.

ரண்டப்பாவாவின்பால்படிதான்ரண்டு
நீளவாகப்புளியாரைச்சாறுபடியொன்று
விண்டப்பாகோவையுடதண்டுச்சாறு
விதமாகப்படியதுதான்கூடவிட்டு
நன்றப்பாபொன்முசுட்டைசிறுகாஞ்சோறி
நலமானவிளாம்வித்துக்கொத்தமல்லி
கன்றப்பாதிரிகடுகுதிரிபலாதி
கருவானபேரீச்சுமுந்திரிகையாமே. (௱௬௭)

ஆமப்பாகர்க்கடமாம்பருப்பரத்தை
அப்பனேகாட்டாத்திகிழ்க்காய்நெல்லி
நாமப்பாவதிவிடையங்கூவிளத்தின்பிஞ்சு
நலமானவிளாம்பிஞ்சுமாதுளையின்பிஞ்சு
தாமப்பாசந்தனமுஞ்சாத்திரபேதி
தளமானபுளிவிரைத்தோல்முத்தக்காசு
வேமப்பாசிறுநாகம்லவங்கப்பட்டை
விதமானகுரோசானியோமங்கூட்டே. (௱௬௮)

கூட்டப்பாமருந்துவெள்ளையமுக்குறுவேர்
கூசாதேவகைக்கிரண்டுகழஞ்சிவீதம்
ஆட்டப்பாவாவின்பால்விட்டரைத்து
அப்பனேநெய்தனிலேகரைத்துவிட்டு
மூட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாக
முதிராமல்மெழுகுபதமானபோது
நாட்டப்பாவடிகொண்டுபரணிசெய்து
நலமாகவிருநேரங்கழஞ்சிகொள்ளே. (ாகூகூ)

கொள்ளவேபெரும்பாண்டுவெளுப்புருக்கிக்
கூருனபிரமியங்கள்கடுப்புமூலம்
விள்ளவேகிராணிவகையெல்லாந்தீரும்
விதமானசுக்கிலந்தானிறுகும்பாரு
தள்ளவேசடம்வெளுப்புகைகால்காந்தல்
தளமானகுறியெரிப்புநீர்கடுப்பு
நள்ளவேதீருமடாபத்தியங்கார்
நலமாகச்சிரகக்கியாழுங்கொள்ளே. (உா)

பொன்னுங்காணிக்கிருதம்.

கொள்ளவேகிருதமொன்றுசொல்லக்கேளு
குறிப்பானகாணிச்சாறுபடிதானென்று
நள்ளவேபொற்கையான்சாறுபடியொன்று
நலமானபழச்சாறுபடியரைதான்விட்டு
விள்ளவேயாவின்னெய்படிதானென்று
விருதானவாவின்பால்படிதானென்று
தெள்ளவேமதுரமதுபலந்தானிரண்டு
தெளிவானவாவின்பால்விட்டிட்டாட்டே. (உாக)

ஆட்டியேநெய்க்குள்ளேகரைத்துவிட்டு
அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே
நீட்டியேசாதிக்காய்சாதிப்பத்திரி
நினைவாகோரோசினையுங்கற்கண்டப்பா
நாட்டியேகழஞ்சிநிறைபொடித்துப்போட்டு
நலமாகக்கிண்டிவைத்துக்கரண்டிவீதம்
மூட்டியேயிருநேரங்கொண்டாயானால்
முக்கியமாய்த்தீருமடாமூலச்சூடே. (உாஉ)

சூட்டுடனேபூஷ்ணநோயெல்லாந்தீரும்
சுகமாகமேலெரிவுகைகால்காந்தல்
நாட்டுடனேயுலர்த்துகின்றமேகந்தீரும்
நணுகாதுவயிற்றிலுள்ளவெரிகட்கெல்லாம்

வாட்டுடனேநேத்திரமெல்லாங்குளிர்ச்சியாகும்
வளமாகும்வாய்நாற்றம்விட்டுப்போகும்
நீட்டுடனேயிறங்குகின்றபிரமியந்தான்
தீருமடாபுளியாரைக்கிருதங்கேளே. (௨௱௩)

புளியாரைக்கிருதம்.

கேளடாபுளியாரைச்சாறுபடியொன்று
கிருமையுள்ளவள்ளிச்சாறுபடிதானென்று
நாளடாகாணிச்சாறுபடிதான்ரண்டு
நலமானசெவ்விளநீர்படிதான்ரண்டு
தாளடாவாவின்னெய்சேர்தானஞ்சு
தளமானகருவாவின்பால்சேரஞ்சு
ஆளடாசிரகமுமாசக்காயும்
அப்பனேமதுரமொடுகெழஞ்சிநாலே. (௨௱௪)

நாலப்பாவாவின்பால்விட்டேயாட்டி
நலமாகநெய்சாற்றிற்கரைத்துவிட்டு
மேலப்பாவடுப்பேற்றிமெழுகதானால்
விருதாகவடித்துமேற்பொடிதான்கேளு
காலப்பாபத்திரியுமேலம்ரண்டு
கருவாகக்கழஞ்சிரண்டுபொடித்துத்தூவி
ஆலப்பாகற்கண்டுபலந்தானென்று
அப்பனேபொடித்திட்டுக்கரண்டிநிரையாமே. ()

ஆமப்பாவிருநேரமண்டலங்கொள்
அப்பனேபித்தவெட்டைபித்தவாய்வு
தாமப்பாவெரிச்சலொடுநீர்ச்சுருக்கு
தளமானமயக்கமெல்லாந்தவறிப்போகும்
நாமப்பாவாயூறலரோசிகங்கள்
நாடாதுபித்தமெல்லாநடுங்கியோடும்
போமப்பாவாந்திமுதல்சீரமூரும்
புதிதாகவின்னமொருகிருதங்கேளே. (௨௱௬)

வல்லாரைக்கிருதம்.

கேளப்பாவல்லாரைக்கிருதஞ்சொல்வேன்
கெடியானவல்லாரைச்சாறுபடியொன்று
தாளப்பாகாணிச்சாறுபடிதானென்று
தளமானபொடுதலைச்சாறுபடியொன்று
நாளப்பாபழச்சாறுபடியதைதான்விட்டு
நலமானவாவினெய்ப்படிதான்ரண்டு
ஆளப்பாவாவின்பால்படிதான்ரண்டு
அப்பனேகற்கவகைசாதிக்காயே. (௨௱௭)

சாயோடுபெத்திரியுமாசக்காயும்
　　கருவானசிங்கியொடுகோட்டாத்திப்பூ
தாயோடுவால்மிளகேலங்கிராம்பு
　　தளமானமதுரமொடுவகையொன்றுக்குப்
பாயோடுமிருகமழுஞ்சிதிரைதான் தூக்கிப்
　　பருவமாயாவின்பால்விட்டேயாட்டி
வாயோடுகரைத்துவிட்டடுப்பிலேற்றி
　　வளமாகமெழுகுபதந்தனில்வடித்தே. (உாஅ)

வடித்திட்டுச்சினிரண்டுபலந்தான் தூக்கி
　　வாகாகப்போட்டதிலேகிண்டிக்கிண்டிக்
கடித்திட்டுக்கரண்டிநிறைகொண்டாயானால்
　　கலங்காதேமண்டலத்தில்தீருநோய்கள்
தடித்திட்டமேகவகையெல்லாந்தீரும்
　　தளமானகுளிர்ச்சியாஞ்சரீரமெல்லாம்
வெடித்திட்டரிணங்கிரந்துவிழலாய்ப்போகும்
　　விருதானபிரமியமும்விட்டுப்போச்சே. (உாகூ)

போச்சப்பாரசபல்பம்வைத்துக்கொள்ளு
　　புகழானமேகவகைகளுலேபாகும்
காச்சப்பாகுஷ்டமொடுசொறிசிரங்கு
　　கருவான*சிங்குவைநோய்காளுதோடும்
விச்சப்பாகிரந்தியொடுயோனிப்புற்று
　　விதமானபுண்புரைகள்விழலாய்ப்போகும்
மாச்சப்பாநீரருகல்குறியெரிப்பு
　　மைந்தனேய்ஸ்திரிணமாறிப்போமே. (உாய)

*சிங்குவை-நாக்கு.

கூழ்ம்மாண்டகிருதம்:

ஆறமேகூழ்ம்மாண்டகிருதங்கேளு
　　அப்பனேபூசினிக்காய்சாறுபடிரண்டு
நாறுமேதாழையுடவிழுதின்சாறு
　　நன்றாகபடியொன்றுதென்னம்பூச்சாறு
சாறுமேபடியொன்றுகூடவிட்டு
　　கலங்காதேகுமரிச்சாறுபடிதானொன்று
சாறுமேசெவ்விளநீர்படிதானொன்று
　　தளமானவாவினெய்படிதான்ரண்டே. (உாயக)

ரெண்டானகற்கவகைசொல்லக்கேளு
　　நிலையானசாதிக்காய்சாதிபத்திரி
பண்டானசாதிக்காய்திரிபலாதி
　　பாங்கானசிரகமுமேலம்வால்மிளகு

குன்றனகாட்டாத்திகர்க்கடகசிங்கிக்
கூறனமல்லியொடுகுரோசாணியோமம்
நன்றாககழஞ்சிநிறைமூன்றதாக
நலமானவாவின்பால்விட்டிட்டாட்டே. (௨௱௰௨)

ஆட்டியேயாவின்பால்படிரண்டுக்குள்
அப்பனேகரைத்துவிட்டடுப்பிலேற்றி
நாட்டியேமெழுகுபதமாகும்போது
நலமாகவடிகொண்டுகலசத்துள்ளே
காட்டியேகற்கண்டுபலந்தான்ரண்டு
கருவாகப்பொடித்திட்டுக்கரண்டிவீதம்
மூட்டியேமண்டலங்கால்கொண்டாயானால்
மூதண்டபிரமியங்கள்மேகப்போமே. (௨௱௰௩)

போமப்பாக்ஷீணங்களெரிவுகாந்தல்
பொல்லாதநீர்க்குத்துகுறியெரிப்பு
நாமப்பாவஸ்திரிணமஸ்திவெட்டை.
நாடாதுகிராணியெல்லாம்நளினமாகும்
தாமப்பாவெளுப்புருக்கிமாலையெல்லாம்
தவறுண்டேபோகுமடாபித்தமெல்லாம்
ஆமப்பாவப்பிரோகம்போட்டுக்கொள்ளு
அணுகாதுமேகநீரற்றுப்போமே (௨௱௰௪

தூதுளைக்கிருதம்.

அற்றுப்போந்தூதுளைக்கிருதங்கேளு
அப்பனேதூதுளையெடைதானொன்று
கற்றுப்போநன்முள்ளிகண்டங்கத்திரி
கருதுசிறுகாஞ்சோறியாடாதோடை
சற்றுப்போமிளகுதிப்பிலிகடுக்காய்
சதிரானதுராலபையும்வகையொன்றுக்கு
நற்றப்போம்பலம்நாலுகொண்டிடித்து
நலமாகவிருநாழிநீரிலூட்டே (௨௱௰௫)

ஊட்டியேசோடசத்தொன்றாகக்காய்ச்சி
உத்தமனேவடித்துவொருபாண்டத்தூற்றி
நாட்டியேயாவினெய்ப்படிதான்ரண்டு
நலமான்வாவின்பால்படிதான்ரண்டு
காட்டியேதிரிகடுகுதிரிபலாதி
கருவானதாளிசங்கோஷ்டமக்கிரா
வாட்டியேவாய்விளங்கஞ்சீரகமுமோமம்
வால்மிளகோடரத்தைரண்டுமேலந்தானே ()

ஏலமொடுகிராம்புசாதிக்காய்பத்திரி
எடுத்திடுவாய்வகையொன்றுகழஞ்சிமூன்று
ஆலமொடுவாவின்பால்விட்டேயாட்டி
அப்பனேநெய்தனிலேகலாத்துவிட்டு
ஞாலமொடுமெழுகுபதமாகுநேரம்
நலமாகவடிகொண்டுகரண்டிவீதம்
கால்மேமண்டலந்தான்கொண்டாயானால்
கருவானக்ஷயமெட்டுங்காணுதென்றே. (௨௱௯௭)

காணுதேயீளையோடிருமல்காசம்
கலங்காதேசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
நாணுமேமேகமெல்லாநாடாதோடும்
நலமானவுஷ்ணநோயெல்லாந்தீரும்
ஆணுமேயீளையிளைப்பற்றுப்போகும்
அப்பனேவாயுவென்றதெல்லாந்தீரும்
கோணுமேகுண்டலமாம்வாய்வுதீரும்
குறிப்பாகவின்னமொருசேதிகேளே. (௨௱௯௮)

கண்டங்கத்திரிகிருதம்.

கேளடாகண்டங்கத்திரிக்கிருதஞ்சொல்வேன்
கிருபையாங்கண்டங்கத்திரிதூக்கப்பா
நாளடாசிறுவாலைசிறுகாஞ்சொறி
நலமானதூதுளைசங்குமூலம்
வாளடாவகையொன்றுபலந்தானஞ்சு
வகையாகவடித்திருநாழிநீரில்
தாளடாசோடசத்தொன்றுகக்காய்ச்சி
தப்பாமல்வடிகொண்டுபாண்டத்திலூற்றே. ()

ஊற்றியேயாவினெய்ப்படிதானிரண்டு
உத்தமனேயாவின்பால்படிதானிரண்டு
தாற்றியேகற்கவகைசொல்லக்கேளு
தளமானதிரிகடுகுதிரிபலாதி
ஏற்றியேயேலமோடக்கிராகாரம்
இதமானகிராம்புசாதிக்காய்பத்திரி
ஆற்றியேதாளீசம்லவுங்கப்பட்டை
அரத்தைரண்டுசீரம்ரண்டோமமாமே. (௨௱௨௯)

ஆமப்பாவகையொன்றுகழஞ்சுமூன்று
அப்பனேயாவின்பால்விட்டேயாட்டி
நாமப்பாநெய்தனிலேகலாத்துவிட்டு
நலமாகமெழுகுபதந்தனில்வடித்து

தாமப்பாகரண்டிநிறைகொண்டாயானால்
தவறுண்டேஐயகாசமெல்லாந்தீரும்
வேமப்பாவலிப்பிசுவும்வெருண்டுபோகும்
விருதானவயிறுவிம்மல்தளரும்பாரே. (௨௨௧)

பாரப்பாவிஷக்கடிகடெலிகடிகள்தீரும்
பதறுகின்றவலிப்பெல்லாம்பறந்துபோகும்
நேரப்பாகுன்மமெட்டுநீங்கிப்போகும்
நிலையானமந்தாரகாசநீங்கும்
வாரப்பாசேத்துமநோயெல்லாந்தீரும்
வளமானவாய்வெல்லாமாண்டுபோகும்
ஆரப்பாதாளகத்தின்பர்பங்கூட்டி
அப்பனேமண்டலங்கொளகன்றுபோமே-(௨௨௨)

சணத்தெண்ணெய்.

போமப்பாசணத்தெண்ணெய்சொல்லக்கேளு
புகல்முத்துக்கொட்டையெண்ணெய்படிதானொன்றே
நாமப்பாகையான்சாறுகாணிச்சாறு
நலமானகுமரிச்சாறுநீருள்ளிச்சாறு
வேமப்பாகோவைச்சாறுபுளியாரைச்சாறு
விதமானகர்ப்பூரவல்லிச்சாறு
தாமப்பாவகையொன்றுசாறுபடிகாலால்
தப்பாமலெண்ணெயிலேகூடவாரே. (௨௨௩)

வார்த்தப்பாசாதிக்காய்சாதிபத்திரி
மைந்தனேமாசக்காய்கர்க்கடகச்சிங்கி
ஏத்தப்பாகோஷ்டமோடக்கிராகாரம்
இதமானசீரம்ரண்டுவெந்தயந்தான்
காத்தப்பாலவுங்கப்பத்திரியும்பட்டை
கருவாண்வெள்ளுள்ளிவகையொன்றுக்குச்
சாத்தப்பாகழஞ்சிநிறைவாங்கியேதான்
தளமானவாயின்பால்விட்டிட்டாட்டே. (௨௨௪)

ஆட்டியேயெண்ணெயிலேகலைத்துவிட்டு
அப்பனேபால்படியாலடுப்பிலேற்றி
நாட்டியேமெழுகுபதமாகவேதான்
நலமாகவடிகொண்டுகலசத்துள்ளே
கூட்டியேகோரோசினைக்குங்குமப்பூ
குணமானசாதிக்காய்கழஞ்சுவீதம்
ஆட்டியேபொடித்திட்டுகழஞ்சிநிறையாக
அப்பனேகொடுத்துவரச்சொல்லக்கேளே (௨௨௫)

கோடாகணவெட்டைகணசுரங்கள்
 கெடியானமாந்தமோடுப்பிசங்கள்
நாளடாவுலர்த்துகின்றரணங்களெல்லாம்
 நலமாகவாறுமடாகெற்பவெட்டை
தாளடாகணப்பாண்டுவெளுத்ததேகம்
 தளமானநீரிழிவுவிடாதகுடு
வேளடாவுடம்பூறலுமெஷிணம்போகும்
 வெகுசுருக்காயின்னமொருசேதிகேளே. (௨௨௬)

காப்பானெண்ணெய்.

சேதியென்றகரப்பானும்ரணத்துக்கெல்லாந்
 தெளிவானவெண்ணெயொன்றுசொல்லக்கேளு
சாதியென்றபூவரசுசெங்கத்தாரி
 தளம்பூதகரப்பனொடுகண்டங்காலி
வேதியென்றநிலவாகைவகையொன்றுக்கு
 விதமாகப்பலம்பத்துநறுக்கிக்கொள்ளு
ஆதியென்றதூணிநீரொட்டொன்றாக்கி
 அப்பனேயாமணக்கெண்ணெய்ப்படியொன்றே()

ஒன்றப்பாவெள்ளாட்டின்பால்தானொன்று
 உத்தமனேமிளகுகருஞ்சீரகந்தான்
வின்றப்பாகார்கோலம்வெள்ளுள்ளிவசம்பு
 வேறுனசதகுப்பைபலம்புரிக்காய்
நன்றப்பாபரங்கியுடபட்டைதானும்
 நலமாகவகையொன்றுகழஞ்சிரண்டு
தன்றப்பாமுன்பாலாலரைத்துக்கொண்டு
 தளமானவெண்ணெயிலேகரைத்துவிட்டே. (௨௨௮

விட்டப்பாவடுப்பேற்றிமெழுகுபதமானால்
 வெருளாதேகரண்டிநிறைகொடுத்தாயானால்
தட்டப்பாசகலகரப்பானும்போகுந்
 தளமானவரிப்பெல்லாஞ்சாராதோடுங்
கட்டப்பாரணத்தின்மேல்தடவிப்போடக்
 கசகாமலுதிர்ந்துபோங்கருவாய்க்கேளு
பட்டப்பாபத்தியந்தான்காத்தாயானால்
 பறக்குமடகரப்பனொடுரணங்கள்தானே. (௨௨௯)

மாந்தஎண்ணெய்.

நாமென்றமாந்தவெண்ணெய்சொல்லக்கேளு
 நயவானவாமணக்கெண்ணெய்ப்படியொன்று
வாமென்றவெள்ளிண்டுவுசிலன்பட்டை
 வளமானவறுகுமஞ்சள்வெள்ளைப்பூண்டு

காணென்றவெவ்வேறேநிம்பக்காய்மட்டுக்
கருவாகவரைத்தெண்ணெய்தனிற்கரைத்து
நாமென்றபேய்த்துமட்டிக்காயப்பா
நலமாகப்பாதியதில்நறுக்கிப்போடே. (௨௱௰)

போட்டப்பாவடுப்பேற்றிக்காய்ச்சிவந்தால்
பொட்டெனவேயிறக்கியதையிறுத்துக்கொண்டு
நாட்டப்பாமூன்றுநாள்கால்சேர்விதம்
நலமாகக்காலமேகொடுத்தாயானால்
காட்டப்பாமாந்தமெல்லாங்காணுதோடும்
கருவானவிசுவுமுதல்கண்டிப்பாகும்
நீட்டப்பாபேய்மாந்தம்பொருமலெல்லாம்
நிலைகெட்டேயோடுமாமின்னங்கேளே. (௨௱௧)

மேகத்தெண்ணெய்.

கேளப்பாமேகமென்றதெல்லாந்தீரக்
கெடியானவெண்ணெயொன்றுசொல்லக்கேளு
நாளப்பாகோவைச்சாற்காணிச்சாறு
நலமானவல்லாரைசெருப்படையின்சாறு
வேளப்பாயானையுடநெருஞ்சிச்சாறு
வெகுசுருக்காஞ்சிந்தியுடதண்டுச்சாறு
ஆளப்பாவரசனுடபட்டைச்சாறு
அப்பனேவகைக்குப்படியளாயதாமே. (௨௱௨)

ஆமப்பாவாமணக்கினெண்ணெய்படிமுக்கால்
அப்பனேயெள்ளெண்ணெய்ப்படிதான்முக்கால்
தாமப்பாசாற்றிலேவிட்டுக்கேளு
சதுரானசாதிக்காய்ச்சாதிபத்திரி
வாமப்பாமாசக்காய்கற்கடகச்சிங்கி
வளமானசன்னபுகப்பூகாட்டாத்திப்பூ
வேமப்பாசிறுநாகமேலங்கோரோசாணி
வெகுசுருக்காய்கழஞ்சிரண்டிடைதான்தூக்கே. (

தூக்கியேயாவின்பால்விட்டேயாட்டி
சுருக்காகவெண்ணெயிலேகரைத்துவிட்டு
தாக்கியேசித்திரமூலிவேரின்பட்டை
சாதகமாம்பலமொன்றுகூடப்போட்டுத்
தேக்கியேயடுப்பேற்றிமெழுகுபதம்பார்த்து
திறமாகவடித்ததனைக்கலசத்துள்ளே
ஆக்கியேகற்கண்டுபலமிரண்டிட்டு
அப்பனேகரண்டிதினங்கொள்ளுகொள்ளே (௨௱௪)

கொள்ளப்பாமண்டலந்தான்கொண்டாயானால்
கூறுகெட்டமேகமெல்லாங்குளிர்ந்துபோகும்
தள்ளப்பாரிணங்கிரந்திலிங்கப்புற்று
தள்ளுமேயோனிப்புற்றரிகிரந்தி
நள்ளப்பாவெடிசூலைமேகவூறல்
நலமானசொறிகிரங்குநாடாதோடுந்
தள்ளப்பாசீழிரத்தம்பிரமியங்கள்
தவறுண்டேபோகுமேடாசார்ந்துபாரே. (௨௱௫)

விழுதியெண்ணெய்.

பாரப்பாகெற்பநோயெல்லாந்தீரப்
பகருகிறேன்விழுதியெண்ணெய்பண்பாய்க்கேளு
சேரப்பாமுத்தெண்ணெய்படிதானொன்று
திறமானவாவினெய்படிதானொன்று
தாரப்பாவிழுதிச்சாற்படிதானொன்று
தளமானதிரிகடுகுவசம்பீருள்ளி
ஆரப்பாகோஷ்டமொடுலவுங்கமேலம்
அப்பனேவெள்ளுள்ளிக்காலதாமே. (௨௱௬)

ஆமப்பாவாவின்பாலாலரைத்து
அப்பனேநெய்தனிலேகரைத்துவிட்டுப்
போமப்பாவடுப்பேற்றிமெழுகுபதம்பார்த்து
பொட்டெனவேவடித்தொருகலசத்துள்ளே
நாமப்பாமூன்றுநாள்கால்சேர்வீஉம்
நலமாகக்கொண்டுவரவாறுநாள்தான்
வேமப்பாபத்தியந்தானுப்பைத்தள்ளு
வெகுசுருக்காய்த்தீருமடாகெற்பவாய்வே. (௨௱௭)

கெற்பத்தின்வாய்வெல்லாங்கெடிகெட்டோடும்
கிட்டாதுசூதகத்தின்வலியெல்லாம்போம்
நற்புத்தில்புழுக்களெல்லாநழுவிவீழும்
நாடாதுசூலையெல்லாநலிவுமாகும்
சற்பத்திலிசிவுமுதல்தளர்ந்துபோகும்
சந்திடுப்பில்சூலையெல்லாஞ்சாந்தமாகும்
அற்பமதுவல்லவடாகெற்பமுண்டாம்
ஆச்சரியமின்னமொன்றறைகிறேனே. (௨௱௮)

அறைகிறேனல்லெண்ணெய்படிதானொன்று
அப்பனேயாவினெய்படிதானொன்று
மூறைகிறேன்மேலவேர்பலந்தான்ரண்டு
முளையாகவாவின்பால்விட்டேயாட்டி.

நிறைகிறேன்களைத்துவிட்டடுப்பிலேற்றி
நிலைவாகவெழுகுபதந்தனில்வடித்து
குறைகிறேன்காண்டிநிலைகொண்டாயானால்
கொடிதானமேகமெல்லாங்கூறிப்போமே.(௨௫௯)

கூறிப்போங்குறியெரிப்புலிக்கட்புற்று
கொடிதானகிரந்தியெல்லாங்குடிப்போமப்பா
நாறிப்போமுள்ளழலைவாய்நாற்றங்கள்
நாடாதேயரிப்பெல்லாநளினமாகும்
தேறிப்போஞ்சூலைமுதல்வெடிரிணங்கள்
தீராதகுட்டமெல்லாந்தீர்ந்துப்போகும்
காறிப்போங்கெந்தியிட்டுக்கொண்டாயானால்
கடல்புக்கும்வெகுரிணங்கள்குன்மந்தானே:

* கலிங்காதியெண்ணெய்.

குன்மவகைதீருதற்குகலிங்காதியெண்ணெய்
குணமாகச்சொல்லுகிறேன்புலத்தியனேகேள்
கன்மமென்றதும்மட்டிக்காய்ச்சாறப்பா
கருவாகபடியிரண்டாவிநீர்தாம்
தன்மமென்றபடியிரண்டுவெள்ளாட்டுநீர்தான்
தப்பாமல்படியொன்றுகூட்டிச்சேர்த்து
பன்மமென்றவாமணக்கினெண்ணெயப்பா
பகராதேபடிரண்டுகூடவாமே. (௨௬௧)

* கலிங்கம்-தும்மட்டிக்காய்

வார்த்தப்பாகடுக்காயுங்கடுகுரோணி
வளமானவாய்விளங்கந்திரிகடுகுமேலம்
எத்தப்பாவிந்துப்புவளையலுப்பு
இதமானகல்லுப்புச்சவுட்டிலுப்பு
காத்தப்பாநவசாரமெவாசார்ங்காரந்
கலங்காதேயப்பளாகாரங்கூட்டி
பார்த்தபாவால்மிளகுயானைத்திப்பிலியும்
பாங்கானவெள்ளுள்ளிப்பருப்புமாமே. (௨௬௨)

ஆமப்பாநில்வாகைக்கண்டங்கத்திரி
அப்பனேவெள்ளைச்சாறணையின்மூலம்
நாமப்பாசத்திசாறனைக்கிழங்கு
நலமாகவளாப்பலமாயளாத்துக்கொண்டு
தாமப்பாநொச்சிசாறுபசுமஞ்சள்சாறும்
தளமானவிஞ்சிச்சாறுகுமரிச்சாறு
வேமப்பாபழயனாயாய்க்கூடவிட்டு
விருதானகடைச்சரக்குக்கழஞ்சிமூன்றே.(௨௬௩)

மூன்றப்பாவளைத்தெண்ணெய்தனிற்கரைத்து
மூசிராமலடுப்பேற்றிமெழுகுபதமானால்
ஊன்றப்பாகலசமதில்வடித்துவைத்தே
என்னசொல்வேனனைக்கால்சேர்வீதமாகக்
கான்றப்பாகொண்டுவரப்பத்துநாள்தான்
கவுசையொடுபீலிகையுங்கரைந்துபோகும்
ஆன்றப்பாபெருவயிறுவாய்வுகட்டி
அணுகாதமகோதரங்களற்றுப்போமே. (௨௪௪)

அற்றுப்போம்வாயுவென்றதிரட்சியெல்லாம்
அப்பனேகுணமாகுமெட்டுவாய்வு
நற்றுப்போங்கெற்பவலிகெற்பச்சூலை
நாடாதேயிசிவுபுழுநழுவிவிழும்
கற்றுப்போங்கைகாலில்கட்டுச்சூலை
கடல்புக்குங்குத்துவலிகாணும்தாடும்
பற்றும்போம்வயிற்றிலுள்ளவியாதியெல்லாம்
பறக்குமடாவின்னமொன்றுபகரக்கேளே. ௨௪௫

வாதஎண்ணெய்

கேளப்பாவேப்பெண்ணெய்புங்கனெண்ணெய்
கொடியானவாமணக்கின்புன்னையெண்ணெய்
நாளப்பாவெள்ளெண்ணெயைந்துங்கூட்டி
நலமாகவகையொன்றுபடியளாதான்சேர்த்து
தாளப்பாவெள்ளுள்ளிவசம்புகாயம்
தளமானதிரிகடுகுவோமங்கிராம்பு
ஆளப்பாசதகுப்பைகடுகுரோணி
அப்பனேசித்திரமாமூலமாமே. (௨௪௬)

ஆமப்பாவகையொன்றுபலமளாதான்வாங்கி
அப்பனேகாடியாலரைத்துப்போட்டு
வேமப்பாகாடிபடிரண்டிலேதான்
விருதாகக்காலதுவிட்டடுப்பிலேற்றி
போமப்பாமெழுகுபதம்வடித்துக்கொண்டு
புகழாகக்கலசமதில்பதனம்பண்ணி
தாமப்பாமேற்பூசிபிடித்துக்காய்ச்சத்
தவறிப்போம்வாதமென்பதுவுந்தானே. (௨௪௭)

தானென்றமேகவகைசூலையெல்லாந்
தளமானதிமிர்வாதம்புறவிசிவுமுதலா
தானென்றவிசிவுமுதல்நமிக்குவாதம்
நாடாதுசிறுகடுப்புநளினமாகும்

தேனென்றகாசெடைதானுள்ளேதாக்கில்
தேகத்தின்வாதமெல்லாந்தெறிபட்டுப்போம்
வானென்றதேகவலியெல்லாந்தீரும்
வளமாகுந்துவாலையிடவாதம்போமே. (௨௪௮)

சுகசீதபேதியெண்ணெய்.

போமப்பாசுகபேதியெண்ணெயொன்று
புகலுகிறேன்முத்தெண்ணெய்படிதானென்று
காமப்பாகுமரிச்சாறப்படிதானென்று
கருவானபிரமிச்சாறுபடியரைதானாகும்
தாமப்பாமிளகுகளிப்பாக்குக்கடுக்காய்
தவறாமல்கருவேவிலைபலம்ரண்டப்பா
நாமப்பாபதக்குநீர்தன்னிற்போட்டு
நலமாகவெட்டொன்றாய்வடித்துவாங்கே (௨௪௯)

வாங்கியேயெண்ணெய்தனக்குள்ளேயப்பா
வளமாகக்கடுக்காய்புங்கடுகுரோணி
தாங்கியேமிளகுடனேபுள்ளிவகையொன்று
தவறாமல்பலமரைதானரைத்துப்போட்டு
ஓங்கியேயடுப்பேற்றிமெழுகுபதமானால்
என்னசொல்வேன்கலசத்துள்வடித்துவைத்து
ஆங்கியேகால்சேர்தான்கொடுத்தாயானால்
அப்பனேசுகசீதபேதியாமே. (௨௫௰)

ஆமப்பாநீர்க்கட்டுவாய்வுளைதல்
அப்பனேவாய்வெல்லாமகன்றுபோகும்
தாமப்பாசரீரமெல்லாங்குளிர்ச்சியாகும்
தளராதவயிறுவிம்மல்தளர்ந்துபோகும்
நாமப்பாமூலத்தின்சூடெல்லாம்போம்
நாடாதுபித்தமெல்லாங்கீழேசாடும்
போமப்பாவிதனைப்போல்பேதியெண்ணெய்
பூதலத்தில்சுகபேதியில்லைதானே. (௨௫௧)

பழத்தெண்ணெய்.

தானென்றபழத்தெண்ணெய்சொல்லக்கேளு
தவறாமல்பழச்சாறுபடிதானென்று
நானென்றமுத்தெண்ணெய்படிதானென்று
நலமானகுமரிச்சாறுபடிதானென்று
வேனென்றகடுக்காய்தான்பலமிரண்டு
விருதாகவரைத்தெண்ணெய்தன்னிற்போட்டு
கானென்றவடுப்பேற்றிமெழுகுபதமானால்
கண்டப்பாவடிகொண்டுகலசம்வாரே. (௨௫௨)

வார்த்தப்பாகால்சேர்தால்கொடுத்தாயானல்
வாங்குமடாபித்தமெல்றநாற்பத்தும்போம்
எத்தப்பாவெரிவுமுதல்காந்துந்தீரும்
என்னசொல்வேனூடணநோயெல்லாந்தீரும்
காத்தப்பாபட்சமொன்றுகொடுத்தாயானல்
கருவானநோயெல்லாங்காணாதோடும்
பார்த்தப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்லாம்
பறக்குமடாபித்தநோய்பாருபாரே. (உ௫௩)

## வீரபத்திரக்கலிக்கம்.

பாரப்பாவீரபத்திரகலிக்கங்கேளு
பறக்குமடாபசாசுமுதல்கன்னியெல்லாம்
சேரப்பாதிரிகடுகுகலிக்கமிட்டால்
திறமானவன்மோகினியும்பேயோடும்
வேரப்பாவெந்தயச்சாறதனாலிட்டு
வெகுசுருக்காய்நாலுசாமமரைத்துக்கொண்டு
ஆரப்பாமுன்சாற்றிற்கலிக்கம்போட
அப்பமேசன்னிமுதல்தோடப்போமே. (உ௫௪)

## ஆக்கிராணநசியம்.

போமப்பாவாக்கிராணஞ்சொல்லக்கேளு
புகழானசுன்னைவேரும்பைமலம்
நாமப்பாவிலுப்பைபண்ணைக்குக்கூட்டி
நலமாகமுன்னிரண்டும்பாவிபுலர்த்தி
சேமப்பாபொடிசெய்துவடிகொண்டேதான்
திறமானகுழலடைத்தாக்கிராணஞ்செய்ய
தாமப்பாதலையிலுள்ளதோடமெல்லாம்
சன்னுண்டுபோகுமடாவின்னங்கேளே. (உ௫௫)

## நசியம்.

கேளப்பாவிலுப்பைபுடபழம்புன்னைக்குக்
கிரிகையாய்ப்பொடிசெய்துதுணியிற்கட்டி
வாளப்பாவாலைபுடலுசிநீரில்
மைந்தனேநசியமிடச்சன்னிதோடம்
தாளப்பாபித்தத்தாலெடுத்ததோடம்
தளமானகபவாததோடமெல்லாம்
ஆளப்பாபிரமராட்சதல்முதலாய்
ஆகாதபசாசுமுதல்கன்றுபோமே. (உ௫௬)

## கண்டாவிழ்தம்.

போமப்பாகண்டாவிழ்தஞ்சொல்லக்கேளு
புதுமையாந்தங்கமொடுவெள்ளிமுத்து
நாமப்பாமதுரமொடுஇராம்பதிப்பிலி
நலமானபவளமோடுருத்திராக்ஷம்
தாமப்பாகோஷ்டமோடக்கிரகாரம்
தளமானகாமப்பூகூவிளத்தின்மூலம்
ஆமப்பாகலைக்கொம்புரசசெந்தூரம்
அப்பனேயாடாதோடைமூலந்தானே. (௨௫௭)

தானென்றமூலைப்பாலாலரைத்துக்கொண்டு
தப்பாமல்தேன்குத்திநாவிற்போட
நானென்றதோடமொடுசன்னியெல்லாம்
நாடாதுநாவரட்சிநாவழுத்தல்
தேனென்றஸ்திரீசங்கோத்தோடம்வாந்தி
திறமானவிக்கல்முதல்தீருந்தீரும்
வானென்றவாதமெல்லாம்வாங்கிப்போகும்
வளமானநாக்கின்முள்ளும்வாங்குந்தானே (௨௫௮)

## சூரணங்களின் சுத்தி.

தானென்றசூரணத்தின்சுத்திகேளு
தப்பாதேசரக்கெல்லாஞ்சூரணித்து
நானென்றவாவின்பாலாற்பிசைந்து
நலமானசட்டியிலேபாலைவிட்டு
வானென்றசுத்தசலம்பாதிவிட்டு
வளமாகமேற்சீலைகோடுகட்டி
பானென்றசூரணத்தைப்புட்டுபோல்வைத்துப்
பதறாதேவெந்தெடுக்கச்சுத்தியாமே. (௨௫௯)

ஆமப்பாரவியுலர்த்திப்பொடிதான்செய்து
அப்பனேசமனுச்சர்க்கரையைச்சேர்த்து
நாமப்பாகொண்டுவரத்தோடம்போச்சு
நன்றாகச்சுத்திசெய்யாச்சூரணந்தான்
தாமப்பாரோகத்தைவெல்லாதப்பா
தளமானவியாதியெல்லாம்பாரிக்கும்பார்
வேமப்பாசுத்திசெய்துகொண்டாயானால்
வெகுசுறுக்காய்த்தீருமடாவியாதிகேளே. (௨௬௦)

## செந்தூரவைப்புக்குக்குரு.

கேளப்பாசெந்தூரப்பற்பமெல்லாம்
கெடியானசிக்கமுப்பூதொட்டாலாகும்
நாளப்பாவிதைவிட்டால்பற்பமில்லை
நன்றானலோகமுதல்சிவப்பேறாது

வாளப்பாவிதுவல்லோபுடத்துக்காதி
வகையறியான்வைத்தியனல்லமாடுமேய்க்கி
தாளப்பார்வைத்தியர்க்காய்க்கருவைச்சொன்னேன்
தப்பாதுபற்பமுறைசெந்தூரந்தானே. (௨௯௧)

லோகசெந்தூரம்.

தானென்றலோகசெந்தூரங்கேளு
நயவானவரப்பொடியில்நல்லெண்ணெய்விட்டு
வானென்றநாழிகைதான்அறுபதானால்
வளமாகவறுத்ததனைப்பீங்கானில்விட்டு
நானென்றபழச்சாறுபிழிந்துவிட்டு
நலமாகக்கிண்டிவைத்துநாலாம்நாளில்
தேனென்றேயருஞ்சியதைக்கழுவிப்போட்டு
திறமாகாவியுலர்த்திப்பலந்தான்தூக்கே. (௨௯௨)

தூக்கியேசுத்தித்தகெந்திகேளு
சுகமாகப்பலமொன்றுகூடப்போட்டு
தாக்கியேபழச்சாற்றால்சாமம்நாலு
சரியில்லாப்பொற்றலையாற்சாமம்நாலு
தேக்கியேயனைக்கையிலேமுப்பூவப்பா
திறமாகக்கழஞ்சிறினாச்சேர்த்துப்போட்டு
வாக்கியேயில்லைசெய்துரவியிற்காய்ந்தால்
வளமானமுப்பதெருப்புடத்திற்போடே. (௨௯௩)

போடப்பாமுக்காலும்பொற்கையானால்
புகழாகநால்சாமமாட்டிக்கொண்டு
நாடப்பாயில்லைசெய்துரவியுலர்த்தி
நலமாகமுன்போலேபுடத்தைப்போடு
ஆடப்பாவாறினபின்னெடுத்துப்பாரு
அப்பனேமுருக்கம்பூப்போலாம்வற்ணம்
காடப்பாபணவெடைதானநுபானத்தில்
கருவாகத்தேன்கூட்டிக்கொள்ளுகொள்ளே. (௨௯௪

கொள்ளவேபாண்டுவகையெல்லாந்தீரும்
குறிஞானபித்தவெட்டைப்பித்தவாய்வு
நள்ளவேவாய்வென்றதெல்லாந்தீரும்
நாடாதேயரோசியங்களஃனதோடம்
விள்ளவேமயக்கமொடுவாந்திதீரும்
விருதானபித்தமெல்லாம்விழலாய்ப்போகும்
தள்ளவேயிஞ்சியென்றகுரணத்தில்
சாப்பிடவேதேன்கூட்டிச்சாரும்பாரோ. (௨௯௫)

## அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பாகாந்தத்தைதயிப்படியேசெய்யில்
பரிவானகாந்தமொடுசிவப்புமெத்த
சாரப்பாவநுபானமறிந்துகொண்டால்
தப்பாதுமூலவகையாவுந்தீரும்
சேரப்பாபித்தமெல்லாஞ்சிதறிப்போகும்
தேகத்தில்பாண்டுவெல்லாந்தீருந்தீரும்
ஆரப்பாதேனிலேகொண்டாயானால்
அருணனைப்போல்காந்தியாமறிந்துகொள்ளே. ()

கொள்ளவேயயக்காந்தச்செந்தூரங்கேளு
குறிப்பானரண்டையுந்தான்சுத்திசெய்து
நள்ளவேசமனாரண்டையுந்தான்கூட்டி
நலமானசாதிலிங்கஞ்சமனாய்க்கூட்டி
தள்ளவேவெண்காரங்கால்தான்கூட்டி
தயவானரசங்கால்தான்கெந்திசமனப்பா
விள்ளவேசுத்திசெய்துகலவத்திட்டு
விருதானபழச்சாற்றாற்சாமம்நாலே. (௨௬௭)

நாலாகமுப்பூவுங்கழஞ்சிரண்டு
நலமானபொற்றலையால்சாமம்நாலு
காலாகவனாத்தியில்லைரவியிற்காய்ந்தால்
கருவானவோட்டில்வைத்தோடுமூடி
சாலாகமுப்பதெருப்புடத்திற்போடு
தப்பாதுசெந்தூரமருணன்போலாம்
மாலாகப்பணவெடைதானநுபானத்தில்
மைந்தனேகொண்டுவரப்போம்நோய்கேளே.()

கேளப்பாபாண்டாறுங்கிராணியாறும்
கிருமையாம்பித்தமதுநாற்பதும்போம்
நாளப்பாவாய்வோடுவாதமெல்லாம்
நாடாதேயக்கினியாமந்தங்கேளு
சூளப்பாதாதுவெல்லாமுறுக்கதேறும்
சுகமாகவெளுத்தசடம்வண்டுபோலாம்
ஆளப்பாசுயத்தேனிற்கொண்டாயானால்
அணுகாதுபாண்டுவென்றரோகம்போமே(௨௬௯

போமப்பாகுலையொடுவாயுவெல்லாம்
பொல்லாதகெர்ப்பநோய்சொல்லாதோடும்
நாமப்பாவாந்தியொடுபொருமல்விம்மல்
நாடாதவுக்ஷீணமாம்வாய்வுதீரும்

தாமப்பாசேத்துமங்களெல்லாந்தீரும்
தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும்
வேமப்பாபத்தியங்கார்பித்தமெல்லாம்
வெகுசுருக்காய்த்தீருமடாவின்னங்கேளே. (௨௭௰)

திரிலோகசெந்தூரம்.

கேளப்பாதிரிலோகசெந்தூரந்தான்
கெடியானலோகமோடப்பிரேகங்காந்தம்
நாளப்பாமூன்றையுந்தான்சுத்திசெய்து
நல்மாகச்சமன்கூட்டிக்கலவத்திட்டு
தாளப்பாசுத்தித்தகெந்திசமன்கூட்டி
தப்பாமல்வாலைரசம்பாதிசேர்த்து
ஆளப்பாபழச்சாற்றால்சாமம்நாலு
அப்பனேயரைக்கையிலேபூநீறும்போடே. (௨௭௧)

போடப்பாருக்கழஞ்சிதூக்கியேதான்
பொற்றலையால்நால்சாமமரைத்துக்கொண்டு
நாடப்பாசெருப்படையால்சாமம்நாலு
நன்றானகுமரிச்சாறுசாமம்நாலு
தேடப்பாபில்லைசெய்தூரவியிற்போடு
திறமாகவோட்டில்வைத்தோடுமூடி
ஆடப்பாசீலைசெய்துபுடத்தைதப்போட்டு
ஆறியபின்னேயெடுத்தரைக்கக்கேளே. (௨௭௨)

கேளப்பாலிங்கமரைப்பலந்தான்கூட்டி
கெடியானகுமரிச்சாறுசாமமெட்டு
நாளப்பாவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால்
நன்றாகமுப்பதெருப்புடத்தைப்போடு
வேளப்பாசெந்தூரமருணன்போலாம்
வெகுசுருக்காய்சஞ்சீவிசூரணத்தில்
தாளப்பாபணவெடைதானெய்யிற்கொள்ளத்
தப்பாதுமேகநீர்தவறிப்போமே. (௨௭௩)

தவறிப்போம்பாண்டுவகையாவுந்தீரும்
தப்பாதுபித்தமென்றநாற்பதும்போம்
தவறிப்போமேகமென்றவிருபத்தொன்றும்
சாந்தமாம்வாயுவெல்லாமொழிந்துபோகும்
தவறிப்போமுட்சூடுமிருமலெல்லாம்
சந்திரன்போல்தேகமெல்லாங்குளிர்ச்சியாகும்
தவறிப்போம்பித்தத்தின்கோபமெல்லாம்
தண்ணுமடாவின்னமொன்றுசாற்றக்கேளே (௨௭௪

## பஞ்சலோகசெந்தூரம்.

சேளடாபஞ்சலோகசெந்தூரந்தான்
கெடியானதங்கமொடுவெள்ளிசெம்பு
நாளடாகாந்தமோடிரும்பில்வைத்து
நலமாகசுத்திசெய்துசமனுய்க்கூட்டி
வேளடாகெந்தகந்தான்ரட்டிப்பிட்டு
வெருளானசூதமனாவீரங்கால்தான்
ஆளடாமுப்பூவின்சுண்ணமொன்று
அப்பனேபழச்சாறுல்சாமம்நாலே. (௭௫)

நால்சாமமனாத்துமேயுலரவைத்து
நன்றாகவோட்டிலிட்டோடுமூடி
சீலானசீலைசெய்துமுழப்புடத்தில்
சென்றேதாறினபின்னெடுத்துக்கொண்டு
காலானகரிசாலைச்சாற்றிலாட்டிக்
கசகாமல்நால்சாமமனாத்துக்கொண்டு
வேலானமுழப்புடத்தில்செந்தூரமாகும்
விதமாகச்செருப்படைநாற்சாமமாட்டே. (௭௬)

ஆட்டியேமுழப்புடத்தில்செந்தூரந்தான்
அருணனைப்போனிறமாகுமெடுத்துக்கொண்டு
மூட்டியேதிரிகடுகில்பணந்தான்கொள்ள
மூதண்டமேதேன்கூட்டிமண்டலந்தான்
நாட்டியேவாயுவென்றதெண்பதும்போம்
நாடாதுபித்தத்தின்மூலந்தீரும்
காட்டியேசேத்துமங்களிருபதும்போம்
கருவாகவின்னமொன்றுகருதிக்கேளே. (௭௭)

## மண்டூரசெந்தூரம்.

கேளடாவாயிரந்தான்வருஷஞ்சென்று
கெடியானகிட்டமதுகொண்டுவந்து
தாளடாவாவிலீர்தன்னிலேதான்
தளமாகக்காய்ச்சியேதோய்ச்சுத்தோய்ச்சு
வேளடாபத்துவிசைதோய்ச்செடுத்து
விருதானகல்வத்திற்பொடியாச்செய்து
நாளடாபத்திலொன்றுகெந்திசூதம்
நலமானலிங்கமுப்பூவெண்காரங்கூட்டே. (௭௮)

கூட்டியேபழச்சாற்றில்புடந்தான்பத்து
கூசாதேகரிசாலைப்புடந்தான்பத்து
ஆட்டியேசெருப்படையின்புடந்தான்பத்து
அப்பனேசெம்பைச்சாறுபுடந்தான்பத்து

நீட்டியேயரசனுடபட்டைச்சாற்றில்
நேராகப்புடமஞ்சுபோட்டெடுத்து
காட்டியேசெந்தூரப்பொடிதான்செய்து
கலமானபரணிதனிலடைத்துக்கொள்ளே. (௨௭௧)

கொள்ளவேதிரிகடுகுதேனிலேதான்
கூசாதேபணம்ரண்டுக்கூட்டிக்கொள்ளே
விள்ளவேவிஷிப்பாண்டுகாமாலையாறும்
விருதானபாண்டுவகைகுடிபோமப்பா
துள்ளவேவயித்தமெல்லாங்கிழேசாடும்
துளமானசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
கள்ளவேகடல்புக்கிக்காலுதோடும்
கண்டாயோவெண்பாண்டங்கரும்பாண்டமாமே.

ஆமப்பாவரோசியங்களன்னதோடம்
அகலாதவாந்திவிக்கலகன்றுபோகும்
தாமப்பாவாயுவென்றதெல்லாம்போகும்
தலமானநீர்த்தோடநாடாதோடும்
காமப்பாவூறுமடாதேகமின்னும்
கலகலெனத்தேகமுழுதிறுகிப்போகும்
நாமப்பாகண்டபடிசொன்னோமின்ன
நலமானவப்பிரோகவகைசொல்வேனே. (௨௭௨)

அப்பிரகசெந்தூரம்.

சொல்லக்கேள்கிஷ்ணவப்பிரோகம்வாங்கி
சுறுக்காகக்காய்ச்சியேபாலிற்போட்டு
வல்லக்கேள்கழுவியதையெடுத்துக்கொண்டு
வாகானநெல்லோடப்பிரோகங்கூட்டி
நல்லக்கேள்காடியிலேபிசைந்தாயானால்
நலமானவப்பிரோகமிறங்கும்பாரு
மெல்லக்கேள்மறுநாள்தாலிதெளிவிறுத்து
விருதானவப்பிரோகப்ரவியிற்போட்டே. (௨௭௩)

போட்டப்பாவுலர்ந்தபின்பெடுத்துக்கொண்டு
புகழானகலுவத்திற்போட்டுநீயும்
ஆட்டப்பாபழச்சாற்றாலநாலுசாமம்
அப்பனேபத்திலொன்றுங்கெந்திகூட்டி
நாட்டப்பாபில்லைதட்டிரவிகண்டேதான்
நலமாகமுப்பதெருப்புடத்திற்போட்டு
நீட்டப்பாகெந்தியிட்டுப்பழச்சாற்றாலே
நேராகநால்சாமமரைத்துக்காட்டே. (௨௭௪)

காட்டியேரவிதனிலேகாய்ந்தபின்பு
கனமானவோட்டிலிட்டுப்படத்தைப்போடு
ஆட்டியேகலவத்திற்போட்டுநீயும்
அப்பனேகெந்தியிட்டுப்பழச்சாற்றாட்டி
பாட்டியேபத்துவிசைப்புடத்தைப்போடு
பாங்காய்பின்னெடுத்துக்கரிசாலைச்சாற்றில்
வாட்டியேபடம்பத்துப்போட்டெடுத்து
வாகானசெருப்படைச்சாற்விட்டிட்டாட்டே ()

ஆட்டியேயிருசாமமுலரவைத்து
அப்பனேபுடம்பத்துப்போட்டெடுத்து
நீட்டியேபொடுதலைச்சாறுபுடந்தால்பத்து
நேரானபொற்றலையிற்புடந்தானஞ்சு
காட்டியேசிறுசெருப்படியின்சாற்றால்
கசகாமற்புடமஞ்சுபோட்டெடுத்து
மாட்டியேமுருக்கம்பூச்சாற்றாலாட்டி
மைந்தனேபுடமைந்துபோட்டுக்கொள்ளே. (௨௮௫)

கொள்ளப்பாசெந்தூரமருணம்போலாம்
கொடிதானவனுபானமறிந்துகொள்ளு
விள்ளப்பாசயமெட்டுமீளையிருமல்
விருதானசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
கள்ளப்பாபறந்தோடுங்கடலேபுக்கும்
கருவானசஞ்சீவிகுரணத்தில்
அள்ளப்பாடணவெடைதான்தேனிற்கொள்ள
அற்றுப்போமேகநீரிழிவும்போமே. (௨௮௬)

போமப்பாதேகத்துள்மாந்தையெல்லாம்
போருமடாபிரமியநோயிருபதெல்லாம்
சாமப்பாவுட்குடுள்ளெரிவுதானும்
தளமானதேகமெல்லாங்குளிர்ச்சியாகும்
வேமப்பாவிந்தூறப்புஷ்டியாகும்
வெகுநாளையெலும்புருக்கிவிழலாய்ப்போகும்
காமப்பாகண்குளிருந்தேகமின்றும்
கருவானபற்பவகைசொல்லக்கேளே. (௨௮௭)

துருசுகுரு.

சொல்லக்கேள்புலத்தியனேபற்பத்துக்குச்
சுருக்கானகுருவொன்றுசூட்டக்கேளு
வல்லக்கேள்துருசுசுத்திபண்ணிக்கொண்டு
வகையாகமுப்பூநீர்மூன்றுநாள்தான்

அல்லக்கேள்சாரநீர்மூன்றுநாள்தான்
அழகாகரவியுலர்த்திப்பலந்தான்தூக்கு
வல்லக்கேள்வங்கத்தைக்கடுஞ்சுண்ணமூதி
வாகாகவெடைக்கெடைதான்கவசம்போடே. ()

இரசபற்பம்.

போடப்பாரவியிலேயேழுநாள்தான்
புகழாகக்காய்ந்தபின்புசுண்ணச்சீலை
நாடப்பாமூன்றுசுற்றிக்காயவைத்து
நலமானகாடையிலேகுருவுமாகும்
பாடப்பாசிமிழுக்குள்பதனம்பண்ணு
பறக்கிறதோர்சூதத்தில்பத்திலொன்றீ
நீடப்பாவாய்நீராலரைத்துப்பில்லை
நிசமாகரவியுலர்த்தியோட்டில்வையே. (உஅகூ)

வையப்பாமேல்கீழுங்கல்லுச்சுண்ணம்
வகையாகநடுவில்வில்லைவைத்துமூட்டி
செய்யப்பாசீலைதுமூன்றுசெய்து
திறமாகக்குக்குடத்திற்பற்பமாகும்
மெய்யப்பாரசபற்பம்பரணிதனிலடைத்து
விருதானநெய்தேனிற்பணந்தான்கொள்ள
கையப்பாகாலோடுமுடக்குச்சூலை
கண்காணுதோடுமடாவின்னங்கேளே. (உகூ0)

கேளடாசர்வாங்கவாதந்தீரும்
கெடியானகுன்மநோயெட்டுந்தீரும்
பாளடாவிசுவுமுதல்பறந்தேபோகும்
பறக்குமடாசன்னியென்றபதின்மூன்றுந்தான்
தேளடாகுத்தியதோர்கபாலசூலை
தெரிகெட்டேயோடுமடாசிரநோயெல்லாம்
வாளடாதேகமதிவலுத்துப்போகும்
மகத்தானகெற்பநோய்மாறுந்தானே. (உகூக)

தாளகபற்பம்.

மாறுமடாவின்னமொன்றுசொல்லக்கேளு
வகையானதாளகந்தான்சுத்திசெய்து
வீறுமடாரசபற்பந்துருசுநீறும்
விரகாகவாய்நீராலரைத்துக்கொண்டு
சாறுமடாசமன்தானுந்தாளகத்திலப்பிச்
சதுராகரவியுலர்த்திசுண்ணச்சீலை
சீறுமடாமூன்றுசெய்துசுண்ணத்தில்வைத்து
சிறப்பாகக்குக்குடத்தில்சிவன்போலாமே. ()

ஆமப்பாமால்தேவிபற்பந்தன்னை
அளவிலொருபணந்தூக்கித்தேனிற்கொள்ள
வேமப்பாக்ஷயமெட்டுமிளைப்போடீளை
விருதானசிலேஷ்மநோயெல்லாந்தீரும்
சாமப்பாபிரமியநோய்சாராதோடும்
சடத்திலேகெற்பநோய்சாராதோடும்
காமப்பாவெனும்புருக்கியஸ்திரிணங்கள்
கண்காணுதோடுமடாவின்னங்கேளு. (௨௯௩)

வங்கபற்பம்.

கேளடாவங்கத்தைச்சுத்திபண்ணி
கெடியாகலேசாகத்தகடுதட்டி
தாளடாதாளகமும்ரசமுங்கூட்டிச்
சமனுகவாய்நீராலரைத்துக்கொண்டு
வாளடாவங்கமென்றதகட்டிலேதான்
வளமாகப்பூசியேசமனாய்நீயும்
ஆளடாரவிமுகத்திலுலரப்போட்டு
அப்பனேசுண்ணம்புசிலைசுற்றே. (௨௯௪)

சுற்றியேசுண்ணம்புக்குள்ளேவைத்து
சுகமாகமுழப்புடத்தில்நீறிப்போகும்
மத்தியேவங்கமென்றபற்பந்தன்னை
வரிசையாய்த்திரிபலாதிச்சூரணத்தில்
குத்தியேபணவெடைதான்தேனிலப்பா
கொண்டுவரப்பத்துநாள்தீரும்நோய்கேள்
வற்றியேபிரமியங்கள்பிரமேகங்கள்
வளருகின்றவெனும்புருக்கிமாண்டுபோமே (௨௯௫)

மாண்டுபோங்கிரந்தியதுநூற்றுப்பத்தும்
வறட்சியொடுசொறிசிரங்குமாண்டுபோகும்
மாண்டுபோமேஊறல்படர்ந்தவூறல்
வகையானசிலவிடங்கள்மாறிப்போகும்
மாண்டுபோம்பெரும்பாடுவயிற்றுக்குத்தல்
மகத்தானபுகைச்சல்விழிமாறிப்போகும்
மாண்டுபோம்மேகமென்றசூலையெல்லாம்
வகையானநாகத்தின்பற்பங்கேளே. (௨௯௬)

நாகபற்பம்.

கேளப்பாநாகத்தைச்சுத்திபண்ணி
கெடியாகலேசாகப்பில்லைதட்டித்
தாளப்பாதாளகமும்வங்கபற்பம்
சமனுகநாகத்துக்கிடையேதாக்கி

வாளப்பாவாய்நீராலரைத்துக்கொண்டு
வன்மாகச்சீலைமேல்பூசிக்காய்ச்சி
நாளப்பாசுண்ணாம்புச்சீலைசுற்றி
சந்தமாஞ்சுண்ணாம்புக்குள்ளேவையே. (௨௯௮)

வைத்தப்பாமுழப்புடத்தில்நீறிப்போகும்
* வாசுகிதானீறியபின்சொல்லக்கேளு
கைத்தப்பாதிரிகடுகுதாளிசபத்திரி
கருவானலவுங்கமைந்துஞ்சமனாய்க்கூட்டிப்
பைத்தப்பாரவியில்வைத்துச்சூரணித்துப்
பதனுதேவடிகொண்டுவைத்துக்கொண்டே
எத்தப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள
எழுந்ததொருசிலேத்துமநோய்தொண்ணூற்றுறே.

* வாசுகி-நாகம்.

ஆறுனரோகமெல்லாமற்றுப்போகும்
அப்பனேவாதமென்றதெண்பதும்போம்
வீறுனபித்தமநாற்பதும்போம்
வெகுசுருக்காய்மேகமொடுசூலைதீரும்
நாறுனகுட்டமென்றதெட்டுந்தீரும்
நலமானகடிவிஷங்கள்சாராதோடும்
கூறுனகுறியெரிப்புபத்துந்தீரும்
குன்மமென்றசூலைமுதல்குடிப்போம்பாரே (௨௯௯

## தாம்பிரபற்பம்.

பாரப்பாதாம்பிரபற்பம்பழச்சாறுதன்னில்
பதனுதேபதினைஞ்சுதரமேசாய்த்து
நேரப்பாலேசாகத்தகடுதட்டி
நினைவாகநாகமுந்தாளகமுங்கூட்டி
சாரப்பாவாய்நீராலரைத்துக்கொண்டு
சமனகைத்தாம்பிரந்தனக்குப்பூசி
ஆரப்பாரவியுலர்த்திச்சுண்ணச்சீலை
அப்பனேசுற்றியேசுண்ணத்தில்வையே. (௩௱)

வைத்தப்பாகனபுடமாய்ப்போட்டெடுக்க
வாகானதாம்பிரம்பற்பமாகும்
கைத்தப்பாபோகாதுவெகுசுறுக்காம்
காணடாவனுபானமறிந்துபோடு
குத்தப்பாகுன்மமெட்டுஞ்சூலைபதினெட்டும்
குடிப்போகுந்திரிகடுகுந்தேனிற்கொள்ளச்
சித்தப்பாவிளையோடிருமலெல்லாஞ்
சிதறிப்போம்வெள்ளியுடபற்பங்கேளே. (௩௱௧)

வெள்ளிபற்பம்.

கேளப்பாவெள்ளியதுதகடுதட்டிக்
கெடியானரசபஸ்பம்வங்கபற்பம்
நாளப்பாநாகமொடுமூன்றுநேராய்
நலமானவாய்நீராலரைத்துக்கொண்டு
வேளப்பாவெள்ளிக்குச்சமனாய்ப்போடு
விருதானரவியுலர்த்திச்சில்லைசெய்து
சூளப்பாசுண்ணாம்புக்குள்ளேவைத்து
துடியாகமுழுப்புடத்தில்தூக்கிவாங்கே. (௩௱௨)
வாங்கியதோர்பற்பத்தைப்பதனம்பண்ணு
வகையாகப்பணவெடைதான்தேனிற்கொள்ளத்
தேங்கியதோர்கல்லடைப்புசதையடைப்பு
தீராதகிரிச்சினங்கள்தீருந்தீரும்
ஏங்கியதோர்காசமோடிளைப்புதீரும்
இளைக்குமேவிங்கப்புற்றுபோனிப்புற்று
பாங்கியேயரிகிரந்திமேகமெல்லாம்
பறக்குமடாவின்னமொருபற்பங்கேளே. (௩௱௩)

தங்கபற்பம்.

கேளப்பாதங்கமொருபலந்தான்வாங்கி
கிருபையாய்த்தகடுதட்டிசொல்லக்கேளு
நாளப்பாபழச்சாற்றில்பூங்காவியாற்றி
நலமாகத்தகட்டின்மேற்பூச்சிக்காய்ச்சி
தாளப்பாவைந்துதரங்காய்ச்சிக்கொண்டு
துளமாகவங்கபற்பம்நாகபற்பம்
தேளப்பாரசபற்பம்வீரம்வெள்ளைச்
சேர்சமனாயண்டத்தினீராலாட்டே. (௩௱௪)
ஆட்டியேசமனாகத்தகட்டிற்பூசி
அப்பனேயண்டத்தின்சுண்ணம்வைத்து
தீட்டியேமேல்மூடிச்சீலைசெய்து
நேராகமுழுப்புடத்தில்நீறிப்போகும்
காட்டியேகருத்தக்கால்வீரங்கால்கூட்டி
கனமானவண்டநீர்தன்னாலாட்டி
சாட்டியேரவியுலர்த்திஓட்டில்வைத்து
சாங்கமாய்முழுப்புடத்தில்தாக்கிவாங்கே. (௩௱௫)
வாங்கியேயெடுத்துப்பார்வெண்ணீறாகும்
வளமானதேன்நெய்சர்க்கரையிற்கொள்ள
சாங்கியேசன்னியென்றழலமெல்லாம்
தப்பாதுதோஷிமென்றவெழுந்தீரும்

நீங்கியேவலிப்பிசுவும்பறந்துபோகும்
நினைவுகெட்டசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
தேங்கியேவாதநோயெண்பதுந்தான்
சிதறிப்போம்பித்தமஃதொழிந்துபோமே (௫௱௬

ஒழிந்துபோம்பித்தவெட்டைகிராணிபெரும்பாடு
ஒழியாதபிரமியநோயொடுங்கிப்போகும்
ஒழிந்துபோங்குன்மமெட்டும்பாண்டோராறும்
உத்தமனேமேகசலக்கழிச்சல்தீரும்
ஒழிந்துபோஞ்சூலைமுதலிசுவுரோகம்
ஒஹோஹோகுட்டமெட்டுங்கடலேபுக்கும்
ஒழிந்துபோங்கிரந்தியொடுவெடிமேகந்தான்
உட்சுரங்கள்நீர்ச்சுருக்குமோடும்பாரே. (௫௱௭)

(வெண்காரஞ் சிலாசத்துகலங்கொம்புகல்நார்பற்பம்.)

பாரப்பாவெண்காரச்சிலாசத்துந்தான்
பாங்கானகலைக்கொம்புகல்நாருந்தான்
சேரப்பாசமனாகப்பொடித்துக்கொண்டு
சிறப்பானபருத்திதான்சமூலமெல்லாம்
நேரப்பாசுட்டதனைச்சாம்பலாக்கி
நினைவாகப்படியொன்றதளந்துகொண்டு
வாரப்பாநாலாறுபடிசலந்தான்
வாகாகக்கலக்கியதைமூடிவையே. (௫௱௮)

வைத்தப்பாநாலாநாள்தெளிவிறுத்து
வாகாகமுன்மருந்தில்விட்டேயாட்டி
கைத்தப்பாநால்சாமமரைத்துவில்லை
கனமானரவியில்வைத்துலரப்போட்டு
ஒத்தப்பாவோட்டில்வைத்தோடுமூடி
உத்தமனேசீலைகட்டிமுழப்புடத்திற்போடு
நீத்தப்பாநீறியதுவெள்ளையாகும்
நினைவாகப்பின்னுமந்தநீராலாட்டே. (௫௱௯)

ஆட்டையிலேசாரமதுகாசுபோடு
அடங்காதசூடனதுகாசுபோடு
நீட்டையிலேவீரமதுகாசுபோடு
நினைவாகப்பூநீறுகாசுபோடு
நாட்டையிலேநால்சாமமரைத்துக்கொண்டு
நலமாகப்பில்லைதட்டிரவியுலர்த்தி
சூட்டையிலேசுண்ணாம்புப்பொடியில்வைத்து
சுருக்காகமுழப்புடத்தில்சூட்டிவாங்கே. (௫௱௰)

வாங்கியேகறுத்தாக்காலண்டநீரால்
வளமாகவரைத்தொருபுடந்தான்போடு
தாங்கியேவெண்மையதுசங்குபோலாம்
தளமானலிங்கமதுசுத்திசெய்து
பாங்கியேபற்பத்திற்பாதிலிங்கம்
பச்சையாய்ச்சேர்த்துநீபொடியாய்ச்செய்து
தேங்கியேயிளநீரிற்பணந்தான்ரண்டு
தீர்க்கமாய்க்கொண்டுவரப்போம்நோய்கேளே ([illegible])

கேளப்பாபெருவயிறுமகோதரங்கள்
கிறிச்சினங்கள்கல்லடைப்புசதையடைப்பு
நீளப்பாநீரருகல்நீரொரிவுதானும்
நீடாதகவுசையொடுநீராம்பல்தானும்
ஆளப்பாநீர்ச்சுரப்புவுப்பிசங்கள்
அணுகாதுவயிற்றிலுள்ளநீர்கட்டும்போம்
தேளப்பாநீரருகல்துள்ளிவீழ்தல்
தீருமப்பாபவளமதுபற்பங்கேளே. (௩௱௰௨)

பவளபற்பம்.

கேளப்பாபவளமதுபலந்தானொன்று
கெடியானபீங்கானில்நொறுக்கிப்போட்டு
வேளப்பாபழச்சாறுவிட்டுநீயும்
விருதானநாழிகைதானறுபதானால்
நாளப்பாகழுவியதையெடுத்துக்கொண்டு
நலமானகர்ப்பூரசிலாசத்துத்தான்
தாளப்பாசமனாகக்கலவத்திட்டு
சார்வானபிரண்டைச்சாறதனாலாட்டே. (௩௱௰௩)

ஆட்டியேநாற்சாமம்பில்லைதட்டி
அப்பனேரவிபுலர்த்தியோட்டில்மூடி
நாட்டியேமுழப்புடத்தில்நீறும்பாரு
நன்றாகப்பின்னுமந்தச்சாற்றாலாட்டி
காட்டியேரவிபுலர்த்திப்புடத்தைப்போடு
கருவானபுளியாரைச்சாற்றாலாட்டி
தீட்டியேவிருசாமமரைத்துக்கொண்டு
தினைவாகப்புடம்போடப்பற்பமாமே. (௩௱௰௪)

ஆமப்பாபணவெடைதான்வெண்ணெயிலேகொள்ள
அடங்காதமேகமெல்லாமகன்றுபோகும்
வேமப்பாவெலும்புருக்கியஸ்திவேகம்
விருதானமதுமேகமெட்டும்போகும்.

தாமப்பாதேனிலேகொண்டாயானால்
    சகலரணமேலூறல்தவறிப்போகும்
தாமப்பாவாயுவெல்லாங்கீழேநோக்கும்
    தப்பாதுமேகத்தின்தினவுபோமே. (௫௱௰௫)

## வாதசுரக்கியாழம்.

போமப்பாசுரங்களறுபத்திலும்
    புகழாகவாதசுரமுப்பத்திரண்டு
ஆமப்பாபித்தசுரமிருபத்தொன்றாம்
    அளவானசேத்துமநோய்பதினென்றப்பா
நாமப்பாவகைமூன்றறுபத்திலும்
    நலமானவாதசுரக்கியாழங்கேளு
வேமப்பாசிறுதேக்குசுக்குதிப்பிலி
    விதமானசெவியமொடுகோஷ்டந்தானே. ௫௱௰௬

தானென்றதாராலப்பைதிப்பிலிமூலம்
    தளமானசித்திரமூலஞ்சங்குமூலம்
வேனென்றவெள்ளறுகுநிலவேம்போடு
    விருதானமுருக்கம்வேர்கழற்சிவேரும்
காலென்றகண்டங்கத்திரிபோராமுட்டி
    கருவானசிற்றரத்தைமாவிலிங்கம்வேரும்
தேனென்றசிறுகாஞ்சொரிபேராத்தைத்
    தெளிவானசதகுப்பைவிஷ்ணுகாந்திபாரே. ()

பாரப்பாவிந்தவகையிருபத்தொன்றும்
    பலம்வீதம்தூக்கியேயிடித்துநையச்
சேரப்பாவிருபத்தோர்பங்குபண்ணித்
    திறமாகவொருபங்குசட்டியிலிட்டு
வாரப்பாமூன்றுசேர்சலந்தான்விட்டு
    வளமானநாழிகைதான்முப்பதானால்
ஆரப்பாவடிப்பேற்றிக்கால்சேரானால்
    அப்பனேவடிக்கொண்டுபிஞ்ஞானில்வாரே. ()

வார்த்தப்பாவாதராட்சதன்குளிகை
    வளமாகப்பணயொன்றுபொடித்துப்போட்டு
தேத்தப்பாதேனதிலேகழஞ்சிகுத்தித்
    திறமாகவிருநேரங்கொடுத்தாயானால்
பார்த்தப்பாவாதசுரம்நடுக்குவாதம்
    பதறுகின்றநாளின்முறைபறந்துபோகும்
காத்தப்பாகடுப்புவலிகடலேபுக்கும்
    கருவானபித்தநோய்க்கியாழங்கேளே. (௫௱௰௯)

பித்தசுரக்கியாழம்.

கேளப்பாபித்தசுரமிருபத்தொன்றும்
கெடியாகத்தீருமடாகியாழங்கேளு
நாளப்பாவிலாமிச்சைசிறுகாஞ்சோரி
நலமானவில்வவேர்பாதிரிவேர்தானும்
ஆளப்பாவதிமதூரஞ்செவ்வல்லிகோட்டம்
அப்பனேநல்லூரிநிலையாவாரை
தேளப்பாசீரகமும்கொத்துமல்லி
திறமானதும்பைவேர்பேரீச்சங்காயே (௱௨௰)

காயோடுயானைத்திப்பிலிபுமப்பா
கருவானநெல்லிமுள்ளிசுக்கோடொக்கப்
பாயோடுபதினைந்துயலவிதந்தூக்கி
பக்குவமாயிடித்துநையப்பங்குசேரு
தாயோடுவிருபத்தோர்பங்குபண்ணி
தப்பாமலொருபங்குசட்டியிலிட்டு
சேயோடுசலமதிலேயூன்றுசேர்தான்
திறமாகவிட்டதிலேயடுப்பிலேற்றே. (௱௨௧)

எற்றப்பாநாழிகைதான்மூப்பதானால்
எல்மகனேகால்சேர்தானெடுத்துக்கொண்டு
சேர்த்தப்பாதேனதிலேகழஞ்சிகூட்டித்
திறமானகோரோசினைக்குளிகையொன்று
பார்த்தப்பாவிழைத்ததனையிருநேரந்தான்
பதறுமற்கொடுத்துவரப்பித்தசுரமெல்லாம்
காத்தப்பாகண்காணதோடிப்போகும்
கருவானநாவறட்சிகழன்றுபோமே. (௱௨௨)

போமப்பாநாக்கிலுள்ளமுள்ளதெல்லாம்
பொறுக்காதநீர்த்தாகம்போகுஞ்சொன்னேன்
நாமப்பாவுடம்பெரிவுகாந்தலெல்லாம்
நடுநடுங்கியோடுமடாவாயூறலெல்லாம்
சேமப்பாசிரசிலுள்ளபித்தமெல்லாம்
சீக்கிரத்திலிறங்கிவிடுஞ்சிரோபாரம்போம்
ஆமப்பாசேத்துமசுரம்பதினொன்றுந்தான்
அப்பனேதீருதற்குக்கியாழங்கேளே. (௱௨௩)

சேத்துமசுரக்கியாழம்.

கேளப்பாசுக்குதிப்பிலிகிராம்பு
கெடியானதூரால்பையக்கிராகாரம்
காளப்பாகருமுள்ளிகடுக்காயோடு
கனத்தவாடாதோடைகர்ப்பூரவள்ளி

நாளப்பாமுந்திரிகைகண்டங்கத்திரி
நலமானபதினென்றுவகையைக்கேளு
ஆளப்பாபலவிதம்நிறுத்துக்கொண்டு
அப்பனேயிடித்துநையப்பங்குகேளே. (௩௨௪)

பங்கென்னபதினைந்துபண்ணிக்கொண்டு
பக்குவமாயொருபங்குசட்டியிலிட்டு
பங்கென்னரண்டுபடிசலந்தான்வாரு
பதறுதேமுப்பதுநாழிகையூரினுக்கால்
பங்கென்னவடிப்பேற்றிக்கமலமாகப்
பதறுமல்கால்சேர்தானிறுத்துக்கொண்டு
பங்கென்னதேணிலேகழஞ்சுகுத்தி
பாரப்பாசந்திரோதயம்பணந்தான்போடே. ()

போட்டப்பாகோரோசினைகுளிகையொன்று
புகழாகக்கலக்கியிருநேரங்கொள்ளக்
காட்டப்பாகப்மெல்லாங்கீழேசாடும்
கனமானசேத்திமசுரம்காணாதோடும்
சேட்டப்பாவிருமலெல்லாம்க்ஷணத்தில்தீரும்
சிறுகடுப்புகுத்துவலிசேராதோடும்
காட்டப்பாவலியிசுவுங்கலங்கியோடும்
கருவானசேதியொன்றுசொல்லக்கேளே. (௩௨௬)

சன்னிபதின்மூன்றுக்கும்பெயர்.

கேளப்பாசன்னிவகைபதின்மூன்றுக்கும்
கெடியானநாமமதுசொல்லக்கேளு
நாளப்பாதாந்திரிகனந்தகனுமாகும்
நலமானசீதாங்கமுருத்திரதாகம்
வேளப்பாசித்தவிப்பிரமையோடு
விதமானகண்டகுபசங்கருணியாசம்
ஆளப்பாவிக்கனுதம்பக்கநேத்திரம்
அருளானரக்தஷ்டிவிருக்கிதாகமாமே. (௩௨௭)

தோஷமேழுக்கும்பெயர்.

ஆமப்பாபிரலாபமபினியாசம்
அப்பனேசன்னிவகைபதின்மூன்றுக்கும்
வேமப்பாதோடமென்றதேழுங்கேளும்
விருதானகிஷ்ணதோடம்ரத்ததோடம்
நாமப்பாநீர்தோடமஸ்திதோடம்
நலமானகொடிதோடம்வலிதோடந்தான்
சாமப்பாசையோகதோடத்தோடு
சதுரானதோடவகையேழுந்தானே. (௩௨௮)

காமனென்றசலவிவகைபதின்மேன்றூக்கும்
 தளமானதோஷவகையேழுக்குந்தான்
நாமனென்றமருந்துவகைமுன்னேசொன்னோம்
 நலமானசன்னிக்குத்தைலஞ்சொன்னோங்
காமனென்றமாத்திரையுங்கலிக்கஞ்சொன்னோம்
 கருவானவைத்தியத்தில்மன்னதையூன்றி
வாமனென்றவைத்தியத்தைப்பார்த்தாலுகில்
 மைந்தனேதன்வந்திரிக்கொப்பாம்பாரே. (௫௨௯)

கெந்திச்செந்தூரம்.

பாரப்பாசெந்தூரஞ்சொல்லக்கேளு
 பண்பானகெந்தியதைப்பலந்தான்வாங்கி
நேரப்பாவோட்டிவிட்டிருக்கும்போது
 நேரானரசம்பலந்தானுவிட்டே
சாரப்பாவறுத்தாக்கால்பற்பம்போலாம்
 சாதகமாய்ப்புதுச்செங்கல்பாக்குபோலுடைத்து
வாரப்பாபாண்டத்தில்போட்டுப்பின்பு
 வளமானகறியுப்புசேராதான்வாங்கே. (௫௩௰)

வாங்கியேமுன்பற்பங்கலுப்புக்கலந்து
 வாகாகப்பாண்டத்திநிற்றாவிநீயும்
தாங்கியேமேல்பானைகவிந்துமூடி
 தப்பாமலெழுசீலைமண்ணுசெய்து
சாங்கியேகாயனவத்தடுப்பிலேற்றிச்
 சாதகமாய்கமலகாடாக்கினியினாலே
தேங்கியேநாற்சாமமெரியிட்டாக்கால்
 திறமாகமேல்தூரில்பற்பமாமே. (௫௩௧)

ஆமப்பாருதபற்பம்பலந்தானு
 அப்பனேகெந்திபலமதாயுங்கூட்டி
நாமப்பாவரிதாரம்பலங்கால்தூக்கி
 நலமாகப்பொடிசெய்துகுப்பியிலேபாதி
வேமப்பாபோட்டதிலேயெழுசீலைசெய்து
 விருதானரவியிலேகாயப்போட்டு
தாமப்பாதாளிக்குள்நாலுவிரல்மணல்தான்
 தப்பாமல்பாதிமேல்குப்பிவையே. (௫௩௨)

வைத்தப்பாகழுத்தளவுமணலைக்கொட்டி
 வாகாகமுத்தீயுஞ்சாமம்நாலு
கைத்தப்பாவெரியிட்டேயாறிப்பார்த்தால்
 கசகாதுதேங்காய்போல்செந்தூரமாகும்

நைத்தப்பாவுடைத்தெடுத்துப்பதனம்பண்ணு
நலமானவியாதியெல்லாம்நாடாதோடும்
மைத்தப்பாசெந்தூரம்பலந்தானென்று
மைந்தனேமுன்பற்பம்பலந்தானாலே. (௫௫௩)

நாலானகெந்திபலமரைதான்போட்டு
நலமானதாரங்கால்பலமுமாகும்
காலானகலுவத்திற்பொடித்துநீயும்
கசகாமல்குப்பிக்குப்பாதிபோட்டு
சேலானசீலையோரேழுஞ்செய்து
திறமானவாய்க்குசெங்கல்தேய்த்துப்போட்டு
வாலானசீலையோரேழுஞ்செய்து
மைந்தனேவாலுகையிலடுப்பிலேற்றே. (௫௫௪)

ஏற்றியேநாற்சாமமுத்தீயாற்போட்டு
எடுத்துப்பார்செந்தூரமருணன்போலாம்
பாத்தியேயிப்படியேபத்துமுறைசெய்து
பாங்கானசெந்தூரமெடுத்துக்கொண்டு
தேத்தியேசெந்தூரம்பலந்தானாறு
திறமானபற்பமதுபலந்தானாறு
ஆத்தியேகெந்தியதுபலந்தான்ரண்டு
அப்பனேதாரமதுபலமரையுமாமே- (௫௫௫)

ஆமப்பாசிலைக்கால்தான்தாளகங்கால்தான்
அப்பனேகலுவத்திற்பொடித்துக்கொண்டு
நாமப்பாசெம்பரத்தம்பூச்சாற்றாலே
நலமானநாற்சாமமாட்டிக்கொண்டு
தாமப்பாபூவரசன்பூநாற்சாமம்
தப்பாமல்தக்காளிப்பழச்சாறுகேளு
சாமப்பாவிருசாமமாட்டிக்கொண்டு
சமர்த்தாகப்பொற்கையான்சாறுகேளே. (௫௫௬)

கேளப்பாசாமம்ரண்டாட்டிக்கொண்டு
கெடியானரோக்கதிலேபலமும்போட்டு
நாளப்பாவரைத்துலர்த்திப்பொடியாய்ச்செய்து
நலமானகுப்பியிலேயரைதான்போட்டு
வேளப்பாசீலையோரேழுசெய்து
வெகுசுறுக்காய்வாங்கிசெங்கல்தேய்த்துப்போட்டு
ஆளப்பாவாய்க்குமந்தச்சீலைசெய்து
அப்பனேவாலுகையிலேற்றியாட்டே. (௫௫௭

ஆட்டப்பாசாமம்நால்தீபமாக
அப்பனேசாமம்நால்கமலவன்னி

மூட்டப்பாகாடாக்கிசாமமெட்டு
மூதண்டதிருவாணிப்பூசைசெய்து
காட்டப்பாவாறினபின்னெடுத்துப்பாரு
கதிர்போலேசெந்தூரங்கண்கொள்ளாது
தீட்டப்பாலோகத்தில்நூற்றுக்கொன்று
திலக்குமடாவற்ணமதுபத்துத்தானே. (௫௫௮)

பத்தாகுந்தேகத்தில்குன்றியெடைதேனில்
பக்குவமாய்வருடமொன்றுகொண்டாயானால்
வித்தாகும்வித்துவதுகீழ்நோக்காது
விட்டுவிட்டுசரீரத்தோர்வாசிக்கட்டும்
அத்தாகும்ஸ்திரீகளுடனுபோகித்தால்
அப்பனேநூறுபேர்தோற்றுப்போவார்
சித்தாகுந்தேகமதுசிவந்துமின்னும்
செடமிறுகிவயிரம்போலாகும்பாரே. (௫௫௯)

காளகண்டமேகநாராயணசெந்தூரம்.

பாரப்பாகாளகண்டமேகநாராயணன்
பரிவானசெந்தூரஞ்சொல்லக்கேளு
சேரப்பாரசபற்பம்பலந்தானெட்டு
திறமானகெந்தகமோபலந்தானப்பா
வாரப்பாதாளகமோபலந்தானொன்று
வளமானசிலையனாசெந்தூரமனாதான்
ஆரப்பாலிங்கங்கால்வெள்ளிகால்தான்
அப்பனேவெள்ளீயம்பலந்தானென்றே. (௫௬௦)

ஒன்றானநாகமனாவங்கங்கால்தான்
உத்தமனேசெம்பதுவுங்கழஞ்சிரண்டு
நன்றானதங்கமதுகழஞ்சியொன்று
நாட்டப்பாநாபியொருபலமும்நீதான்
குன்றாமற்பொடிசெய்தேயனாப்புகேளு
கூறானபொற்கலைபான்சாமம்நாலு
சென்றானகுமரிப்பூச்சாமம்நாலு
சேர்முருக்கம்பூச்சாறுசாமம்ரண்டே. (௫௬௧)

ரெண்டானபாதிரிப்பூச்சாறுசாமம்
ரெண்டாகும்பழச்சாற்றில்செம்பரத்தம்பூப்போட்டு
வென்றாகவெருத்தபின்பெறிந்துபோட்டு
விருதாகவிருசாமமெடுத்தேயாட்டு
சென்றாகாவியுலர்த்திப்பொடிதான்செய்து
சேரப்பாகுப்பிக்குச்சிலைசெய்து

விலீநப்பாகுப்பிக்குப்பாநிபோட்டு
விருதாகவாய்மூடிசீலைசெய்யே. (௧௪௨)
செய்தப்பாவாலுகையிலடுப்பிலேற்றித்
திறமாகத்தீபாக்கினியெட்டுசாமம்
செய்தப்பாகமலமோரெட்டுசாமம்
தீர்க்கமாய்க்காடாக்கினிசாமமெட்டு
செய்தப்பாதீயாற்றியீசானியத்தில்
சேர்க்கறியுமதுவோடுபூசைபண்ணு
செய்தப்பாகுப்பிதனைவாங்கிப்பாரு
திறமாகக்கருஞ்சிவப்பாய்ச்செந்தூரமாமே. ()
ஆமப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள
அணுகாதுகுன்மமெட்டும்பீலியாறும்
போமப்பாபெருவயிறுமகோதரங்கள்
பொல்லாதசலதைவிம்மல்நீரருக்கல்
ஓமப்பால்விளாத்தவொருசோகைபாண்டு
கனமானநீர்க்குத்தல்காணுதோடும்
சாமப்பாவக்கினியாமந்தமெல்லாம்
சண்ணுண்டுபோகுமடாசேதிகேளே. (௧௪௪)

ரசலோகசெந்தூரம்.

சேதியொன்றுசொல்லுகிறேன்புலத்தியனேயையா
திறமானரசலோகசெந்தூரந்தான்
ஆதியென்றசூதபற்பம்பலந்தான்ரண்டு
அப்பனேலோகமொன்றுகாந்தமரைகூட்டி
வாதியாம்லிங்கமரைவெண்காரமரைதான்
வளமாகசாரங்கால்நாபிகால்தான்
காதியென்றகெந்தியிலுல்செந்தூரங்கால்தான்
கனமாகப்பொடிசெய்தேயரைப்புகேளே (௧௪௫)
கேளப்பாபழச்சாற்றால்சாமந்தானு
கெடியாகப்பொற்லைகயான்சாமம்ரண்டு
நாளப்பாசெருப்புக்கால்சாமம்ரண்டு
நலமானகுமரிப்பூசாமம்ரண்டு
தாளப்பாசெம்முள்ளிசாமமொன்று
தளமாகவேயறாத்துரவியிற்போட்டு
வேளப்பாசெய்ததனைக்குப்பிக்கேற்றி
விதமானவாய்மூடிவாலுகையில்வையே. (௧௪௬)
வைத்தப்பாவடுப்பேற்றியெட்டுசாமம்
வாகாகத்தீபாக்கினிகமலங்கேளு
கைத்தப்பாசாமமெட்டெரித்துக்கொண்டு
கனமானகாடாக்கினிசாமமெட்டு

வித்தப்பாவாறவிட்டுடைத்துவாங்கு
விருதாகசெங்கல்நிறமாகக்காணும்
பைத்தப்பாபொடிசெய்துபணந்தேனிலுண்ணப்
பறக்குமடாகாமாலைபாண்டுதானே. (௫௪௭)

தானென்றபித்தநோய்தலைகெட்டோடும்
தப்பாதுவாதமென்றதென்பதும்போம்
நானென்றசன்னியெல்லாம்நாடாதோடும்
நலமானவாயுவென்றதெல்லாந்தீரும்
கானென்றதலையிலுள்ளவியாதியெல்லாம்
கடல்புக்குங்குலைபதினெட்டுந்தீரும்
மானென்றதேனிலேபத்துநாள்கொள்ள
மதுமேகந்தீருமடாவின்னங்கேளே. (௫௪௮

ரசகர்ப்பூரபற்பம்.

கேளடாரசகர்ப்பூரப்பற்பங்கேளு
கிருபையாசுத்தரசஞ்சுத்திசெய்து
நாளடாகல்லுப்புகுகைபோற்பண்ணி
நலமானரவியிலேகாயப்போட்டு
தேளடாசட்டிக்குளுப்பைப்போட்டு
திறமானமேற்சட்டிக்கொண்டுமூடு
தாளடாவெழுசீலைமண்ணுஞ்செய்து
தளமானரவியிலேகாயப்போடே. (௫௪௯)

போட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாகப்
புகழாகநாற்சாமமெரித்தாயானால்
நீட்டப்பாதேங்காய்போலிறுகிநிற்கும்
நிசமாகவதையெடுத்துத்தூக்கிக்கொண்டு
காட்டப்பாபலநாலுபீங்கானுக்குள்
கருவானவெற்றிலையின்சாற்றில்விட்டு
ஆட்டப்பாரவிமுகத்திலுலர்ந்தபின்பு
அப்பனேநீயைஞ்சுதரம்சாறுவிட்டே. (௫௫௰)

விட்டப்பாரவியிலேயுலர்ந்தபின்பு
விருதாகபொடிபண்ணிக்குப்பிக்கிட்டு
விட்டப்பாவளைவாசிமட்டம்போட்டு
விளக்கியேயெழுசீலைமண்ணுஞ்செய்து
விட்டப்பாவாலுகையில்வைத்துநன்றாய்
விதமாகவெண்சாமமுத்தீயிட்டு
விட்டப்பாவாறியபின்னுடைத்துப்பாரு
விதமானபற்பமதையெடுத்துக்கொள்ளே (௫௫௧)

தொள்ளப்பாநாலுபலமெடுத்துக்கொண்டு
குறிப்பானபற்பமதுபலம்நால்தூக்கி
தள்ளப்பாபொடிசெய்துவெற்றிலையின்சாறு
தலமாகவிட்டதிலேரவியுலர்த்தி
விள்ளப்பாமேருவிலேயனாவாசிபோட்டு
விருதானவாலுகையிலடுப்பிலேற்றி
கள்ளப்பாமுத்தீயுஞ்சாமமெட்டு
கசகாமலெடுத்தாறியபின்னுடைத்துப்பாரே. ()

பாரப்பாமுன்போலேபத்துக்குத்தொந்தம்
பரிவாகவெடுத்தெடுத்துப்பதனம்பண்ணி
சாரப்பாபணவெடைதானெய்த்தேனிற்றான்
சார்வாகமண்டலங்கால்கொண்டாயானால்
சேரப்பாகுலைபதினெட்டுந்தீரும்
தினவானகிரந்திபுண்கள்புரைகள்தீரும்
வேரப்பாமேலூறலஸ்திரணமெல்லாம்
வெவ்வேறாய்த்தீருமடாவின்னங்கேளே. (௫௰௩)

காரீயசெந்தூரம்:

கேளப்பாகாரீயசெந்தூரந்தான்
கெடியானகாரீயம்பலந்தானாலு
நாளப்பாபழச்சாற்றிலுருக்கிச்சாய்த்து
நலமானநல்லெண்ணெய்கோமயத்திலேழு
தாளப்பாகோசலத்தில்கொள்ளுச்சாற்றில்
தளமானகாடியிலேயுருக்கிச்சாய்த்து
ஆளப்பாவகையொன்றுக்கேழுதரஞ்சாய்த்து
அப்பனேபலநாற்சட்டியிலேவையே. (௫௰௪)

வைத்தப்பாரசமதுதான்கால்தான்கூட்டி
வளமாகவுருக்கயிலாவாளைப்பஞ்சாங்கம்
தைத்ததிலேநறுக்கியேயிடித்துக்கொண்டு
தளமாகப்போட்டதிலேவறுப்பாயப்பா
நைத்ததிலேநாற்சாமம்வறுத்தாயானால்
நலமானசெந்தூரமருணன்போலாம்
பைத்ததிலேசெந்தூரமெடுத்துக்கொண்டு
பத்தியமாய்ச்சீசாவிற்பதமதாமே. (௫௰௫)

ஆமப்பாநாற்சாமமருந்துப்போட்டு
அப்பனேகால்சாமஞ்சும்மாய்வறுத்து
தாமப்பாசெந்தூரமெடுத்துக்கொண்டு
தளமானதேனெய்யில்பணந்தானுண்ண
போமப்பாபிரமியநோய்பெருப்பாடெல்லாம்

பொல்லாதகிறிச்சினங்கள்போகுஞ்சொன்னேன்
காமப்பாநீரிழிவுகடமேலடுக்கும்
கலங்காதேகல்லடைப்புதெறிக்கும்பாரே. (௯௱௬)

பூரணசந்திரோதயம்.

யாரப்பாபூரணச்சந்திரோதயமென்றால்
பறக்குமடாவியாதியெல்லாஞ்சொல்லக்கேளு
தாரப்பாரசமிரண்டுசிலையளாக்கால்
தவறாமல்மால்தேவியளையுங்கூட்டி
வேரப்பாலிங்கமனாசெந்தூரமனாதான்
வெகுசுருக்காய்ரேக்கதுவும்பலந்தானென்று
காரப்பாசரக்கெல்லாங்கல்வத்திட்டு
கசகாமற்பொடித்துமனமொன்றுபட்டே. (௯௱௭)
ஒன்றப்பாவனைப்புக்குச்சாறுகேளு
உத்தமனேபழச்சாற்றில்செம்பரத்தம்பூபோட்டு
கன்றப்பாவெளுத்ததிலேநாள்தான்சென்றால்
கலங்காதேபிழிந்தெறிந்துமருந்தில்விட்டு
வின்றப்பாசர்மமேயிருபதாகும்
வேளாதபொற்கலயானிருபத்தொன்றும்
செவ்றப்பாவளைக்கயிமேல்துருகுருகேளு
திறமாகபணவெடைதான்கூடப்போட்டே. (௯௱௮)
போட்டப்பாவியுளர்த்திப்பொடிதான்செய்து
புகழானமேருவிலையனாவாசிம்போட்டு
காட்டப்பாசிலையோரேழுசெய்து
கனமானவாலுகையிலடுப்பிலேற்றி
நீட்டப்பாதீபமோரெட்டுச்சாமம்
நிலையானகமலவன்னியெட்டுச்சாமம்
ஆட்டப்பாகாடாக்கினியாறுசாமம்
அப்பனேசலாகையிட்டுக்கிண்டிப்பாரே. (௯௱௯)
யாரப்பாசலாகைமுகங்கறுப்புகண்டால்
பக்குவமென்றேதீயையாற்றிப்போட்டு
சேரப்பாபூரணச்சந்திரனைப்போலே
திறமாகக்காந்தியதாயிருக்கும்பாரு
வாரப்பாவுடைத்தெடுத்துபலமேதூக்கி
வகையாகப்பொடிசெய்துகஸ்தூரிகேளு
ஆரப்பாகழஞ்சியொன்றுகூடப்போடு
அப்பனேகோரோசினைதான்கழஞ்சியாமே. (௯௱௰
ஆமப்பாகூடவிட்டுப்பொடிதான்செய்து
அப்பனேபரணிதனிலடைத்துக்கொண்டு
சேமப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள

தீராதசன்னியென்றமூலந்தீரும்
வேமப்பாதோஷிமென்றதேழுந்தீரும்
வெருளாதசேத்துமநோய்தொண்ணூற்றாறும்
வாமப்பாநீந்நோக்கிவலியுந்தேகம்
வளமானகுட்பிவைத்தியானஞ்செய்யே (௫௱௧)

செய்யவேபூரணசந்திரோதயமென்றால்
திடுக்கிடுமேகரமென்றதறுபத்திநாலும்
கையவேகாசமெட்டுங்கடலேபக்கும்
கணமானமேகநோயிருபத்தொன்றும்
பையவேபிரமியங்களகன்றுபோகும்
பாரப்பாதேகமதுசிவந்துமின்னும்
வையவேவருடமொன்றுபணவெடைதான்கொள்ள
மகத்தானதேகமதுசந்திரன்போலாமே. (௭௱௨)

ஆமப்பாகோங்கின்பூச்சூரணமேசெய்து
அப்பனேபூரணசந்திரோதயம்வைத்து
நாமப்பாமண்டலந்தான்மூன்றுசென்றால்
நலமானதேகமேயருணன்போலாம்
போமப்பாசரஸ்வதிதானிருத்தஞ்செய்வாள்
புகழானசுயமெல்லாம்பாடலாங்கேள்
காமப்பாலிறுகுமடாசையோகத்தில்
கருவானவிந்துவதுவீழாதென்னே. (௫௱௩)

என்னவேபத்தியந்தான்பாலுஞ்சோறும்
இதமானவாவினெய்சிறுகீரையாகும்
பன்னவேபொன்னாங்காணிபுளியாரையாகும்
பக்குவமாய்தேனொடுசர்க்கரையுமாகும்
கன்னவேமிளகுசீரகமுமாகும்
கறியொன்றால்முள்ளித்துதூளையுமாகும்
தன்னவேபருப்புக்குள்பாசிபயறுமாகும்
தளமானசந்தனத்துத்தயிலமூழ்கே. (௫௱௪)

மூழ்கவேவியாதியெல்லாங்கடலேபக்கும்
முக்கியமாயகத்தியற்குச்செபந்தான்பண்ணு
தேகிழவேதியானமெந்நேரமுமாய்ப்பண்ணு
நேராகத்தேவியைத்தான்தியானம்பண்ணு
திகழவேசிவன்தனையேபூசைபண்ணு
தீராதவியாதியெல்லாந்தவறண்டேபோம்
மகிழவேவைத்தியஞ்செய்தானாகில்
வையகத்திலீசனவனுகுமூற்றே. (௫௱௫)

வைத்தியரத்தினச்சுருக்கம்-முற்றியது.